# கையேடு

# நிலைமாற்று நீதி பொறிமுறை

*இலங்கை நிரந்தர அமைதிக்கான நிலைமாற்று நீதி விடயத்தில் இளம் சமூகத்தினரின் பங்கு*

ஒழுங்கிணைப்பு

ශ්‍රී ලංකා ජාතික සාම මණ්ඩලය
இலங்கை தேசிய சமாதானப் பேரவை
National Peace Council of Sri Lanka

*அனுசரணை*

United Nations Peacebuilding
Peacebuilding Fund

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கையேடு: மனித உரிமைகளும் நிலைமாற்றத்திற்கான நீதியும்.[1]

பொருத்தமான நிலவரங்களின் போது நிலைமாற்றத்திற்கான செய்முறைகளின் வாயிலாகவும், தேசிய மற்றும் சர்வதேச முயற்சிகளின் வாயிலாகவும் மனித உரிமை மீறல்களை முடிவுக்கு கொண்டுவரவும், முரண்பாடு ஏற்பட்ட மற்றும் முரண்பாடு நீங்கிய நிலவரங்களில் நீதி மற்றும் சட்டத்தின் வாயிலான ஆட்சியை நிலைநிறுத்துவதற்காகவும் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவை, மனித உரிமைகளையும் மற்றும் நிலைமாற்றத்திற்கான நீதியையும் மீள உறுதி செய்ய 2009 ஆம் ஆண்டு ஒரு தீர்மானத்தை வெளியிட்டது. களநிலையிலிருந்து தோற்றம் பெற்ற பல்வேறு தத்துவங்களையும் இத்தீர்மானம் மீள உறுதி செய்துள்ளது.

தேசிய மட்டத்திலும் உள்ளூர் மட்டத்திலும் ஏற்படக்கூடிய மனித உரிமை மீறல்களை தவிர்ப்பதற்கான நிலைமாற்ற உபாயங்களை விருத்தி செய்ய வேண்டியதன் தேவை, சமூக மட்டத்தில் ஒன்றியிருத்தலை (social cohesion) உறுதி செய்தல், உடமை உணர்வு (ownership) மற்றும் யாவற்றையும் உள்ளடக்கிய (inclusiveness) நிலை என்பவற்றை இத்தீர்மானம் வலியுறுத்தியுள்ளது. இவற்றோடு குற்ற வழக்குத் தொடருதல், (prosecutions), இழப்பீடு வழங்குதல் (reparations) நடந்தவை பற்றிய உண்மை அறிதல் (truth - seeking) மற்றும் நிறுவன ரீதியான சீர்திருத்தம் என்பன உள்ளடங்கலாக நீதி சார் மற்றும் நீதி சாரா நடவடிக்கைகளை உள்ளடக்கியதான ஒரு முழுமையான அணுகுமுறையினை இத்தீர்மானம் வற்புறுத்துவதாகவும் காணப்படுகிறது.

தீர்மானம் பின்வருவனவற்றை மீள உறுதி செய்துள்ளது:

- "நடந்தவை பற்றிய உண்மையை அறிவதற்கான செய்முறைகள்... கடந்த கால மனித உரிமை மீறல்களின் பாங்குகள், அவற்றிற்கான காரணங்கள் மற்றும் விளைவுகள் பற்றி விசாரணை செய்வதினால் (investigation) பின்னர் மேற்கொள்ளப்படும் நீதி செய்முறைகளுக்கு இவை உதவியாக இருக்கும்..."

- குற்றமிழைத்துவிட்டு தண்டனை பெறாது பாதுகாக்கப்படுதலை எதிர்த்துப் போராடுதல் தொடர்பில் திட்டவட்டமாகவும் ஈடுபாட்டுடனும் செயற்படுவதன் அடிப்படையில் தேசிய மட்டத்தில் குற்ற வழக்குத் தொடரும் ஆற்றல்களை விருத்தி செய்ய வேண்டிய தேவையுண்டு...

- மனித உரிமைகளை முற்றாக மீறியமை மற்றும் பாரதூரமான வகையில் சர்வதேச மனிதாபிமான சட்டங்களை மீறியமை என்பவற்றிற்கு பொறுப்பானவர்களுக்கு எதிராக குற்ற வழக்குத் தொடரும் பொறுப்பு அந்நாட்டு அரசாங்கங்களுக்கு உண்டு...

- "ஐக்கிய நாடுகள் சபையினால் வலிமைப்படுத்தப்பட்ட (உத்தரவாதமளிக்கப்பட்ட) சமாதான ஒப்பந்தங்களில் இன ஒழிப்பு, மனித இனத்திற்கு எதிரான குற்றங்கள், யுத்தக் குற்றங்கள் மற்றும் முற்றாக மனித உரிமைகளை மீறியமை போன்ற குற்றம் புரிந்தவர்களுக்கு ஒருபோதும் மன்னிப்பளிக்க உறுதியளிக்கப்படமாட்டாது..."

[1] பின்வருவனவற்றிலிருந்து எடுத்தாளப்பட்டது - Promotion and Protection of All Human Rights, Civil, Political, Economic, Social and Cultural Rights, Including the Right to Development, Resolution adopted by the Human Rights Council, 12/11. Human rights and transitional justice, A/HRC/RES/12/11, 1 October 2009.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- "நீதி, சமாதானம், சனநாயகம் மற்றும் அபிவிருத்தி என்பன பரஸ்பரமாக ஒன்றையொன்று வலிமைப்படுத்துவனவாகும்..."

- 13 "இலகுவில் பாதிப்புக்குள்ளாகக் கூடிய குழுக்களுக்கு இவற்றை வழங்குவதன் முக்கியத்துவம்... அதாவது இவ்வாறானவற்றை (நீதி, நியாயம்) வழங்குவதன் மூலம் பாராபட்சப்படுத்தல் (போன்ற)... முரண்பாட்டிற்கும், அனைத்து மனித உரிமை மீறல்களுக்கும் மூலகாரணமானவற்றைப் பொறுத்து ஆவன செய்தல்..."

- 14 "(அ) பாதிக்கப்பட்டவர்களது ஒன்றியங்கள்... சிவில் சமூகம்... (ஆ) பெண்கள் இயக்கங்கள் (மற்றும்) (இ) கட்டுப்பாட்டு வரம்புகளற்றதும் சுதந்திரமானதுமான ஊடகம்... என்பவற்றால் நிலைமாற்றத்திற்குரிய நீதியின் இலக்குகளை கைகூடச் செய்தல், சமூகம் மற்றும் சட்டத்தின் வாயிலான ஆட்சியையும், பொறுப்புக் கூறுதலையும் ஊக்குவித்தல் என்பன தொடர்பில் ஆற்றிய பங்கின் முக்கியத்துவம்..."

- "சர்வதேச மனித உரிமைகள் சட்டத்திற்கு உட்பட்ட வகையில் பாதிக்கப்பட்டவர்களினதும் குற்றஞ் சாட்டப்பட்டவர்களினதும் உரிமைகள் மதிக்கப்பட வேண்டியதன் தேவை..."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கையேடு: நிலைத்து நிற்கக்கூடிய நீதி தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் வழங்கியுள்ள வழிகாட்டல்கள். (2)**

2010 ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஐ.நா. சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூன் அவர்கள் நிலைமாற்றத்திற்குரிய நீதி தொடர்பிலான ஐக்கிய நாடுகள் சபையின் அணுகுமுறை பற்றி ஒரு குறிப்பினை வெளியிட்டிருந்தார். அதில் "சட்டத்தின் வாயிலான ஆட்சியை வலுப்படுத்துவதற்கான ஐக்கிய நாடுகள் சபையின் முக்கியமானதோர் வரைச்சட்டத்தில் (framework)" பத்து வழிகாட்டல் தத்துவங்கள் உள்ளடக்கப்பட்டிருந்தன.

- நிலைமாற்றத்திற்கான நீதிச் செய்முறைகளையும் அவற்றிற்கான பொறிமுறைகளையும் வடிவமைக்கும் போதும் (உருவாக்கும் போதும்), நடைமுறைப்படுத்தும் போதும் அவற்றை சர்வதேச உருமாதிரிகளுடனும் (norms) நியமங்களுடனும் ஒத்துப்போகும் வகையிலும் ஆதரிப்பதாகவும், ஊக்குவிப்பதாகவும் இருத்தல்.

- நிலைமாற்றத்திற்கான நீதிச் செய்முறைகளையும் அவற்றிற்கான பொறிமுறைகளையும் வரையும் போது (உருவாக்கும் போது) அரசியல் நிலவரங்களை கவனத்திற் கொள்ளுதல்.

- குறித்த நாட்டினது நிலவரங்களில் காணப்படும் தனிப்பட்ட பண்புகளுக்கு ஏற்றவகையில் நிலைமாற்றத்திற்கான நீதிக்காக அடிப்படையில் உதவும் வகையில் அமைவதுடன் முழுச்சமூகத்திலும் நிலைமாற்றத்திற்கான நீதிச் செய்முறைகளை கொண்டு நடாத்தி செயற்படுத்துவதற்காக நாட்டின் தேசிய கொள்திறனை (capacity) வலுப்படுத்த ஆவன செய்தல் (வேண்டும்).

- பெண்களின் உரிமைகளை உறுதி செய்வதற்காக கடும் பிரயத்தனத்தை மேற்கொள்ளுதல்.

- சிறுவர் நலன்கள் தொடர்பான அணுகுமுறைகளுக்கு ஆதரவளித்தல்.

- நிலைமாற்றத்திற்கான நீதிச் செய்முறைகளையும் அவற்றிற்கான பொறிமுறைகளையும் வரையும் போதும் (உருவாக்கும் போதும்) அவற்றை நடைமுறைப்படுத்தும் போதும் பாதிக்கப்பட்டவர்களை மையமாகக் கொள்வதனை உறுதி செய்தல்.

- சட்டத்தின் வாயிலான ஆட்சிக்கான முயற்சிகளின் பரந்துபட்ட பண்புகளுடன் நிலைமாற்றத்திற்கான நீதி தொடர்பிலான நிகழ்ச்சி நிரல்களை ஒருங்கிணைத்து செயற்படுத்தல்.

- நிலைமாற்றத்திற்கான நீதிச் செய்முறைகளையும் அவற்றிற்கான பொறிமுறைகளையும் பொருத்தமானதோர் முழுமையான மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட அணுகுமுறையினூடாக செயற்படுத்தல்.

- நில்லமாற்றத்திற்கான நீதிச் செய்முறைகளும் அவற்றிற்கான பொறிமுறைகளும் கடந்தகாலங்களில் இடம்பெற்ற முரண்பாட்டிற்கும் அடக்குமுறை ஆட்சிக்கும் பொறுப்பான மூலக் காரணங்களை கவனத்திற் கொண்டதாகவும், மீறப்படும் அனைத்து உரிமைகள் தொடர்பாகவும், ஆவன செய்யும் வகையிலும் அமைவதனை உறுதி செய்ய கடும் பிரயத்தனம் செய்தல்.

- ஆற்றல் வாய்ந்த ஒருங்கிணைப்பு மற்றும் பங்காளிகளின் பயன்பாடு என்பன.

(2) பின்வருவனவற்றிலிருந்து எடுத்தாளப்பட்டது - "Guidance Note of the Secretary - General: United Nations Approach to Transitional Justice" March 2010; http://www.unrol.org/Tj_Guidance_note_March_2010FINAL.pdf



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கையேடு: உண்மையறிவதற்கான உரிமை

உண்மையறிவதற்கான உரிமை பற்றி ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகளுக்கான உயர் ஆணையாளர் நவனீதம்பிள்ளை அவர்கள் பின்வருமாறு விளக்கியுள்ளார்.

இடம்பெற்ற சம்பவங்கள் பற்றி தெரிய வந்தபோது அவை பற்றி முழுமையாகவும், நிறைவுடனும் உண்மையை தெரிந்து கொள்வதே உண்மையறிவது பற்றிய உரிமையாகும்... இடம்பெற்ற மீறல்களின் குறிப்பான சூழ்நிலை, அம்மீறல்களில் பங்குபற்றியவர்கள் யார்?, குறித்த மீறல் இடம் பெற்றதோடு தொடர்பான சந்தர்ப்பச் சூழ்நிலை என்பவற்றுடன் அதற்கான காரணம் என்பன என்பது பற்றிய உண்மைகளை அறிந்து கொள்வதாகும். பலவந்தமாக காணமற்போனோர் மற்றும் காணாதிருப்பவர்கள் என்பவர்கள் தொடர்பில் அவர்கள் கதி என்னவாயிற்று, பாதிக்கப்பட்டவர்கள் தற்போது எங்கிருக்கின்றனர் என்பன பற்றி தெரிந்து கொள்வதும் இவ்வுரிமையிலடங்குனவாகும்.[3]

2009 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் முதலாம் திகதி ஐ.நா.சபையின் மனித உரிமைகள் பேரவை உண்மையறிவதற்கான உரிமை தொடர்பில் தீர்மானம் ஒன்றை வெளியிட்டது[4]

மனித உரிமைகள் மீறல்களுக்காளாகி பாதிக்கப்பட்டவர்களது உரிமைகள் மற்றும் அவ்வாறு பாதிக்கப்பட்டவர்களது குடும்பத்தினரும், சமுகத்தினரும் இடம் பெற்ற மீறல்கள் பற்றிய உண்மைகளை அறிந்து கொள்வதற்கான உரிமையினது முக்கியத்துவம் பற்றி சர்வதேச சமூகம் அங்கீகரிக்க வேண்டியதன் அவசியம் பற்றி அத்தீர்மானம் வலியுறுத்தியிருந்தது. அத்தோடு உண்மையறிவதற்கு "பொருத்தமானதும் ஆற்றல் மிக்கதுமான பொறிமுறையினை நாடுகளின் அரசாங்கங்கள் வழங்கவேண்டும்" என்பதும் முக்கியமாகும். இத்தீர்மானத்தில் மனித உரிமைகள் பேரவை

- "உண்மையறிவதற்கான உரிமையை மதிப்பதனையும் மற்றும் ஆலன செய்வதனையும் அங்கீகரித்துள்ளது..." குற்றம் செய்பவர்கள் தண்டிக்கப்படாது போவதனை முடிவுக்கு கொண்டு வருவதற்கும் மற்றும் மனித உரிமைகளை ஊக்குவித்து பாதுகாப்பதற்கும் பங்காற்றுகின்றது.
- "நீதி முறைக்கு சிறப்புப் பங்காற்றக் கூடிய குறிப்பிட்ட வகையினதான மற்றும் நீதி சார் பொறிமுறை மற்றும் நீதி சாரா பொறிமுறைகளான உண்மை மற்றும் நல்லிணக்கத்திற்கான ஆணைக்குழுக்களை நியமித்தலை வரவேற்கின்றது."
- "உண்மையறிதல் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுக்கள் போன்ற நீதி (துறை) சாரா பொறிமுறைகளின் சிபாரிசுகளை குறித்த நாடானது பலரும் அறியும் வகையில் பரவச் செய்தும், நடைமுறைப்படுத்தியும், கண்காணிப்பதோடு நீதித்துறை சார் பொறிமுறைகளின் தீர்மனங்களுக்கு ஏற்புடையதாக உடன்பட்டமை பற்றிய தகவல்களை வழங்குதலையும் ஊக்குவிக்கின்றது."

3 "The right to the truth" 12 March 2010, UN Human Rights, OHCHR webpage:

http://www.ohchr.org/EN/NewsEvents/Therighttothetruth.aspx

4 Excerpts from promotion and protection of All Human Rights, Civil, Political, Economic, Social and Cultural Rights, Including the Right to Development, Resolution adopted by the Human Rights Council, 12/12 Right to the truth, A/HRC/RES/12/12, 1 October 2009.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- "நீதித்துறை பொறிமுறைகளையும் மற்றும்... உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுக்களையும் நாடுகள் ஸ்தாபித்து நீதி முறையை பலப்படுத்தும் நடவடிக்கைகளை ஊக்குவிக்கின்றது."

"தொழில்நுட்ப ஒத்துழைப்பு மற்றும் தகவல் பரிமாற்றம் போன்வற்றின் வாயிலாக உண்மையறிவதற்கான உரிமைகளை ஸ்தாபித்தல் தொடர்பில் உதவி கோரும் நாடுகளுக்கு அவ்வாறான உதவிகளை வழங்க (திறன் மிக்க) நாடுகளை ஊக்குவிக்கின்றது."

7. "சாட்சியம் வழங்குவோரது பாதுகாப்பினை உறுதி செய்யக்கூடிய நிகழ்ச்சி நிரல்களை... உருவாக்கும்... நோக்கிலான... ஒரு முழுமையான ஆய்வினை மேற்கொள்ளுமாறு ஐ.நா.சபையின் மனித உரிமைகளுக்கான உயர் ஆணையாளர் அலுவலகத்திடம் கோரி நிற்கின்றது."

10. "உண்மையறிதல் தொடர்பான உரிமைகள் பற்றிய பிரச்சினைகளை கவனத்திற் கொண்டதான... சிறப்பு தொடர்பாளர்களுக்கும் (rapporteurs) ஏனைய மனித உரிமைகள் பேரவையின் பொறிமுறைகளுக்கும் அழைப்பு விடுக்கின்றது."

நடைமுறையில் பயன்பாட்டிற்கு வரும் வகையில் 2010 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் கொண்டுவரப்பட்ட கட்டாயமம காரணமாக காணாமல்போன அனைத்து நபர்களுக்குமான சர்வதேச ஒப்பந்தமும் (convention) கூட உண்மையறிவதற்கான உரிமைக்கு இடமளிப்பதாக உள்ளது. மனித உரிமைகள் படுமோசமாக மீறப்படுதல் தொடர்பிலும் பாதிக்கப்பட்டவர்களது கௌரவத்திற்காகவும் மார்ச் மாதம் 24 ஆம் திகதியை உண்மையறிவதற்கான சர்வதேச உரிமை நாளாக ஐ.நா.சபையின் பொதுச்சபை தனது தீர்மானம் 65/196 இன் மூலம் பிரகடனம் செய்துள்ளமை உண்மையறிதல் பற்றிய உரிமைக்கான மேலதிக ஆதாரவாகும். இத்தினம் முதன் முதலாக (2011 ஆம் ஆண்டு மார்ச் 24 ஆம் திகதி) உண்மையறிவதற்கான உரிமை தொடர்பான சர்வதேச தினமாக அனுஸ்டிக்கப்பட்டுள்ளது.[5]

[5] For more on the International Day for the Right to the Truth, see http://www.un.org/en/events/righttotruthday/index.shtml; for UN news coverage on inauguration of the International Day for the Right to the Truth, see http//www.un.org/apps/news/story.asp?NewsID=37878&Cr=human%Orights&Cr1=



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பணித்தாள் (Worksheet): உண்மையறிதல் ஆணைக்குழுவின் ஆணைகள் [6]

தென்னாபிரிக்கா: தேசிய ஐக்கியத்தினையும் நல்லிணக்கத்தினையும் ஊக்குவிக்கும் 1995 ஆம் ஆண்டு 34 ஆம் இலக்கச் சட்டம்.

தென்னாபிரிக்க குடியரசின் பாராளுமன்றத்தால் இயற்றப்பட்டதான சட்டம் பின்வருமாறு கூறுகின்றது.

(1) நாட்டில் (தென்னாபிரிக்கா) கடந்த காலங்களில் இடம் பெற்ற முரன்பாடுகள் மற்றும் வேறுபாடுகளைக் கடந்ததாகவும் அவற்றை தெளிவாக விளங்கிக் கொண்ட உணர்வுகளுடனும் ஆணைக்குழு தேசிய ஐக்கியத்தினையும் நல்லிணக்கத்தினையும் தனது செயல் நோக்கங்களாகக் கொண்டிருக்கும். அதற்காக:

(அ). விசாரணைகளை நடாத்தியும் சம்பந்தப்பட்டவர்களிடம் விசாரித்தும் வன்முறைகள் ஏற்படுவதற்கு பொறுப்பாக செயற்பட்ட நபர்களது உள்நோக்கம், அனுமானங்கள் பற்றி அறியும் அதேவேளையில் பாதிக்கப்பட்டவர்கள் இடம்பெற்ற வன்முறைகள் பற்றி கொண்டுள்ள அனுமானங்கள், சம்பவங்களது முன் வரலாறு, அவை இடம் பெற்றமைக்கான சந்தர்ப்ப சூழ்நிலைகள், குற்றங்கள் இடம் பெறுவதற்கான காரணிகள் மற்றும் சந்தர்ப்பங்கள் என்பவை உள்ளடங்கலாக 1960 ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதலாம் திகதி முதல் இச் சட்டம் இயற்றிய நாள்வரையில் (1995 ஆம் ஆண்டு) இடம்பெற்ற படுமோசமான மனித உரிமை மீறல்களினது அளவு (extent) அவற்றிற்கு பொறுப்பாயிருந்தவை மற்றும் இயல்புகள் என்பவை பற்றி இயன்றளவுக்கு முழுமையான விளக்கத்தை / விபரத்தை ஸ்தாபித்தல்.

(ஆ). அரசியல் நோக்கங்களுடன் இணைந்ததான நடவடிக்கைகளில் (தான்) ஈடுபட்டமை பற்றிய கருத்துக்களுடன் தொடர்பானவற்றை உண்மையுடன் முழுமையாக வெளியிடும் இச்சட்டத்தின கோரிக்கைகளுக்கு இணங்கியும் உட்பட்டும் நடந்து கொண்டவர்களுக்கு மன்னிப்பு வழங்குவதற்கான ஏற்பாடுகளை செய்தல்.

(இ). பாதிப்புக்குள்ளானவர்களின் கதி என்னவாயிற்று (காணமல் போனவர்களது) அல்லது அவர்கள் எங்கேயிருக்கின்றனர் என்பதை உறுதி செய்து அவர்களது மானிட மற்றும் சிவில் அந்தஸ்துக்களை மீண்டும் வகைப்படுத்தி (ஏற்படுத்தி) அவர்களுக்கு நடந்த அத்துமீறல்கள் என்ன எண்பது பற்றி அவர்களே கூறக்கேட்டு அதன் பின்னர் அவற்றின் அடிப்படையில் வழங்கப்பட வேண்டிய இழப்பீடுகள் (Reparations) யாவை என்பன பற்றியும் சிபாரிசு செய்தல் வேண்டும்.

(ஈ). பந்திகள் அ,ஆ,இ ஆகியவற்றில் ஆணைக்குழு கண்டறிந்தவற்றுடனும் அவற்றில் உள்ளடங்கியதான எதிர்காலத்தில் மனித உரிமை மீறல் இடம் பெறுவதனை தவிர்ப்பதற்கான ஏற்பாட்டு நடவடிக்கைகளை உள்ளடக்கியதாக இயன்றளவுக்கும், இயலுமான அளவுக்கும் முழுமையான அறிக்கையினை தொகுத்தளிக்க வேண்டும்.

[6] உண்மையறியும் ஆணைக்குழுவின் ஆணைக்குட்டபட்டவகையில் பெறப்பட்டவற்றின் சொல்லுக்கு சொல் அப்படியே எடுத்தாளப்பட்ட முழு விபரங்களை பின்வரும் இணையத்தளங்கள் வழியாக பெற்று அறிந்து கொள்ள முடியும்.

- தென்னாபிரிக்கா : http://www.justice.gov.za/legislation/acts/1995-034.pdf
- கௌதமாலா : http://www.usip.org/files/file/resourcs/collections/commissions/Guatemala-Charter.pdf
- திமுர் லெஸ்தே : http://www.un.org/en/peacekeeping/missions/past/etimor/untaetR/Reg10e.pdf
- மொராக்கோ : http://www.usip.org/files/file/resourcs/collections/commissions/Morocco-Charter.pdf
- சொலமன் தீவுகள் : http://www.paclii.org/sb/legis/num_act/traca2008371/
- சொலமன் தீவுகள் (திருத்தப்பட்டது) : http://www.parliament.gov.sb/files/file/legislation/2009Truth and Reconciliation Commissions (Amendment) Bill 2009.pdf



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பணித்தாள் (Worksheet) : உண்மையறிதலுக்கான ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்ட ஆணைகள்**

**கௌத்தமாலா: நடந்தவை பற்றி தெளிவுபடுத்துவதற்கான ஆணைக்குழு: பட்டயம் அல்லது உடன்படிக்கை (1994)**

மிகமோசமான அழிவு தரும் (grave) நடவடிக்கைகளுடனான வன்செயல்களாலும், தனிப்பட்டவர்களது அடிப்படை உரிமைகளையும், ஆயுத முரன்பாட்டுடன் தொடர்புடைய குடித்தொகையினரது துயரங்களை உதாசீனப்படுத்தியதுமாகவே எமது நாட்டின் அண்மைக்கால வரலாறு காணப்படுகின்றது.

இவ்வாறான சம்பவங்கள் பற்றிய முழு உண்மைகளையும் அறிந்து கொள்ளக் கூடிய உரிமை கௌத்தமாலா மக்களுக்குண்டு. அத்தகைய சம்பவங்களை தெளிவாக்கிக் கொள்வதன் மூலமாக எதிர்காலத்தில் இவ்வாறான கவலைக்குரியதும் மனவேதனைக்குரியதுமான சம்பவங்கள் இடம்பெறாது தவிர்க்கவும் கௌத்தமாலாவில் சனநாயக செய்முறைகள் ஏற்படுவதனை வலிமைப்படுத்தவும் முடியும்...

கௌத்தமாலா அரசாங்கமும் கௌத்தமாலாவின் ஐக்கிய தேசிய புரட்சிகர கட்சிகளும் (Unidad Revolucionaria Nacional Guatemalteca) (இதன் பின்னர் கட்சிகள் எனக் குறிப்பிடப்படும்) பின்வரும் வகையில் தமது அங்கீகாரத்தை தெரிவித்துள்ளன.

ஆணைக்குழு ஒன்றினை ஸ்தாபிப்பதற்கான பணிப்பொறுப்புக்கள் (அல்லது ஆய்வுரிமை எல்லை வகுப்பு வாசகங்கள்) (Terms of reference) பின்வருமாறு அமையும்:

செயல்நோக்கம் {purpose}:

I. மனித உரிமைகள் மீறல் மற்றும் ஆயுதப்போராட்டங்களுடன் இணைந்ததாக கௌத்தமாலா மக்கள் துயருருவதற்கு காரணமாயிருந்த அனைத்து வன்முறைச் செயல்களையும் பக்கச்சார்பற்றும், நடுநிலை, நேர்மை, இலக்குத்தவறாதும், நோக்கத்தின் தரத்தினை பேணும் வகையிலும் தெளிவாக்கிக் கொள்ளல்.

II. குறிப்பிட்ட இக்காலப்பகுதியில் இடம் பெற்ற உள்வாரியானதும் மற்றும் வெளிவாரியானதுமான அனைத்து சம்பவங்கள் பற்றிய தகவல்களையும், நோக்கம் (குறியிலக்கு) சார்ந்த வகையிலும், மற்றும் விசாரணைகள் மூலம் கண்டறியப் பெற்றனவற்றை உள்ளடக்கியதுமான ஒரு அறிக்கையினை தயார் செய்து கொள்ளல்.

III. கௌத்தமாலாவில் சமாதானத்தினையும் தேசிய இணக்கத்தினையும் ஊக்குவிக்கும் பண்பினதான சிபாரிசுகளை ஒழுங்கு முறையாக தயாரித்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மொராக்கோ: அரசரது கட்டளையின் பேரில் 2004 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்ட உண்மையறிதல், நடுநிலைமை நேர்மை இலக்கு (Equity) மற்றும் நல்லிணக்கத்திற்கான தேசிய ஆணைக்குழு.**

இறைவனுடன் புகழ் யாவும் இருப்பதாக... மொராக்கோ அரசருக்கு (தாஹிர்) தெரிவித்த வகையில்... இறைவன் இச்சட்டத்தினை வலிமைப்படுத்துவாராக. மாட்சிமை தங்கிய அரசர் பின்வருவனவற்றை தீர்மானித்திருக்கிறார். இதில் இணைக்கப்பட்டுள்ள நடுநிலைமை, நேர்மை, இலக்கு மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு தொடர்பான சட்டத்திற்கு, இத்தால் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

**அத்தியாயம் II சிறப்புரிமைகள்**

**விதி - 6.** நடுநிலை, நேர்மை, இலக்கிற்கான (Equity) சிறப்புரிமைகள் நீதித்துறை (சட்டம்) சாராதவையாகும். அத்துடன் அத்து மீறல்களுக்கு தனிப்பட்டவர்களை பொறுப்புக்கூறும் படி கோரமுடியாது. விசாரணை, துருவிக்கேட்டல் மதிப்பிடல், நடுவர் தீர்ப்புக்கு விடுதல், சிபாரிசுகளை செய்தல் என்பவே சிறப்புரிமைகளில் உள்ளடங்குவன.

**விதி - 8** நடுநிலைமை, நேர்மை, இலக்கு (Equity) மற்றும் நல்லிணக்கத்திற்கான ஆணைக்குழுவானது நாடு சுதந்திரம் பெற்ற காலமுதலாக இன்றுவரையான (2004) காலப்பகுதிக்குள் இடம் பெற்ற அரச அங்கீகாரத்துடன் உருவாக்கப்பட்டுள்ள சுதந்திரமான நடுவர் தீர்ப்புக்கான ஆணைக்குழுவாகும். இது தகுதி வாய்ந்ததோர் நிறுவனமாக இருக்கும்.

**விதி - 9** நடுநிலைமை, நேர்மை, இலக்கு (Equity) மற்றும் நல்லிணக்கத்திற்கான ஆணைக்குழு அதற்குரிய சிறப்புரிமைகளுக்கான சட்ட வரம்புகளுக்கு உட்பட்ட வகையில் பின்வரும் குறிக்கோள்களுடனான பணித்திட்டங்களை நிறைவேற்றும்.

1. கடந்த காலங்களில் இழைக்கப்பட்ட படுமோசமான மனித உரிமைகள், துஸ்பிரயோகத்தின் இயல்புகளையும், அளவினையும் உறுதிப்படுத்தல்.
2. பலவந்தமாக காணமல் போகச் செய்யப்பட்டவர்களது கதி, இன்னும் தீர்மானிக்கப்படாத நிலையில் உள்ளவர்களது வழக்குகளை தொடர்ந்தும் விசாரணைகளுக்கு உட்படுத்தல்.
3. அரசாங்கத்தின் அங்கங்கள் (நிறுவனங்கள்) அல்லது வேறெந்த தரப்பினராவது அத்துமீறல் / மீறல்களில் ஈடுபட்டிருந்தால் மற்றும் விசாரணைக்கு உட்படுத்தக் கூடிய விடயங்கள் இடம்பெற்றிருந்தால் அவை தொடர்பான பொறுப்புக்கள் பற்றி உறுதி செய்தல்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பணித்தாள் (Worksheet): உண்மையறிதலுக்கான ஆணைக்குழுவுக்கான ஆணைகள்**

**திமூர்-லெஸ்தே: ஏற்பிசைவு, (Reception) உண்மையறிதல் மற்றும் நல்லிணக்கத்திற்கான ஆணைக்குழு / ஒன்றினை நிறுவுவதற்கான ஐக்கிய நாடுகள் சபையின் (UNTAET) கட்டுப்பாட்டு விதி முறை இலக்கம் 2001/10**

13.1 கிழக்குத் திமூரில் இடம்பெற்றவை பற்றிய உண்மைகளை அறியும் நோக்கத்துடன் மனித உரிமைகள் மீறல்கள் பற்றிய ஆணைக்குழு பின்வரும் செயற்பாடுகளைக் கொண்டியங்கும்.

(அ) விசாரணைகளை ஆரம்பித்து அவற்றினை நடைமுறைப்படுத்த துணை தந்து ஊக்குவித்தல் அல்லது ஒருங்கிணைத்தல்.

i. திட்டமிட்ட பாங்கினதான துஸ்பிரயோகங்களில் ஒரு பகுதியான அத்துமீறல்கள் உட்பட்ட மனித உரிமை மீறல்களின் அளவு.

ii. மனித உரிமை மீறல்களுக்கான சந்தர்ப்ப சூழ்நிலைகள், சூழ்நிலைமைகள் (circumstances) காரணிகள் (factors), செயல் நோக்கம் (motives) மற்றும் அவ்வாறான மீறல்களுக்கு இட்டுச் சென்றமை பற்றிய அனுமானங்களை உள்ளடக்கியதாக மனித உரிமை மீறப்பட்டமையின் இயல்பு, காரணங்கள் மற்றும் அளவு என்பன.

iii. மீறல்களுடன் தொடர்புடைய நபர்கள், அதிகாரக் குழுக்கள் (Authorities), நிறுவனங்கள் மற்றும் அமைப்புக்கள்.

iv. ஒரு நாட்டினது அல்லது அங்கம் ஒன்றின் அங்கீகாரத்துடன் அல்லது வேண்டுமென்றே திட்டமிட்டு கொள்கையின் அடிப்படையில் மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றனவா அல்லது ஏதேனும் அரசியல் நிறுவனமாவது, கூலிப்படையாவது, சுதந்திர இயக்கமாவது, குழு அல்லது தனிப்பட்டவர்களாவது பொறுப்பாயிருந்தனரா?

v. உள்ளூர், வெளிவாரி காரணிகள் முரண்பாட்டிற்கு ஏதேனும் வகையில் பங்கு கொண்டிருந்தால் அவை பற்றிய விபரங்கள் மற்றும்

vi. மனித உரிமை மீறல்கள் தொடர்பில் பொறுப்புக் கூறல், அரசியல் அல்லது ஏனையன பற்றிய தகவல்கள்.

(ஆ) எவரொருவரிடமிருந்தும் சான்றுகளையும் மற்றும் தகவல்களையும் ஒருங்கிணைத்தலும் அல்லது பணிகளை ஆரம்பித்து அவற்றிற்கு துணை தந்து ஊக்குவித்தலும்.

(இ) அதன் நடவடிக்கைகள் மற்றும் கண்டறிந்தவற்றை உள்ளடக்கி முழுமையானதும் யாவற்றையும உள்ளடக்கியதானதுமான ஒரு அறிக்கையினைத் தயாரித்தல்..... மற்றும்

(ஈ) எதிர்காலத்தில் மனித உரிமை மீறல்கள் ஏற்படாது தவிர்ப்பதற்கான சீர்திருத்தங்கள் மற்றும முயற்சிகள் என்பன தொடர்பிலான சிபாரிசுகளைத் தயாரித்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சொலமன் தீவுகள்: உண்மையறிதல் மற்றும் நல்லிணக்கத்திற்கான ஆணைக்குழு சட்டம் (2008 ஆம் வருடம் 5ஆம் இலக்கச் சட்டம் - 2009 இல் திருத்தி அமைக்கப்பட்டது)** 2008 ஆம் வருடம் ஆகஸ்ட் மாதம் 28 ஆம் திகதி தேசிய பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்டது. இவற்றின்படி உண்மையறிதல் மற்றும் நல்லிணக்கத்திற்கான ஆணைக்குழு என அடையாளம் காணப்படும் அமைப்பானது நிறுவப்படுகின்றது.

5. 1) ஆணைக்குழுவின் நோக்கங்களும் செயற்பாடுகளும் தேசிய ஐக்கியத்தையும் நல்லிணக்கத்தினையும் பின்வருவன்வற்றின் மூலம் ஊக்குவிப்பதாகும்.

(அ) சம்பந்தப்பட்டவர்களை (Stakeholders) நல்லிணக்கச் செய்முறையில் ஈடுபடச் செய்தல்.

(ஆ) 1998 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் 2003 ஆம் ஆண்டு ஜுலை 23 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் இடம் பெற்ற மனித உரிமை மீறல்கள் மற்றும் துஸ்பிரயோகங்களின் இயல்புகள், முன்வரலாறு, அடிப்படைக்காரணிகள், பொறுப்புக்கூறல் மற்றும் காரண காரியங்கள் என்பவற்றை பரிசீலனை செய்தல்...

(இ) தனிப்பட்டவர்கள் பாதிக்கப்பட்டமையுடன் கலக்காத முறையில் துறைசார்ந்து ஏற்பட்டுள்ள தாக்கங்களை குறிப்பாக சுகாதாரம், கல்வி, சட்டம் மற்றும் ஏனைய துறைகளில் ஏற்பட்ட பாதகவிளைவுகளை கவனத்திற் கொள்ளுதலும் மற்றும்

(ஈ) எதிர்காலத்தில் இவை போன்ற சம்பவங்கள் மீள ஏற்படுவதனை தவிர்க்க ஏற்ற வழி முறைகளையும் மாற்றுக் கொள்கைகளுக்கான ஏற்பாடுகளையும் உருவாக்குதல்.

2) உபபிரிவு (1) இல் கூறப்பட்ட பொதுவான விடயங்களில் ஏதும் பாதிப்பினை ஏற்படுத்தாத வகையில் ஆணைக்குழுவின் செயற்பாடுகள் பின்வரும் வகையில் அமைந்திருக்கும்

(அ) இடம்பெற்ற அத்துமீறல்களினது அளவு, மற்றும் காரணங்கள் பற்றி விசாரித்து அறிவித்தல்.

(ஆ) நல்லிணக்கம் ஏற்பட வேண்டிய தேவைகளுக்காக கவசப்பாதுகாப்பு பொலிசார் மேற்கொண்ட திடீர் சோதனைகள் மற்றும் பொதுச் சொத்துக்களுக்கு ஏற்பட்ட அழிவுகளும் சேதங்களும் தொடர்பில் அவை ஏற்பட்ட சூழ்நிலைகளையும் மற்றும் அவை சார்ந்த விபரங்களையும் பற்றி விசாரித்து அறிவித்தல்.

(இ) பாதிக்கப்பட்டவர்களது மனித கௌரவத்தை மீண்டும் வழங்குவதாகவோ அல்லது புதுப்பிப்பதற்கு உதவும் வகையிலோ நல்லிணக்கத்தை ஊக்குவிப்பதற்காக ஆவன செய்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கையேடு: *சிவில் சமூகத்தின் தலைமைத்துவத்துடனான உண்மையறிவதற்கான ஏற்பாடுகள்.***

**ஆய்வு நிகழ்ச்சி 1: ரெம்ஹி, கௌத்தமாலா(1995-98)** [7]

கௌத்தமாலா நாட்டில் உள்ள கத்தோலிக்க தேவாலயத்தினரால் 1995 ஆம் ஆண்டு ரெம்ஹி என்னும் (ரெம்ஹி என்பது வரலாற்றில் இடம் பெற்றவற்றை நினைவுக்கு கொண்டுவரும் நிகழ்ச்சிகான பெயராகும்) நிகழ்ச்சி உருவாக்கப்பட்டது. இது ஆங்கிலத்தில் Historical Memory Project எனப்படும். இதன் நடவடிக்கைகள் சமூக அமைச்சின் மனித உரிமைகளுக்கான அலுவலகம் மற்றும் பத்து (10) மாவட்ட சமய முதல்வர்களது அருளாட்சிப் பரப்புக்களுடனும் ஒருங்கிணைக்கப்பட்டிருந்தன. கௌத்தமாலா அரசாங்கம் மற்றும் கொரில்லா (முறையற்ற போர்) குழுக்களுக்குமிடையில் ஐ.நா. சபையினால் ஏற்பாடு செய்யப்பட்ட சமாதான உடன்படிக்கையின் ஒரு பகுதியாக வரலாற்றை தெளிவுபடுத்தும் ஆணைக்குழு (Historical Clarification Commission (CEH) ) அமைக்கப்படலாம் என எதிர்பார்த்து இந்நிறுவனம் உருவாக்கப்பட்டது. இவ்வமைப்பிற்கு (CEH) வழங்கப்பட்டிருந்த ஆணை பலவீனமானதாகக் கருதப்பட்டதால் ரெம்ஹி நிறுவனம் சி.இ.எய்ச் (CEH) நிறுவனத்திற்கு இரண்டு வருடங்கள் முன்பதாகவே 1995 ஆம் ஆண்டிலிருந்து செயற்படலாயிற்று. பாதிக்கப்பட்டவர்களது குரல்களை முன்னிலைப்படுத்தியும் தேவாலயத்தின் ஆயர்கள்சார் (Pastoral) பணிகளுடன் அவற்றை இணைத்து முழுமைப்படுத்தியும் சி.இ.எய்ச் (CEH) அமைப்பினால் பின்வரும் காலங்களில் அவை பணிகளைத் தொடரும் போது கொண்டிருக்க வேண்டிய தரங்களை ஏற்படுத்திக் கொடுப்பதனை நோக்கமாக கொண்டதாக இந் நிறுவனத்தின் (ரெம்ஹி) பணிகள் உருவாக்கப்பட்டிருந்தன.

மூன்று வருட செயற்பாட்டின் போது இந் நிறுவனத்தில் 600 தொண்டர்கள் இணைந்து சமூகங்களிலிருந்து அறிக்கைகள் (Statements) சேகரித்தனர். ரெம்ஹியின் அறிக்கையில் 50,000 மனித உரிமை மீறல் சம்பவங்கள் இடம் பெற்றிருந்ததுடன் அவற்றில் 80 வீதமான மீறல்கள் இராணுவத்தினாலேயே மேற்கொள்ளப்பட்டிருந்ததாகவும் கூறப்பட்டிருந்தது. அவ்வறிக்கை வெளியிடப்பட்ட இரண்டு நாட்களின் பின்னர் ரெம்ஹி செய்முறைகளுக்கு தலைமை தாங்கிய தலைமைக்குரு (பிஷப்) ஜெராட்டி அவர்கள் படுகொலை செய்யப்பட்டார். சி.இ.எய்ச் (CEH) 1997 ஆம் ஆண்டில் ஐ.நா.சபையின் ஆதரவுடன் செயற்பட ஆரம்பித்தபோது அப்பணிகளுக்கு ரெம்ஹி கண்டறிந்தவை பெரும் பயன் தருவதாயிருந்தது. மேலும் சி.இ.எய்ச் (CEH) 20,000 நபர்களிடம் பேட்டி கண்டு அறிக்கைகளை / தகவல்களை சேகரித்திருந்தது.

இராணுவமானது பழங்குடியினரான மாயா இன மக்களுக்கு எதிராக இன அழிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு ஏறத்தாள 250,000 பேரை உள்ளூர் ஆயுத போராட்டத்தின் போது ஒன்றில் படுகொலை செய்தோ அல்லது காணமல் போகச் செய்தோ விட்டதாக இறுதியில் சி.இ.எய்ச் (CEH) நிறுவனம் கண்டறிந்துள்ளது.

ரெம்ஹி தனது அறிக்கையை முழுமையாக்கியதன் பின்னர் அது கண்டறிந்தவற்றை பிரசித்தமானதோர் தனிமுறைக் கருத்துப் பாங்கில் (Version) தேவாலயத்தின் வலைப்பின்னல் அமைப்பினூடாகப் பரவச் செய்தது. தொண்டர்கள் பாதிக்கப்பட்டவர்களுக்கு பாதிப்புக்களிலிருந்து மீட்பு பெறுவதற்கான (recovery) நிகழ்ச்சிகளை நடாத்தினர். அதற்காக சமாதானமும் நல்லிணக்கமும் பற்றியதான நாடகங்களை விருத்தி செய்து அரங்கேற்றினர். நினைவுச் சின்னங்கள் நிர்மாணத்தை ஊக்குவித்தனர். இவற்றோடு பாதிப்புக்குள்ளானவர்களுக்கு ஆலோசனை வழங்கும் நிகழ்ச்சிகளையும் அவர்களது தேவைகளை பூர்த்தி செய்து கொள்வதற்கு தேவையான சேவைகளையும் நடாத்த ஏற்பாடுகளை செய்தனர்.

ரெம்ஹி பற்றிய மேலதிக விபரங்களுக்கு பார்க்க: http//www.waccglobal.org./en/19992-key-issues-in-global-communications/833-Guatemala-Never-again-Witnessing-onbehalf-of-the-disappeared--html



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆய்வு நிகழ்ச்சி 2: டிசி - கேம், கம்போடியா (DC - CAM) (1994 முதல் இன்று வரை)

டிசி - கேம் - (ஆவணப்படுத்தல் மையம் அல்லது ஆவணப்படுத்தும் நிலையம் - கம்போடியா)

டிசி - கேம் என்பது ஐக்கிய அமெரிக்க நாட்டின் யேல் பல்கலைக்கழகம் கம்போடியாவில் இடம்பெற்ற இன அழிப்பு பற்றி மேற்கொண்ட ஆராய்ச்சி நிகழ்ச்சியின் முடிவின் பின்னர் ஸ்தாபிக்கப்பட்ட ஒரு அரசு சார நிறுவனமாகும். காமர் ரோ (Khmer Rouge) ஆட்சியின் போது இடம் பெற்ற படுகொலைகள், அரசியல் வன்முறைகள் பற்றிய எழுத்து வடிவிலான சான்றுகளை சேகரிக்கும் தகல்களை சேகரிக்கவும், அக்காலப்பகுதியில் குற்றமிழைத்தவர்கள் பற்றிய தரவுகளை சேகரித்து இன்னும் உயிர் வாழும் சில குற்றவாளிகள் மீது வழக்குத் தொடரவும், இன அழிப்பு நடவடிக்கைகள் இடம்பெறுவதனை எதிர்காலத்தில் எவ்வாறு தவிர்க்கலாம் என்பது பற்றி மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தவும் யேல் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் இத்தேசியமட்ட நிறுவனத்தை உருவாக்கினார்கள் இந்நிறுவனம் திரைப்படங்களை தயாரித்தல், பொதுமக்களுக்கு விழிப்புணர்வுக்கான கல்வியூட்டல், ஆராய்ச்சிகளை மேற்கொள்ளல், கண்டறிந்தவற்றை பிரசுரித்து வெளியிடுதல் மற்றும் முரண்பாட்டின் போது பிரிந்து போன குடும்ப அங்கத்தவர்களை மீள ஒன்றிணையவைக்க உதவி செய்தல் போன்ற நடவடிக்கைகளை உள்ளடக்கி செயற்பட்டு வருகின்றது.

இந் நிறுவனம் (டிசி - கேம்) பெருமளவு சுவடிகூட பொது ஆவணங்களை சேகரித்துள்ளது. அவற்றில் சான்றுறுதிகள் (வாக்குமூல உரைகள்) புகைப்படங்கள், வன்முறைகள் இடம்பெற்ற அமைவிடங்கள் பற்றிய தரவுகள் (data) என்பனவும் உள்ளடங்குகின்றன. 189 சிறைக்கூடங்களுக்கு தேசப்படம் வரையப்பட்டுள்ளன. 19,403 பொதுப் புதைகுழிகள் (mass grave) அடையாளம் காணப்பட்டுள்ளதோடு கம்போடியா முழுவதிலும் இன அழிப்பு பற்றிய 80 நினைவு நாள் நிகழ்ச்சிகளும் நடாத்தப்பட்டுள்ளன.

ஐக்கிய நாடுகள் சபையின் நிபுணர்கள் குழு 1999 ஆம் ஆண்டு டிசி - கேம் வழங்கிய தரவுகளைப் பயன்படுத்தி மேற்கொண்ட விசாரணை செய்முறைகளிலிருந்து காமர் ரோ (Khmer Rouge) தலைவர்களே கம்போடியாவில் யுத்தக் குற்றங்கள், இன அழிப்பு மற்றும் மனித இனத்திற்கு எதிரான பாதங்களை இழைத்திருந்தமைக்கு சில அறிகுறிகள் தென்படுவதாக தீர்மானம் செய்தனர். இதனையடுத்து கம்போடிய அரசாங்கத்துடன் செய்து கொண்ட நீண்ட பேரம் பேசும் செய்முறையின் பின்னர் ஒரு உயர்தரத்திலான நீதி மன்றத்தை (Hybrid Court) (கம்போடியா மற்றும் சர்வதேச அதிகாரிகளையும், சட்டத்தினையும் கலவையாகக் கொண்ட ஒரு நீதிச் செய்முறையை) ஸ்தாபித்து இன்னும் உயிருடன் இருக்கும் காமர் ரோ தலைவர்களுக்கு எதிராக வழக்குத் தொடர்ந்து விசாரிப்பதற்கு ஒரு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. 2006 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்ட நீதி மன்றம் இன்னும் தொடர்ந்தும் செயற்பட்டு வருகின்றது.

2004 ஆம் ஆண்டின் ஐ.நா.சபையின் நினைவுக் குறிப்பு (Memorandam) ஒன்றில் பின்வருவன கூறப்பட்டுள்ளன. "நீதிமன்றம் பெருமளவுக்கு ஆவணப்படுத்தப்பட்ட சான்றாதாரங்களில் தங்கியிருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. பெருமளவான ஆவணங்கள் கம்போடிய ஆவண நிலையத்திடம் கிடைக்கக் கூடியதாயுள்ளன. அரசு சாரா நிறுவனமான டிசி-கேம் சனநாயக கம்பூச்சியாவின் ஆட்சிக்காலத்தின் போது இடம் பெற்ற குற்றங்கள் தொடர்பான ஆவணங்களை பாதுகாத்து வைப்பதற்கும் அவை தொடர்பான ஆராய்ச்சிக்கும் தன்னை பெருமளவு அர்ப்பணித்துக் கொண்ட நிறுவனமாகும். [8] (காமர் ரோ ஆட்சியின் போது கம்போடியாவின் உத்தியோகபூர்வமான பெயர் கம்பூச்சியாவாகும்)

[8] செயலாளர் நாயகத்தின் காமர் ரோ விசாரணைகள் பற்றிய அறிக்கை, UNGA A/59/432, 12 October 2004; section on Documentation, witnesses and experts, para. 19, p.5.Democratic Kampuchea is the offical of the Khmer Rouge. Learn more at http//www.dccam.org and http//www.d.dccam.org/



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆய்வு நிகழ்ச்சி 3: வங்காள தேசத்தின் யுத்த அருங்காட்சியகம் (1996 முதல் இன்று வரை)** [9]

200 வருட பிரித்தானிய ஆட்சியினை அடுத்து 1947 ஆம் ஆண்டு இந்துக்களை முதன்மையாகக் கொண்ட பகுதிகளைக் கொண்டு இந்தியாவாகவும் முஸ்லிம்களை பெரும்பாண்மையாகக் கொண்ட பகுதிகளைக் கொண்டு பாக்கிஸ்தானாகவும் முன்னாள் இந்தியா பிரிவுக்காளாகியது. இந்துக்கள் இந்தியாவை பாதுகாப்பாக கருதியும் முஸ்லிம்கள் பாக்கிஸ்தானை பாதுகாப்பாக கருதியும் இடம்பெயர்ந்தபோது ஆயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டனர். இந்திய எல்லைகளில் ஆயிரக்கணக்கான கிலோ மீற்றர் தூரத்தில் கிழக்கு மற்றும் மேற்கு எல்லைகள் பிரிக்கப்பட்டிருந்ததால் மேலும் ஸ்திரமின்மை ஏற்பட வாய்ப்பாயிற்று. 1958 ஆம் ஆண்டளவில் நிலவிய பாக்கிஸ்தானின் இராணுவ சர்வதிகார ஆட்சி அந்நாட்டின் சனநாயக ஆட்சி முறையை அடக்கு முறைக்கு ஆளாக்கியதால் வங்காள மக்களை பெரும்பான்மையாகக் கொண்ட கிழக்குப் பாக்கிஸ்தானில் மேற்குப்பாக்கிஸ்தானின் அடக்கு முறை ஆட்சிக்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டு வந்தது.

கிழக்கு பாக்கிஸ்தானின் பொதுமக்களது எதிர்ப்பு மேலோங்கி 1971 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் சுதந்திர வங்காளதேசத்தை பிரகடனம் செய்ததால் மேற்கு பாக்கிஸ்த்தானின் இராணுவம் வங்காள மற்றும் இந்து மத ஆண்கள், சிறுவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் அறிவார்ந்த பிரிவினரை குறிவைத்து படுகொலைத் தாக்குதலை மேற்கொண்டது. இரவுகள் தோறும் அடுத்தடுத்து படுகொலைகள் இடம்பெற்றன. படுகொலைகள் பெரிதும் கொடூரமானவையாகும். சிறை செய்யப்பட்ட பொதுமக்களை கயிற்றினால் கட்டி ஆற்றை கடக்கச் செய்து ஆற்றின் நடுப்பகுதியில் பொதுமக்கள் நின்ற போது இன்னுமோர் தொகுதி கைதிகளை (பொதுமக்களை) அங்கு கொண்டு வருமுன்னர் துப்பாக்கியால் சுட்டுக்கொன்றனர். வங்காள பெண்களும் சிறுமியர்களும் கூட்டு வன்புணர்வுகளுக்கும், படுகொலைகளுக்கும் ஆளாக்கப்பட்டனர். வேறு சிலர் கடத்தப்பட்டு மேற்குப் பாக்கிஸ்தானின் சிறைச்சாலைகளில் அடைத்து வைக்கப்பட்டனர். அங்கே அவர்கள் பாலியல் அடிமைகளாக்கப்பட்டனர். இவ்வாறான இன அழிப்பு காரணமாக பத்துலட்சத்திற்கும் மேலானவர்கள் படுகொலைக்காளாகினர். அவற்றையடுத்து ஒன்பது மாத சண்டையின் பின்னர் கிழக்குப் பாக்கிஸ்தானின் வேண்டுகோளுக்கினங்க இந்தியா இம் முரண்பாட்டில் தலையிட்டது. விரைவில் மேற்கு பாக்கிஸ்த்தான் படைகள் 1972 ஆம் ஆண்டின் ஆரம்பகாலப் பகுதியோடு வீழ்ச்சியுற்றன. அவ்வருடமே வங்காளதேசம் அதன் முதலாவது சுதந்திர பாராளுமன்றத்தை நிறுவியது.

1971 ஆம் ஆண்டு யுத்தத்தின் வீரத்தியாகிகளையும் (Martyrs) மற்றும் சம்பவங்களையும் நினைவு கூறுவதற்காக 1996 ஆம் ஆண்டு வங்காளதேசத்தில் சுதந்திரப்போர் அருங்காட்சியகம் நிறுவப்பட்டது. வங்காளதேச அரசியலமைப்பில் உள்ளடங்கிய சனநாயகம், மதச்சார்பின்மை, தேசியத்துவம், ஆகிய அடிப்படைத் தத்துவங்களுக்காக மனிதத் தியாகங்களும் பிரசித்தமான போரட்டமும் எந்தளவுக்கு பங்களித்தன என்பதனை எடுத்துக் காட்டுவது அருங்காட்சியகத்தின் பிரதான நோக்கமாகும். சமயம், இனம், தேசியம், இறைமை, என்பவற்றின் பெயரால் மேற்கொள்ளப்பட்ட அராஜரீகமும், அழிவுகளும் காரணமாக பாதிப்புக்குள்ளானவர்கள் மற்றும் சுதந்திரத்தை நேசித்த அனைவருக்கும் இவ்வருங்காட்சியகம் சமர்ப்பணம் செய்யப்பட்டதாக அதன் குறிக்கோள் (Mission) அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

சுதந்திரப் போரின் போது சுதந்திரத்திற்கான போராளிகள் பயன்படுத்திய பொருட்கள் அவை தொடர்பாக அரிதாக கிடைக்கக் கூடிய புகைப்படங்கள் மற்றும் ஆவணங்களை அருங்காட்சியகம் கொண்டுள்ளது. டாக்கா நகரின் உபநகரப் பகுதிகளில் இரண்டு கொலைக்களங்கள் கண்டறியப்பட்டு அவற்றில் தோண்டி எடுக்கப்பட்ட மனித எச்சங்கள் உட்பட யாவும் பேணிப் பாதுகாத்து வரப்படுகின்றன. இவ்வாறாக காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளவை மற்றும் கிரமமாக நடாத்தப்படும் நிகழ்ச்சிகளின் மூலமாக விடுதலைப்போர் அருங்காட்சியகம், ஒரு வாழ்ந்து வரும் அருங்காட்சியகத்தினை உருவாக்கியுள்ளது. இதன் பயனாக அதற்கு வருகை தருபவர்கள் தேசிய ஐக்கியத்தை கட்டியெழுப்பும் முயற்சிகளில் பங்கு கொள்ள ஊக்குவிக்கப்படுவதுடன் மனித உரிமை துஸ்பிரயோகத்திற்கு எதிர்ப்பு தெரிவிப்பதுமான சமூகத்தை உருவாக்கவும் நிகழ்கால சமூக மற்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனித உரிமை பிரச்சினைகள் எவ்வாறு அவற்றுடன் பொருத்தமானதாயுள்ளன என்பதனை இனங்காணவும் முடிகிறது. நாட்டு பிரஜைகளினது ஆக்க பூர்வமான முயற்சிகளின் விளைவாக உருவாக்கப்பட்ட விடுதலைப்போர் அருங்காட்சியகம் இப்போது ஒரு பொறுப்பாண்மை சபையினரால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றது. வங்காள தேசத்தின் வரலாறு தொடர்பான ஒரு நம்பத்தகுந்த நிறுவனமாக தேசிய மற்றும் சர்வதேச அங்கீகாரத்தையும் அது பெற்றுள்ளது.

[9] மேலதிக விபரங்களுக்கான இணையத்தள முகவரி http://www.liberationwarmuseum.org/the-museum



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆய்வு நிகழ்ச்சி 4: உண்மையறிதலுக்கும் நல்லிணக்கத்திற்குமான கிறீன்ஸ் பொரா ஆணைக்குழு** [10]

ஐக்கிய அமெரிக்காவின் வடகரோலினா மாநிலத்தில் உள்ள ஒரு சிறிய நகரம் கிறீன்ஸ் பொராவாகும். அந்நகரத்தைச் சேர்ந்த தொழிலாளர் உரிமைகளுக்கான ஆர்வலர்கள் ஐந்து பேர் KKK கூ கிளக்ஸ் கிளென் (Ku Klux Klan) என்னும் அமைப்புக்கு எதிராக அணி திரண்டனர். KKK என்பது வெள்ளையினத்தின் உச்ச உயர் நிலையை (supremacist) போற்றும் அமைப்பாகும். அதற்கு எதிராக ஒரு எதிர்ப்பினை மேற்குறிப்பிட்ட ஐந்து பேரும் ஏற்பாடு செய்ததனை எதிர்த்து KKK மற்றும் நாஜி இயக்கங்களைச் சேர்ந்தவர்களால் அவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர். ஊர்வலத்தில் கலந்து கொண்ட இன்னும் பத்துப் பேர் அளவிலானோரும் அப்போது காயமடைந்தனர். அச்சம்பவத்தின் போது பொலிசார் சற்று தூரத்தில் நின்று கொண்டிருந்தனர். அவர்களுக்கு இவ்வாறான மோதல் ஏற்படும் என்பது தெரிந்திருக்கிறது. பொலிசுக்கு தகவல் தருபவர் ஒருவர் KKK மற்றும் நாஜி தரப்பினருடன் பங்கேற்று செயற்பட்டதும் தெரியவந்துள்ளது. இக்கொலைகள் உள்ளூர் தொலைக்காட்சி நிலையத்தினால் படம் பிடிக்கப்பட்டிருந்தது. இக்குற்றத்தை செய்தவர்களை விசாரணை செய்து இரண்டு குற்ற நீதிமன்றங்களிலும் ஜீரர்கள் (முறைகாண் ஆயக்குழுவினர்) முற்றிலும் வெள்ளைக்காரர்களாகவே இருந்தனர். இறுதியில் கிறீன்ஸ் பொரோ உள்ளூர் அரசாங்கம் சிவில் வழக்கு விசாரணையின் பின்னர் ஓரளவு நட்ட ஈட்டினை வழங்க முன்வந்தது.

கிறீன்ஸ்பொரோ கொலைகளின் இருபதாவது ஆண்டு நிறைவின் போது தென்னாபிரிக்க அனுபவங்களால் அகத்தூண்டுதல் பெற்று எழுச்சியுற்ற பாதிக்கப்பட்டவர்களில் ஒரு குழுவினர் “உண்மையறிதல் மற்றும் நல்லிணக்கத்திற்கான ஆணைக்குழு” வினை ஸ்தாபிக்கும் எண்ணத்தைப் பெற்றனர். “சமுகத்திற்கான உண்மையறிதல் மற்றும் நல்லிணக்கத்திற்கான நிகழ்ச்சித் திட்டம் ஒன்றினை அமைப்பதற்கான பணிக்குழுவினை (Working Group) உருவாக்கினர். அதனைத் தொடர்ந்து பின்னர், ஒரு பிரகடனம், ஒரு ஆணை மற்றும் சமூகத்தினால் செய்யப்படக் கூடியதான பிரேரணைகளின் மூலமாக ஆணையாளர்களை பங்கேற்பு செய்வதற்கான செய்முறை மூலம் தெரிவு செய்வதனை ஊக்குவிக்கக்கூடிய பரந்த அடிப்படையைக் கொண்ட ஒரு பொறிமுறை ஆகியவற்றையும் உருவாக்கினர். பணிக்குழு (Working Group) முதலில் ஆணைக்குழுவின் நடவடிக்கைகளுக்கு தேவையான நிதியை சேகரிக்கவும் ஏனைய உள்ளீடுகளை வழங்குவதற்குமான ஒரு தேசிய ஆலோசனைக் குழுவை உருவாக்கிற்று.

கிறின்ஸ்பொரோ நகர உண்மையறிதல் மற்றும் நல்லிணக்கத்திற்கான ஆணைக்குழு (அரசாங்கத்தின்) உத்தியோகபூர்வமான ஒரு உண்மையறிவதற்கான ஆணைக்குழுவைப் போன்றே ஆராய்ச்சியை மேற்கொண்டதுடன் முறையாக ஒழுங்குபடுத்தப்பட்ட வகையில் சமூகத்தை சேர்த்து இணைத்து (பொதுமக்களிடம் விசாரணைகளை மேற்கொள்ளல், இளைஞர்களையும் மாணவர்களையும் தொண்டர்களாக பணியாற்ற வாய்ப்பளித்தல் என்பன உள்ளடங்கலாக) செயற்படச் செய்து இடம் பெற்ற சம்பவங்கள் பற்றியும் அதில் வெளிப்படையாக தெரியாத பிரச்சினைகள் பற்றியும் அறிக்கை ஒன்றை வெளியிட்டது. ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்ட ஆணையின் மூலமாக 3-11-1979 திகதி அன்று இடம் பெற்ற சம்பவத்திற்கான சந்தர்ப்ப சூழ்நிலை, அதற்கான காரணம், சம்பவத்தின் நிரலொழுங்கு (Sequence) மற்றும் விளைவுகள் பற்றி நுணுகி ஆராய்தல் அதன் கடமையாக நிர்ணயிக்கப்பட்டது. [11]

2004 ஆம் ஆண்டு ஏழு (7) ஆணையாளர்களைக் கொண்ட ஆணைக்குழு, ஐந்து பேரைக் கொண்ட சிறிய நிறைவேற்றுக் குழு மற்றும் ஒரு தொண்டர் குழு என்பனவற்றின் ஆதரவுடன் தனது பணியை ஆரம்பித்தது. பாதிக்கப்பட்டவர்களது குடும்பங்களிடமிருந்தும் சம்பவத்தில் தப்பிப் பிழைத்தவர்களிடமிருந்தும் பெறப்பட்ட வாக்குமூல சான்றுரை (Testimony), எவரொருவருக்கும் முறைமன்ற அழைப்பு ஆணை வெளியிட அதிகாரமில்லாத போதிலும் KKK / நாஜி குழுவிலிருந்து இரண்டு சாட்சியங்களையும் பொலிஸ், சட்டத்தரணிகள், பத்திரிக்கையாளர்கள், வரலாற்றாசிரியர்கள், உள்ளூர் குடியிருப்பாளர்கள் மற்றும் நீதிபதி ஆகியோரை வாக்குமூல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சான்றுரை வழங்க கொண்டுவரவும் ஆணைக்குழுவுக்கு முடிந்தது. இரண்டு வருடங்களின் பின்னர் கிறீன்ஸ்பொரோ சமூகத்திற்கும் உள்ளூர் அரசாங்கத்திற்கும் ஆணைக்குழு அது கண்டறிந்தவை பற்றியும் தனது சிபாரிசுகள் பற்றியும் ஒரு அறிக்கையை தயாரித்து வழங்கியது. சம்பவம் இடம்பெற்ற நேரத்தின் போது பொலிஸ்காரர்கள் கொண்டிருந்த தொடர்புகளையும், சம்பவத்தில் தப்பிப் பிழைத்தவர்கள் சம்மதித்து வழங்கிய ஒப்புக்கொள்ளுதலையும் கிறீன்ஸ்பொரோ நகர உண்மையறிதல் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் செய்முறைகள் ஓரளவிற்கு வெளிப்படுத்தின. இந்நாள் வரை கிறீன்ஸ்பொரோ அரசாங்கம் ஆணைக்குழுவின் சிபாரிசுகளை கவனித்து பொருட்படுத்தாத போதிலும் நகர (சபை) நிர்வாகம் நடந்தவற்றிற்காகத்தான் வருந்துவதாக அறிக்கை விடுத்துள்ளது. அத்துடன் உள்ளூர் பல்கலைக்கழகங்கள் ஆணைக்குழு வெளியிட்ட அறிக்கையை மாணவர்கள் உள்ளடங்கலளாக பலருக்கும் கற்பித்து வருகின்றன.

[10] லேதிக விபரங்களுக்கு இணையத்தளம் http//www.greensborotrc.org

[11] உண்மை அறிதல் மற்றும் நல்லிணக்கத்திற்கான ஆணைக்குழவின் ஆணை http//www.greensborotrc.org/mandate.doc



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கையேடு: குற்றந் தொடர்பான நீதி (Criminal Justice) [12]

இன அழிப்பு, மனித இனத்திற்கு எதிரான குற்றங்கள் மற்றும் யுத்தக் குற்றங்கள் என்பன உள்ளடங்களான சர்வதேச ரீதியிலான குற்றங்களை அலசி ஆராய்ந்து விசாரணை செய்தல் மற்றும் வழக்குத் தொடர்தல் ஆகியவை நிலைமாற்றத்திற்கான நீதியின் அடிப்படை மூலகங்களாகும். நியூரன்பேர்க் வழக்கு விசாரணைகளில் (Trials) இருந்தும் பின்னர் யூகோஸ்லேவியா (ICTY) மற்றும் ருவாண்டா (ICTR) போன்றவற்றிலிருந்தும் இவற்றிற்கான சர்வதேச சட்ட கடன்பாட்டின் தோற்றத்தினை இனங்கான முடியும். பெரும் அதிகாரங்களை கொண்டிருந்த அரசியல் மற்றும் இராணுவத் தலைவர்களை துருவித் துருவி விசாரனை செய்தல் மற்றும் வழக்கு விசாரணைகளைச் செய்வதன் மூலம் சட்டத்தின் வாயிலான ஆட்சியை வலிமைப்படுத்த முடிவதுடன், மனித உரிமைகளை மதித்து போற்றிவரும் சமூகங்கள் அவ்வாறான குற்றங்களை பொறுத்துக் கொள்ளப் போவதில்லை என்னும் வலிமையான சைகையையும் உலகிற்கு அனுப்பமுடியும்.

மனித இனத்திற்கு எதிரான குற்றங்கள் தனிமைப்படுத்தப்பட்ட (சாதாரண) சம்பவங்களல்ல. மாறாக அவை பரந்தளவில் ஒழுங்கு முறையாக திட்டமிட்டு அல்லது அரசாங்கத்தின் ஆதரவுடன் அல்லது சட்டப்படி உண்மையான அதிகார அமைப்பினால் (de facto authority) சிவில் (பொது) மக்களில் ஒரு குழுவினருக்கு எதிராக இழைக்கப்படுவனவாகும். பின்வரும் நடத்தைகளில் எவையேனும் ஒழுங்கானதும் அல்லது பரந்துபட்டதுமான முறையில பொது மக்களுக்கு எதிராக தாக்குதல்களை ஏற்படுத்தும் வகையில் மேற்கொள்ளப்பட்டிருக்குமானால் அதாவது இடம் பெறப்போவதை அறிந்திருந்து செய்திருந்தால் அவற்றை மனித இனத்திற்கு எதிரான குற்றங்கள் என வரைவிலக்கணப் படுத்தப்படுகிறது. அவை கொலை, பூண்டோடழித்தல், அடிமைப்படுத்தல், வற்புறுத்தி விபச்சாரத்தில் ஈடுபடச் செய்தல், நிர்ப்பந்தப்படுத்தி கர்ப்பமடையச் செய்தல் நிர்ப்பந்தப்படுத்தி கருவளக்கேடு செய்தல் அல்லது வேறு ஏதேனும் பாலியல் வன்முறைகள், வெளியேற்றல் அல்லது மக்கள் தொகையை பலவந்தமாக இடமாற்றல், சிறைப்படுத்தி வைத்தல் அல்லது வேறெந்த வகையினும் தனிப்பட்டவர்களது பௌதிக சுதந்திரத்தை இல்லாதாக்குதல், அடக்குமுறை, காணாது போகச் செய்தல், இன ஒதுக்கல் குற்றம் போன்றனவும் மற்றும் மனிதாபிமானமற்றதுமான நடத்தைகள் என்பனவுமாகும்.

இன ஒழிப்பு என்பது தேசிய மொழிவாரியான, இனரீதியான அல்லது சமய ரீதியான ஒரு குழுவினரை அழித்தொழிக்கும் எண்ணத்துடன் செய்யும் குற்றச் செயல்களைக் கொண்ட நடவடிக்கைகள் என வரைவிலக்கணப்படுத்தப்படுகிறது. அவற்றில் அக்குழுவைச் சேர்ந்த அங்கத்தவர்களை கொல்லுதல், உடல் அல்லது மனநிலையை கடுமையாக பாதிக்கக்கூடிய தீங்குகளை செய்தல, குறித்த குழுவினரது நிலவரங்களில் வேண்டுமென்றே பௌதீக ரீதியாக/ உடல் ரீதியாக ஒரு பகுதியை அல்லது முற்றாக துன்புறுத்துவதற்காக திட்டமிட்டு காரியங்களைச் செய்தல, அக்குழுவின் பிறப்புக்களை தடைசெய்யும் வகையில் நடவடிக்கைளை மேற்கொள்ளல், சிறுவர்களை வலுக்கட்டாயமாக அவர்களுடைய சொந்த சமூகத்திலிருந்து வேறொரு குழுவிற்கு இடமாற்றம் செய்தல் போன்வற்றையும் அது (இன அழிப்பு) குறிப்பதாகும்.

யுத்தக் குற்றங்கள் என்பவை ஆயுத முரண்பாடுகள் தொடர்பிலான சட்டங்களை மீறியதாக சர்வதேச அல்லது உள்ளூர் ஆயுத முரண்பாடுகளின்போது இழைக்கப்பட்ட குற்ற நடவடிக்கைகளாகும். பொதுமக்களை இலக்கு வைத்தலைத் தவிர்த்து அவர்களை பாதுகாக்க வேண்டும் என்பது ஆயுத முரண்பாடுகளின் போது பின்பற்ற வேண்டிய அடிப்படைத்தத்துவங்களில் ஒன்றாகும். இச்சட்டங்களை மீறுதல் அல்லது இச்சட்டங்களுக்கு எதிராக செயற்படுதல் என்பது மீறியவர் இக்குற்றத்திற்காக தனிப்பட்ட முறையில் பொறுப்புக் கூறவேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளாக்கப்படுவார் என்பதாகும். அத்துடன் போர்க்குற்றங்களை செய்ததாக குற்றம் சாட்டப்பட்டவர்கள் அதற்கு பொறுப்பு கூறவேண்டும் என்பதனை உறுதி செய்யும் கடன்பாடு நாடுகளின் அரசாங்கங்களுக்கு உண்டு.

வழக்கு விசாரணை செய்யப்பட்ட வேண்டும் என்பது பாதிக்கப்பட்டவர்களது பிரதான கோரிக்கையாக உள்ளது. பாதிக்கப்பட்டவர்களது தேவைகளையும் எதிர்பார்ப்புக்களையும் பிரதிபலிக்கும் வகையில் வழக்கு விசாரணை இடம் பெறுவதன் மூலமே அவர்களது கௌரவம் பாதுகாக்கப்பட்டு நீதியை வழங்கியதாக கருதமுடியும். சம்பந்தப்பட்டவற்றுடன் தொடர்புபடுத்தப்படாது குற்றத்திற்கான வழக்குத் தொடரப்படுவதன் மூலம் நீதியை நிலைநாட்டி விட முடியாது. இவ்வாறான குற்றங்கள் பெருமளவினதாக இனங்காணப்படுகையில் நாட்டில் நடைமுறையில் உள்ள வழக்கமான நீதித்துறை முறைகளினூடாக அவற்றை முறையாக செயற்படுத்த முடியாது போதல் காரணமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குற்றம் செய்தவர்கள் தண்டிக்கப்படாது (Impunity) போகும் விளைவுகளையும் கொண்டுவரலாம். எனவேதான் பெருமளவினதான குற்றங்கள் தொடர்பில் செயற்திறன் உள்ளதாக வழக்குத் தொடருவதற்கான உபாயங்களை தயார் செய்யும் போது குற்றத்தோடு சம்பந்தப்பட்ட கீழ் மட்ட மற்றும் குறைந்த பொறுப்புக்களை கொண்டோரை விட குற்றங்களைச் செய்ய திட்டமிட்டவர்கள் அவற்றிற்கான ஏற்பாடுகளைச் செய்தவர்கள் ஆகியோர் மீதே கூடிய கவனம் செலுத்தப்படுகின்றது. பாதிக்கப்பட்டவர்களினதும் குற்றமிழைத்தவர்களினதும் எண்ணிக்கை பெருமளவினதாக இருக்கும் சூழ்நிலையில் வழக்குத் தொடரும் உபாயங்களை அவற்றோடு தொடர்புடையதான ஏனைய முயற்சிகளான இழப்பீடு வழங்கும் நிகழ்ச்சிகள் (Reparations), நிறுவன சீர்திருத்தம், உண்மையறிதல் போன்றவற்றுடன் மேற்கொள்வதனால் குற்றம் செய்தவர்கள் தண்டிக்கப்படாது போகும் விளைவுகளின் இடைவெளிகளை பெருமளவு நிவர்த்தி செய்யக் கூடியதாயிருக்கும்.

(12) Adapted from ICTJ homepage on Justice: http://ictj.org/our-work/transitional-justice-issues/criminal-justice

**உள்நாட்டில் குற்ற வழக்குத் தொடருதல்**

சர்வதேச ரீதியில் இடம் பெற்ற குற்றங்களுக்கு குற்றங்கள் இடம் பெற்ற சமூகங்களிலேயே எதிராக குற்ற வழக்குகளைத் தொடர்வதால் விளைவுகளுக்கான (Impact) அதாவது போதிய நியாயம் வழங்குவதற்கான உள்ளார்ந்த வளம் (Potential) அதிகமாயிருக்கும். இருந்த போதிலும் முரண்பாடுகளின் விளைவாக உருவாகும் சமூகங்களில் அல்லது முரண்பாடுகளினால் நிலைமாற்றம் பெறுகின்ற சமூகங்களில் இதற்கான (அதாவது உள்நாட்டிலேயே குற்றங்களுக்காக வழக்குத் தொடருதல்) அரசியல் ரீதியிலான உடன்பாடு என்பது அங்கு நிலவக்கூடிய குழப்பம் மற்றும் சீர்குலைவுற்ற நிலைவரங்கள் காரணமாக இல்லாதிருக்கலாம். அத்துடன் அவற்றில் நீதி முறைகள் ஒழுங்கு குலைந்தும் போயுமிருக்கலாம்.

இவ்வாறான பிரச்சினைகள் காரணமாகவே சிறந்த நீதித்துறை நடைமுறைகள் காணப்படும் நாடுகளிலிருந்து உதவிகளைப் பெறுவதற்காக சர்வதேச அனுசரணை நாடப்படுகின்றது. உதாரணமாக உயரின நீதிமன்றங்கள் அல்லது சர்வதேச மற்றும் உள்ளூர் நீதித்துறை சார்ந்து செயற்படுபவர்களைக் கலப்பாகக் கொண்ட தீர்ப்பு மன்றங்கள் உருவாக்கப்படுகின்றன. அவ்வாறான தீர்ப்பு நீதி மன்றங்கள் சியாரோ லியோன், கொசோவோ, பொஸ்னியா, திமுர் லெஸ்தே மற்றும் கம்போடியா ஆகிய நாடுகளில் உருவாக்கப்பட்டு செயலாற்றியுள்ளன.

---

உலகம் தழுவிய சட்ட அதிகாரம் (Universal Jurisdiction)

குற்றம் சாட்டப்பட்டவர் அல்லது பாதிப்புக்குள்ளாகியவரது தேசியம் (Nationality) எதுவாயிருந்தாலும் (அதாவது அவர்கள் எந்த தேசத்து பிரஜையாக இருந்தலும்) அல்லது நீதிமன்றம் அமையப்பெற்றுள்ள இடத்துடன் எவ்வித தொடர்புகள் இல்லாதிருந்தாலும் ஒரு சில வகையான குற்றச் சாட்டுக்கள் தொடர்பில் குற்றம் தொடர்பாக அதனைச் செய்தவராக சந்தேகிக்கப்படுபவருக்கு எதிராக விசாரணை செய்து வழக்குத் தொடர உலகம் தழுவிய சட்ட அதிகாரம் தொடர்பான சட்டங்கள் ஒரு நாட்டின் தேசிய நீதிமன்றத்திற்கு அதிகாரங்களை வழங்குகின்றன. இக்கோட்பாடு மிகக் குறைந்தளவிலேயே பயன்பாட்டில் இருந்த போதிலும் சர்வதேச மன்னிப்பு சபை மேற்கொண்ட ஆராச்சியிலிருந்து உலகின் (200 நாடுகளில்) 125 நாடுகள் சர்வதேச ரீதியில் இடம் பெறும் குற்றங்களுக்கெதிராக குற்றவியல் அல்லது சிவில் குற்றவிசாரணைகளை மேற்கொள்ள உள்நாட்டிலேயே சட்டங்களைக் கொண்டுள்ளதாக தெரியவருகிறது. அவையாவன இன அழிப்பு, மனித இனத்திற்கு எதிரான குற்றங்கள், யுத்தக் குற்றங்கள், சித்திரவதை, நீதியைத் தாண்டிய (extrajudicial) தூக்குத்தண்டனை, காணமற்போகச் செய்தல் என்பனவாகும். அத்தோடு அவ்வாறான குற்றங்களைச் செய்தவர்களை 15 நாடுகள் தமது நாட்டில் உலகம் தழுவிய சட்ட அதிகாரத்தினை பயன்படுத்தி விசாரித்து அல்லது வழக்குத் தொடர்ந்து விசாரணை செய்து நாடு கடத்தியுமுள்ளன. அவை அவுஸ்ரேலியா, பெல்ஜியம், கனடா, டென்மார்க், பின்லாந்து, பிரான்ஸ், ஜேர்மனி, நெதர்லாந்து, நோர்வே, செனேகல், ஸ்பெய்ன், பிரித்தானியா, ஐக்கிய அமெரிக்கா மற்றும் மெக்சிக்கோ என்பன வாகும்.[13]

---

(13)சர்வதேச மன்னிப்பு சபையிலிருந்து பொழிப்புரை வழங்கப்பட்டது. Universal Jurisdicition(webpage), http://www.amnesty.org./en/international-justice/issues/universal-jurisdiction



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சர்வதேச குற்றவியல் நீதிமன்றமும் குறைநிரப்பும் ஏற்பாடும் (The International Criminal Court and Complementarity) (14)

ரோம் சட்ட விளக்க வரையறைச் சட்டம் (statute) 2002 ஆம் ஆண்டு சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தினை (ICC) நிறுவியது. சில சந்தர்ப்பங்களில் இந் நீதிமன்றம் (ICC) 1-01-2002 இன் பின்னர் இடம் பெற்ற இன அழிப்பு, யுத்த குற்றங்கள் மற்றும் மனித இனத்திற்கு எதிரான குற்றங்கள் போன்றவற்றை செய்ததாக கூறப்படும். தனிப்பட்டவர்களுக்கு எதிராக நாடுகள் விசாரிக்க விரும்பாத சந்தர்ப்பங்களில் விசாரணை செய்து வழக்குத் தொடரும் பணியைச் செய்து வருகிறது. ரோம் சட்ட விளக்க வரையறைச் சட்டத்தின் கீழ் உள்ள குறை நிரப்பும் ஏற்பாடு பற்றிய தத்துவத்தின் படி உள்நாட்டு நீதிமன்றங்கள் நீதி வழங்கும் கடமையை தொடர்ந்தும் செய்து வருகின்றன. அதனால் சர்வதேச குற்றவியல் நீதிமன்றமானது (ICC) இறுதி மாற்று ஏற்பாடாக மட்டுமே இருந்து வரும். உள்நாட்டு மட்டத்தில் நீதியை வழங்க நாடுகளை ஊக்கப்படுத்தும் ஒரு நிரந்தர ஏற்பாடாகவும் இது செயற்பட்டு வருகின்றது. இவ்வாறாக ரோம் சட்ட விளக்க வரையறைச் சட்டத்தின் மூலம் ஏற்படும் வாய்ப்புக்களில் பின்வருவன உள்ளடங்குகின்றன.

- உள்ளூர் நீதி முறையினை வலிமைப்படுத்தலும் பெருமளவினதான (Mass) குற்றங்களுக்கு எதிராக வழக்குத் தொடரும் கொள்திறனை அல்லது உள்ளார்ந்த வளத்தினை (Capacity) கட்டியெழுப்புதலும் அனைத்து நாடுகளும் தரப்புகளும் (Parties) தமது சட்டங்களை ரோம் சட்டவிளக்க வரையறைச் சட்டத்தினுடன் உறுதிப்படுத்துவதற்கு (Confirmity) ஆவன செய்தல் வேண்டும். அவ்வாறு செய்வதன் மூலம் யுத்தக் குற்றங்கள் மனித இனத்திற்கு எதிரான குற்றங்கள் மற்றும் இன அழிப்பு ஆகிய குற்றங்களுக்கு எதிராக விசாரணை செய்து வழக்குத் தொடரும் கொள்திறனை உள்நாட்டு மட்டத்தில் கட்டியெழுப்பக் கூடியதாயிருக்கும்.

- குற்றங்கள் முறையாக பின் தொடரப்பட்டு ஆவன செய்யப்படாது போகலாம் என்ற நிலைவரங்கள் காணப்படுமானால் அவ்வாறான சந்தர்ப்பங்களில் உள்நாட்டு நீதி முறை இடம் பெறுவதனை உறுதி செய்வதற்காக ஊக்குவிப்புக்கள் வழங்கப்படும். முக்கியமான இக்காரணி பல நாடுகளில் ஏற்கனவே இடம்பெற்றுள்ளன. சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தினை (ICC) தவிர்க்கும் நோக்கத்துடன் இது ஏற்பட்டிருந்தாலும் உள்நாட்டு குற்றவியல் நீதியை சர்வதேச தரங்களுக்கு ஒப்பானதாக நிறைவேற்றச் செய்வதன் மூலம் உள்நாட்டில் புதிய அபிவிருத்திக்கு வழி ஏற்பட முடியும் என்பதால் இறுதியில் நன்மைகள் ஏற்படுகின்றன என்று நம்பப்படுகின்றது.

- சர்வதேச ஆற்றலெல்லையினை வலிமைப்படுத்தலும் தேர்திறனை (selectivity) தவிர்த்தலும். சர்வதேச குற்றங்களை பாதிப்பு மிக்கவகையில் உள்நாட்டு மட்டத்தில் பின் தொடர்வதால் சர்வதேச நீதியானது சிற்சில நிலைவரங்களை பொறுத்து மட்டுமே கரிசனம் காட்டுகிறது என்பதனை உதாரணமாக ஆபிரிக்க கண்டத்திற்கு மாத்திரம் பொருத்தமாக இருக்கும் என்பது போன்ற நிலவரங்களை மட்டுப்படுத்தலாம். உள்ளூர் நீதி முறைகளை சில தரங்களில் இடம் பெறுவதனை வலியுறுத்தி நடைமுறைப்படுத்துவோமேயானால் உயரளவுகளில் அவற்றின் சட்டப்படியான நிலமையினை உறுதிப்படுத்தி ICC யுடன் இணைந்துள்ள சட்ட அதிகாரத்தின் வரையறைகளிலிருந்து விடுபடவும் முடியும்.

  மேலும் உள்ளூர் நிலவரங்களுக்கும் சிறப்பான முறையில் ஏற்றதாகவுமிருக்கும். உளளூர் நீதி விசாரணைகள் பாதிப்பு மிக்க விளைவுகளைக் கொண்டதாக இருந்தமைக்கு 1980களின் நடுப்பகுதியில் இடம் பெற்ற ஆர்ஜென்ரீனாவின் உள்நாட்டு வழக்கு விசாரணைகளிலும் தற்போது நடைபெற்றுவரும் அதன் இரண்டாவது சுற்று விசாரணைகளிலும் உதாரணங்களைக் காண முடியும். உள்நாட்டு சட்டங்களை விஸ்தரிப்பதன் மூலமாக குற்றமிழைத்தவர்கள் தொடர்பில் வலையினை / பிடியினை மேலும் இறுக்கமாக்க முடியும் என்பது போன்ற சிறந்த விளைவுகளைக் கொண்டுவரும் வகையில் ஆட்சிப்பரப்பு சார்ந்ததொரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருப்பத்தேர்வாகவும் இது அமைய முடியும்.

- கூடிய வழக்குகளை விசாரிக்க வாய்ப்பளிப்பதுடன் குற்றமிழைத்தவர்களை தண்டிக்காது விடும் (Impunity) இடைவெளி குறைபாட்டினையும் நிவர்த்தி செய்யலாம். சர்வதேச குற்றவழக்கு தொடருதல் கூடிய செலவினங்களைக் கொண்டிருப்பதுடன் எப்போதும் வளங்கள் தொடர்பில் கட்டுப்பாடுகளை கொண்டிருக்கும். கூடிய பொறுப்புக் கூறுதலின் மீது கூடியளவுக்கு குவியம் கொண்டதாகவும் இருக்கும். உள்ளூர் மட்டத்தில் கூடிய வழக்குகளை விசாரிக்க கூடியதாயிருப்பதுடன் இடைநிலையில் (mid level) குற்றமிழைத்தவர்களை சூழ்ந்ததாகவும் இருக்கின்றது. எனவே பெருமளவிலான எண்ணிக்கையில் பாதிப்புக்குள்ளாகியவர்களுக்கு குறை தீர்ப்பதனை உறுதி செய்ய நிலைமாற்றத்திற்கான ஏனைய பொறிமுறைகள் முக்கியமானவையாக இருக்கும் என நம்பப்படுகின்றது.

- சர்வதேச மற்றும் உள்ளூர் நீதி முறை நடவடிக்கைகளில் பணிபுரியும் சட்டத்துறை அலுவலர்களிடையே சிறந்த தொடர்புகளை கட்டியெழுப்புதல். சர்வதேச நீதி தீர்ப்பு மன்றங்களுக்கு அப்பாற் சென்று உள்நாட்டு நீதி முறைளை மீளக் கட்டியெழுப்புவது தொடர்பிலும் அதன் முலமாக சர்வதேச நீதி முயற்சிகளை மீள குவியப்படுத்தும் மரபுரிமைக் கட்டுப்பாடுகளையும் ஏற்படுத்த முடியும்.

(14) Marieke Wierda, "The Potential of Complementarity," ICTJ Briefing Paper (September 2009). **In particular, see the section, A System of Law with Global Potential, 1-2**

## கையேடு: இழப்பீடு வழங்குதல் / செய்தல் பற்றி விளங்கிக் கொள்ளுதல் (Understanding Reparation) (15)

இழப்பீடு வழங்குதல் என்றால் என்ன?

ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டதும் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டதுமான அத்து மீறல்களினால் சேதங்களுக்குள்ளான தனிப்பட்டவர்களினதும் சமூகங்களினதும் உரிமைகளை மீளப் பாதுகாப்பது தொடர்பில் தேவைப்படும் திருத்தங்களுக்காக பாதிக்கப்பட்டவர்களது உரிமை மீறப்பட்டமையுடன் சம்பந்தப்பட்ட நாட்டின் அரசு அவற்றை அங்கீகரித்து பாதிப்புக்குள்ளானவர்களது உரிமைகள் மீறப்பட்டதனால் ஏற்பட்ட துயரங்களுக்கு ஆவன செய்வதனையே இழப்பீடு வழங்கும் முறையெனப்படுகின்றது. இழப்பீடு வழங்கும் செய்முறை நிகழ்ச்சியின் நோக்கங்களில் பின்வருவன உள்ளடங்குகின்றன.

- இழைக்கப்பட்ட தீங்குகளுக்குரிய எதிர்மாற்றீடை வழங்குவதிலும், நட்ட ஈடு மற்றும் மறு சீரமைப்புக்கான (Rehabilitation) எதிர்பார்ப்புக்களை முழுமையாக நிறைவேற்றுதலும்.

- அரசின் மீதான நம்பிக்கையினையும் மனித உரிமைகளை பாதுகாக்கும் அதன் ஆற்றல்களையும் கட்டியெழுப்புதல்.

- நிலைத்து நிற்கக்கூடிய சமாதானத்திற்கு பங்களித்தல்

இழப்பீடு செய்தல் வேறுபட்ட அளவுகளிலும் இருக்கலாம். :

- நட்ட ஈடு (சேதங்களுக்கு வழங்கும் கொடுப்பனவுகள்) : வழக்கமாக இது பணரீதியாக வழங்கப்படுவதாகும். பாதிக்கப்பட்டவர்களுக்கு இழைக்கப்பட்ட தீங்குகளுக்காக வழங்கப்படுவது.

- மறுசீரமைப்பு (புனருத்தாரணம்) (பாதிக்கப்பட்டவர்களது தேவைகளுக்கு உதவுவதற்காக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்கப்படும் சேவைகள்) கல்வி, சுகாதாரம், (சிறப்பு ஆலோசனை வழங்கல் மற்றும் மன, பௌதீக சுகாதாரம் உள்ளிட்டவை) சட்டவுதவி, பொருளாதார உதவி (நுண்பாக கடன் திட்டங்களை பெற்றுக் கொள்ளுதல், ஒரே தடவையாக கொடுப்பனவு அல்லது மாதாந்த ஓய்வூதியக் கொடுப்பனவு)

- மீட்டளிப்பு: (இயன்றளவுக்கு முன்னைய நிலவரத்திற்கே கொண்டு செல்லுதல்) மீள தொழிலில் அமர்த்தப்படல், முழு பிரஜாவுரிமை, திருடப்பட்டவற்றை மீளப்பெறல், அல்லது மற்றும் சேதப்பட்ட சொத்துக்களை திருத்திக் கொள்வதற்கான ஏற்பாடு

- பாதிக்கப்பட்டவர்களை முறையாக அடக்கம் செய்தல் (குடும்பங்களால் பொருத்தமான சடங்குகளை செய்யக் கூடியதாயிருத்தல்)

அடையாள இழப்பீடு " அடையாளப் பெறுமானம் என்பவற்றில் பின்வருவன உள்ளடங்குகின்றன.

- அத்து மீறல்களுக்குப் பொறுப்பானவர்கள் பாதிப்புக்குள்ளனவர்களிடம் மன்னிப்புக் கோரல்

- பாதிக்கப்பட்டவர்களுக்கு சமர்ப்பணம் செய்யும் வகையினதான நினைவுச் சின்னங்கள் அல்லது அங்கீகரிக்கப்பட்ட ஏனையவகையினதான நினைவுச்சின்னங்கள்.

- தேசிய நாட்களில் நினைவுபடுத்தல், கடந்தகால (இவ்வாறான) சம்பவங்களை நினைவுபடுத்தும் வகையில் பொது இடங்கள் மற்றும் தெருக்களுக்கு மீளப்பெயரிடுதல், முன்னாள் படுகொலைக்களங்கள், தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த இடங்களை அடையாளம் செய்து நினைவுபடுத்தல்.

- காணாதிருப்பவர்களை கண்டறிதலும் பாதிப்புக்குள்ளாகி இறந்து போனவர்களது உடல்களை தேடிக் கண்டுபிடித்தலும்.

இவ்வறான அடையாள இழப்பீடுகளும் கூட பாதிக்கப்பட்டவர்களுக்கு மனத்திருப்த்தியினை அளிப்பதுடன் அவற்றில் இவ்வாறான அத்துமிறல்கள் எப்போதும் இனிமேல் இடம்பெறமாட்டதென்றும் உறுதி மொழிகளை உள்ளடக்கிய நடவடிக்கைளும் உள்ளடங்கியிருக்கும் என்றும் குறிப்பிடப்படுகின்றது.

கூட்டாக இழப்பீடு செய்தல்: இது ஒரு சமூகம் அல்லது குறித்த ஒரு குழுவினராக பாதிப்புக்குள்ளாகியவர்களுக்கு பொருள் வடிவிலோ அல்லது அடையாள இழப்பீடாகவோ இழப்பீடு வழங்கும் வழிமுறையாகும். உட்கட்டமைப்பு வசதிகளை செய்தல் பொருள்வடிவினதான இழப்பீடு வழங்கலாக இருக்கும் அல்லது சமூக நிலையங்கள் போன்ற திட்டங்களும் பாதிக்கப்பட்ட முழு சமூகத்தினையும் மீட்புப்பெற உதவுவதாக இருக்கும்.

அடையாள மற்றும் பொருள்வடிவ இழப்பீடு செய்யும் நடவடிக்கைள் ஒருங்கிணைவாக ஒரேசமயத்தில் நிகழ்வதாக இருத்தல் அவசியம். பாதிக்கப்பட்டவர்களுக்கான அடையாள இழப்பீடு செய்தலுடன் இணைந்ததாக பொருள்வடிவ இழப்பீட்டினையும் மேற்கொள்ளும் போதே அது கூடிய பெறுமானம் கொண்டதாக இருக்கும். மறுபுறத்தில் பார்க்கும் போது பாதிக்கப்பட்டவர்களுக்கு அடையாள அங்கீகாரம் வழங்காத போது, பொருள்சார் நன்மைகள் உள்ளிட்ட இழப்பீடுகள் மாத்திரம் வழங்கப்பட்டிருக்குமேயானால் அதனால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தமது சேதங்கள் "பழுதுபார்க்கப்பட்ட" உணர்வுகளைக் கொண்டுவந்து துயரங்களை குறைப்பதாயிருக்கும்.

(15) இக்கையேட்டினை தயாரிக்க பயன்படுத்திய மூலகங்களில் பின்வருவன அடங்குவன " What are Reparations" ICTJ 's Public Information Sheet for Timor – Lete (2010); and Lisa Magarrell " Reparations in Theory and Practice" ICTJ Reparative Justice Series (2007).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இழப்பீடு செய்தல் ஏன் முக்கியமாகிறது?**

மீறல்களுக்காளாகிய பாதிக்கப்பட்டவர்களது உரிமைகளை நிவர்த்தி செய்வதனை நோக்கமாக கொண்டதாக இழப்பீடு செய்தல் இடம் பெறுவதால் அது முக்கியமாகிறது. அத்துடன் முரண்பாடுகள் காரணமாக சிதைந்து போன சமூகத்தின் அமைப்பினையும் அது திருத்துவதாக செயற்படும். ஒரு முரண்பாடு முடிவுற்றிருந்தாலும் அதன்போது ஏற்பட்ட மனித உரிமை மீறல்களால் பலர் அவற்றின் எதிர்மறையான விளைவுகளால் பெரும் பாதிப்புக்குள்ளாகி விடுகின்றனர். அவர்கள் அனுபவித்த துன்பங்களுக்கும் முரண்பாடுகளின் போது அவர்கள் அளித்த பங்குகளுக்கும் உத்தியோக பூர்வமாக அங்கீகாரத்தை பெற அவர்கள் காத்திருப்பார்கள். அடைந்த பௌதீக மற்றும் மனோரீதியான காயங்களுக்கான பொருள் உதவிகளும் அடையாள அங்கீகாரமும் பாதிக்கப்பட்டவர்களில் பலருக்கு தேவைப்படுவதாக இருக்கும். அத்துடன் அவர்களுடைய கௌரவம் புதுப்பிக்கப்படல் வேண்டும் என்றும் எதிர்பார்ப்பர். பாதிக்கப்பட்டவர்களது மனித உரிமைகள் மீறப்பட்டிருந்தால் அவற்றிற்கான பரிகாரம் அல்லது நிவாரணம் வழங்கப்படல் வேண்டும் என்னும் அவர்களது உரிமைகளை சர்வதேச மற்றும் உள்ளூர் சட்டங்கள் அங்கீகரிப்பனவாக உள்ளன. ஒரு நாட்டின் அரசு பாதிக்கப்பட்டவர்களது தேவைகளை நிவர்த்தி செய்வதற்கு ஆவன செய்ய வேண்டும் என்பதற்கு முன்னுரிமை வழங்குமானால் அது அந்நாடு பாதிக்கப்பட்டவர்களுக்கு தீர்வுகளை / நிவாரணங்களை வழங்க கொண்டிருக்கும் அர்ப்பணிப்புக்களை பிரதிபலிப்பதாயிருப்பதுடன் மனித உரிமைகளை வலிமைப்படுத்துவதாகவும் வன்முறைகள் இடம் பெறுவதனை கண்டிப்பதாகவும் அவற்றின் வாயிலாக நாட்டின் அரசின் மீது பாதிக்கப்பட்டவர்களது நம்பிக்கையினை கட்டியெழுப்பவும் வாய்ப்புக்களை ஏற்படுத்துவதாகவுமிருக்கும். இழப்பீடுகள் செய்வதால் அவை பாதிக்கப்பட்டவர்களது நிலமைகளை விளங்கிக் கொள்வதனை ஊக்குவிப்பதாக இருப்பதன் காரணமாக அது சமூக கூட்டொருமைப்பாட்டினை வலிமைப்படுத்துவதாக இருப்பதோடு, அவர்கள் நாட்டிற்கு வழங்கிய பங்களிப்பினை விளக்கி அங்கீகரிப்பதாகவும் இருக்கும். இவையாவும் நாட்டுக்கு அல்லது சமூகத்துக்கு நீண்டகால ஸ்த்திரதன்மைக்கு பங்களிப்பதாக இருக்கும்.

நீண்டகால முரண்பாடு அல்லது அடக்கு முறை ஆட்சி நிலவியதால் மனித உரிமை மீறல்கள் பெருமளவில் ஏற்பட்டு துன்பங்களுக்கு ஆளாகியவர்களைக் கொண்ட நாடுகளில் இழப்பீடு செய்யும் நிகழ்ச்சிகள் வழக்கமாக நடைமுறைப்படுத்தப்படுகின்றன. பெருமளவான எண்ணிக்கையில் அத்துமீறல்கள் இடம் பெற்றிருக்கும் சந்தர்ப்பங்களில் உள்ளூர் நீதிமன்ற முறைகளால் அவற்றை கையாள முடியாத நிலவரம் காணப்படுவதால் சம்மந்தப்பட்ட நாட்டு அரசாங்கம் அவற்றை கவனித்து ஆவன செய்ய அல்லது பாதிக்கப்பட்டவர்களது நிலவரங்களை (துயரங்களை) அங்கீகரிக்க எண்ணுகிறது. கடந்தகால முரண்பாடுகளின் எதிர்மறைத் தாக்கங்களுக்கு ஆவன செய்ய வேண்டி வழக்கமாக இழப்பீடு செய்தலும் இடம்பெறவேண்டும். உதாரணமாக பிரஜைகளது மனித உரிமைகளை கௌரவிப்பதனை உறுதி செய்ய அரசாங்கம் நிறுவன ரீதியாக சீர்த்திருத்தம் எதனையும் கொண்டிராத போது அத்துமீறல்கள் ஏற்படுவது இலகுவாகிவிடும். அதனால் இழப்பீடு செய்வதற்கான நடவடிக்கைகள் அங்கே பயனற்றனவாக்கிவிடமுடியும். இழப்பீடு செய்யப்பட்டு ஆனால் குற்ற மிழைத்தவர்களை பொறுப்புக் கூற கொண்டு வர முயற்சிகள் ஏதும் செய்யாது போகுமானால் அது பாதிப்புக்குள்ளானவர்களை தமது உரிமைகளுக்கு இழப்பீடு வழங்கி நடவடிக்கைகள் இடம் பெற்றாலும் கூட குற்றவியல் நீதியை மட்டுமே வழங்கியுள்ளதாகவே எண்ணுவர். குற்றவியல் நீதி நிவாரணத்திற்கான ஒரு மாற்று ஏற்பாடு என இழப்பீடு செய்தலைக் கருதக்கூடாது. ஆனால் (இழப்பீடு செய்தல் என்பது) இடம் பெற்ற துஸ்பிரயோகங்களின் பாதிப்புக்களை அங்கீகரித்து அல்லது ஏற்றுக்கொண்டு ஆவன செய்யும் உபாயங்களின் ஒரு பகுதி மட்டுமே என்பதனை விளங்கிக்கொள்ள வேண்டும்.

அதேபோல் இழப்பீடு வழங்குதல் என்பது ஒரு சமூக மட்டத்திலான உதவியோ அல்லது நீண்டகால சேவை புரிந்தவர்களுக்கான உதவித் திட்டமோ அல்ல சமூக உதவி திட்டங்கள் அனைத்து பிரஜைகளினதும் வழக்கமான உரிமைகளாகும். அதனைப்பெற அவர்கள் வலங்குறைந்தவர்களாக அல்லது வயோதிபம் அடைந்தவர்களாய் இருக்க வேண்டும் என்ற நிபந்தனையையே பூர்த்தி செய்ய வேண்டியிருக்கும். நீண்ட கால சேவையினைப் புரிந்த படைவீரர்கள் போன்றோருக்கு வழங்கப்படும் நன்மைகள் அல்லது கொடுப்பனவுகள் அவர்கள் நாட்டுக்கு செய்த சேவைக்காக நன்றி தெரிவித்தும் முன்னாள் போராளிகளான அவர்களை பொது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(சிவில்) வாழ்க்கையுடன் மீள இணைத்துக் கொள்வதற்கான குறிக்கோளை கொண்டதாகவும் இருக்கும். ஆனால் இழப்பீடு செய்தல் என்பது அத்துமீறல்களினால் துயருற்றவர்களுடன் தொடர்புடையதாகும் என்பதோடு அவற்றிற்கான இழப்பீடு செய்யும் ஏற்பாடுகளும் வழக்கமாக அத்துமீறல்களினால் ஏற்பட்ட தீங்குகளுக்கு ஆவன செய்வதுடன் தொடர்புடையவற்றினை உள்ளடக்கியனவாயிருக்கும்.

இழப்பீடு செய்யும் நிகழ்ச்சிகளை நடைமுறைப்படுத்த பலதரப்பட்ட பொறிமுறைகளை பயன்படுத்தலாம். நிகழ்ச்சியினை நடைமுறைப்படுத்த ஒரு சிறப்பு நிறுவனம் உருவாக்கப்படலாம். அதற்கு பயன்களை வழங்குவதற்கான தேர்வு முறைகள் தீர்மானிக்கப்படல் வேண்டும் - தேவையான தரவுகளை சேகரிக்க வேண்டும் - அடுத்து பயனடைய வேண்டியவர்களுக்கு இழப்பீடு வழங்கப்படுதல் வேண்டும். இழப்பீடு வழங்கும் பொறுப்பினை ஒரே நிறுவனத்திடம் ஒப்படைப்பதால் பலதரப்பட்ட நன்மைகள் ஏற்பட வாய்ப்புண்டு: அது பாதிக்கப்பட்டவர்கள் தொடர்பில் அரசின் அர்ப்பணிப்பினை எடுத்துக்காட்டுவதயிருக்கும். ஒரே நிறுவனத்திடம் மட்டும் தொடர்பு கொண்டு தகவல்களை பெற்றுக்கொள்ளக் கூடியதாயிருப்பதால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தகவல் பெறும் செய்முறைகளும் இலகுவாக்கப்படுகின்றன. இவற்றோடு இழப்பீடு வழங்குவதற்காக ஒதுக்கப்பட்ட வளங்களின் அளவு பற்றியும் இலகுவாகத் தெரிந்து கொள்ள முடிகிறது. ஆயினும் இழப்பீட்டினை வழங்குவதற்கு ஒரு புதிய நிறுவனத்தை நிறுவும் போது பெருமளவு வளங்கள் தேவைப்படும் என்பது ஒருவகையில் எதிர்மறையானதோர் அம்சமாக இருக்கும் என்பதும் கவனிக்கத்தக்கதாகும்.

இன்னுமோர் மாற்று வழிமுறையும் உண்டு. அதாவது தற்போது நடைமுறையில் செயற்பட்டுவரும் அரசாங்க நிகழ்ச்சி நிரல்களையும் அமைப்புக்களையும் இழப்பீடு வழங்கப் பயன்படுத்துவதாகும். உதாரணமாக திமூர் - லெஸ்தே நாட்டில் நடைமுறையிலிருந்த சமூக கூட்டொருமை (MSS) அமைச்சு பாதிப்புள்ளாகக் கூடிய பிரிவினர்களுக்கு உதவிகள் அளித்து வந்த அதன் நிகழ்ச்சி நிரல்களை மறு ஆய்வு செய்து திருத்தி அமைத்து பின்னர் மனித உரிமைகள் மற்றும் அத்துமீறல்களுக்கு ஆளாகி பாதிப்புக்களுக்குள்ளாகியவர்கள் அவ்வமைச்சை இலகுவாக அணுகக்கூடியமையினை உறுதி செய்திருந்தது. எவ்வாறாயினும் இழப்பீடு பெறுதல் என்பது பிரஜைகள் வழக்கமாக பெற்றுக் கொள்ள உரித்தானவற்றிற்கு மேலதிகமான கொடுப்பனவுகள் அல்லது. உதவிகள் வழங்குதல் என்பதனையும் கவனித்தல் அவசியம். இதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட சிறப்பு அலுவலர் பயனடைய வேண்டிய நபர்களை சமூக உதவிகளைப் பெற்றுக்கொள்ளுவதற்கு தேவையான ஆவணப்படுத்தலை பெற்றுக்கொள்ள உதவி செய்யலாம். பாதிக்கப்பட்டவர்களது துயரங்களை அடையாளமாக (Symbolic) அங்கீகரிக்கும் செய்முறைகளை பல்வேறு முறைகளில் செயலுருவாக்கிக் காட்டலாம்: பயனடைய வேண்டிய ஒருவருக்கு அவர் அவ்வுதவியினை பெற அருகதையானவர், அவருக்கு இழைக்கப்பட்ட மனித உரிமை அத்துமீறல் காரணமாக துயருற்றமைக்காக அது வழங்கப்படுகின்றது என்பதனை விளக்கும் ஒரு கடிதத்தை வழங்கியும் அவற்றிற்காக பயனடைய தெரியப்பட்டவரது பெயரை உத்தியோக பூர்வமான பாதிக்கப்பட்டவர்களின் தரவுத்தளத்தில் (Database) பதிந்தும் அல்லது ஒரு சான்றிதழை அல்லது அங்கீகார பதக்கம் (Medal) ஒன்றினை வழங்கியும் உறுதிப்படுத்தலாம். இழப்பீடு செய்தலை சமூக உதவி உபாயத்தின் ஒரு பகுதியாக வழங்குவதாக இருந்தால், அரசியல் வன்முறைகளால் ஏற்பட்ட பாதிப்புக்களுக்காக நன்மைகள் அல்லது உதவிகள் வழங்கப்படுகிறது என்பதனை வேறுபடுத்தி காட்டுவது முக்கியமானதாகும். இதன் மூலம் ஏனைய காரணிகளின் நிமித்தம் பாதிக்கப்பட்டமைக்காக உதவிகள் வழங்கப்படுவதிலிருந்து இதனை வேறுபடுத்திக் காட்டவேண்டும். அவ்வாறு செய்வதனால் அரசு பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு வழங்கச் செய்யும் முயற்சிகள் மெய்ப்பித்துக் காட்டப்படுவதுடன் தமது துயரங்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளது என்பதனை உணரவும் கூடியதாயிருக்கும். இழப்பீடு வழங்குதல் தொடர்பில் ஆட்சேபனைகள் எழுப்பப்பட முடியும் என்பதனை ஊகித்துப் பார்த்தலும் பயனுடையதாக இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மறுப்பு (Objection): அரசு, மனித உரிமை அத்துமீறல் குற்றத்தை செய்யவில்லை. அது எதற்காக இழப்பீடு வழங்க அல்லது கொடுக்க வேண்டும்?**

வழக்கமாக அத்து மீறல் குற்றத்தைச் செய்த ஒருவரே இழப்பீடு வழங்குவதற்காக (கொடுப்பணவினை) கொடுக்க வேண்டும். எவ்வாறாயினும் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்சபை இது பற்றி குறிப்பிட்டு கூறியுள்ளமை கவனிக்கத்தக்கது. எந்தவொரு தரப்பினரும் அவரிழைத்த துயரத்தால் வருந்துபவருக்கு தமது கடமைப் பொறுப்பை நிறைவேற்ற முடியாத அல்லது நிறைவேற்ற விரும்பாத நிலவரம் ஏற்படுமானால் அரசுகள் இயன்றளவு முயற்சித்து இழப்பீடு வழங்குவதற்காக தேசிய நிகழ்ச்சி நிரல்களை உருவாக்கியும் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஏனைய உதவிகளை வழங்கியும் நிவாரணம் வழங்க வேண்டுமென அறிவித்துள்ளது. சில நாடுகளில் அபிவிருத்தி தொடர்பிலான பங்காளிகள் இழப்பீடு வழங்கும் நிகழ்ச்சிகளுக்கு நிதியுதவி மற்றும் தொழில்நுட்ப உதவிகளை வழங்கி ஆதரவு அளித்துள்ளனர். அரசாங்கம் இழப்பீடு வழங்குதலை தனது தேசிய முன்னுரிமை சார்ந்த பணியாக அடையாளம் செய்யுமேயானால் நீதி மற்றும் ஸ்த்திரத்தன்மையினை ஊக்குவிப்பதற்கு தன்னை அர்ப்பணித்துக் கொண்ட சர்வதேச சமூகங்கள் இவற்றிற்கு ஆதரவு வழங்குவது பெரிதும் சாத்தியமானதாகும்.

**மறுப்பு: எமது துயரங்களை பணத்திற்கு பரிமாறிக்கொள்ள எமக்கு விருப்பமில்லை**

இழப்பீடு வழங்குவதன் நோக்கம் மக்களது துயரங்களை பணத்தோடு பரிமாற்றம் செய்து கொள்வதல்ல. ஆனால் இழப்பீட்டை அல்லது திருத்தத்தை வேறான முறைகளில் வழங்குவதாகும். உதாரணமாக சேவைகளை வழங்குவதனூடாக பாதிக்கப்பட்டவர்களை மறுசீரமைப்புக்கு அல்லது புனருத்தாரணத்திற்கு உட்படுத்துவதாகும். பாதிக்கப்பட்டவர்கள் பெரும்பாலும் அவர்களுடைய குழந்தைகளுக்கான கல்வி வசதிகளை பெற்றுக்கொள்ளுதல், சிறிய வியாபாரம் ஒன்றை செய்வதற்கான கடனுதவி, தமது வீட்டை திருத்தியமைத்துக் கொள்வதற்கான உதவி, அல்லது ஆரோக்கியப் பிரச்சினைகள் தொடர்பில் சிகிச்சை பெற்றுக் கொள்வதற்கான உதவி போன்றவற்றையே கோரி நிற்பர். பாதிக்கப்பட்டவர்கள் தமது துயரங்களை பணத்திற்கு பரிமாறிக் கொள்ள விரும்புவதில்லை ஆனாலும் அரசு அவர்களை மதித்து அவர்களுக்கு இழைக்கப்பட்ட மனித உரிமை மீறல்களினால் ஏற்பட்ட பாதிப்புக்களிலிருந்து மீண்டுவர உதவி செய்ய வேண்டும் என எதிர்பார்ப்பார்கள்.

**மறுப்பு: அனைத்து பிரஜைகளுக்கும் அபிவிருத்தியை ஏற்படுத்துவதில் கவனம் செலுத்துதல் மிக முக்கியமானதாகும்.**

அபிவிருத்தி முக்கியமானதாகும். ஆனால் இழப்பீடுகள் வழங்கப்படுவதற்கான மாற்றீடு அதுவல்ல. அனைத்து பிரஜைகளும் அபிவிருத்தியின் மூலம் நன்மையடைய வேண்டும். அத்துடன் பாதகமான சூழலில் வாழும் பிரஜைகளால் அரசாங்கத்தின் சமூக உதவிகளை அணுகி நன்மை பெறக்கூடியதாயிருத்தலும் அவசியம். இருந்தபோதிலும் இழப்பீடு வழங்குதல் என்பது மனித உரிமைகள் அத்து மீறப்பட்டதனால் பாதிப்புக்குள்ளானவர்களுக்கு உரித்தானதாகும். அவர்களுடைய துயரங்களை குவியப்படுத்தி திருத்தங்களை செய்வதனை அங்கீகரிப்பதுவுமாகும். அபிவிருத்தி நிகழ்ச்சிகளுடன் இழப்பீடுகள் வழங்குவதனை சமப்படுத்திப் பார்க்க முடியாத போதிலும் அவை அபிவிருத்தியின் நோக்கங்களான பாதிப்புக்குள்ளாகக் கூடிய நபர்களது நிலவரங்களை மேம்பாடடையச் செய்தும், பாதுகாப்பானதும் ஸ்திரமானதுமான நாட்டை உருவாக்க ஊக்குவிக்க முடியும் என்பனவாகும். மனித உரிமைகள் மீறப்பட்டதனால் ஏற்பட காரணமாயிருந்த நிலமைகளை மேம்படையச் செய்வதன் மூலமாக பொருள்வகையிலான இழப்பீடு வழுங்குதலின் மூலம் சமூக பொருளாதார ரீதியாக அவர்களுக்கு ஏற்படக்கூடிய பாதிப்புக்களை குறைவடையச் செய்ய முடியும். புதிய பரம்பரையினருக்கு நாட்டின் முரண்பாடுகள் பற்றிய வரலாற்றை கற்பிப்பதன் மூலமும் ஏதோ ஒரு நோக்கத்தை அடைவதற்காக வன்முறையினை பயன்படுத்துவதன் விளைவாக ஏற்படக்கூடிய எதிர்மறைத் தாக்கங்களின் எதிர்மறை விளைவுகள் பற்றிய புரிந்துணர்வினை ஏற்படுத்த முடியும். எனவே இழப்பீடு வழங்கும் செய்முறைகளால் சமூகத்தில் ஏற்படக்கூடிய பாதிப்புக்களை குறித்து ஸ்திரத்தன்மையினை உருவாக்க முடிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மறுப்பு: அரசாங்கம் இழப்பீட்டுக்கான கொடுப்பனவுகளை வழங்குவதென்பது ஒரு வகையில் பாதிக்கப்பட்டவர்களை விலைக்கு வாங்குவதாகாதா? பாதிக்கப்பட்டவர்களை நீதி தொடர்பான பிரச்சினை பற்றி வினா எழுப்புவதிலிருந்து அமைதியாக்கிவிடாதா?**

இழப்பீடு வழங்கும் நிகழ்ச்சிகள் வேறெந்த நிலைமாற்றத்திற்கான நீதி பொறிமுறைகளுக்கும் உதாரணமாக குற்ற வழக்கு தொடரல் போன்றவற்றிற்கான மாற்றீடாக அமைய முடியாது என்பது கவனிக்க வேண்டிய ஒன்றாகும். எனவே பாதிப்புக்குள்ளானவர்களுக்கு இது பற்றி தெளிவாக கூறி புரியவைக்க வேண்டும். அத்துடன் அவர்களுக்கு இழப்பீடு வழங்குவதன் காரணமாக அவர்களுக்கு மேலும் தேவையான நீதியை பெற்றுக் கொள்வதற்கான உரிமை அகற்றப்படாது என்பதனை மீளவும் உறுதி செய்தலும் வேண்டும்.

**மறுப்பு: பொருள் வகையினதான இழப்பீடு வழங்குதல் ஒரு சிலருக்கு மட்டுமேயாக இருந்தால் ஏனையவர்கள் பொறாமை கொள்ளமாட்டார்களா? அல்லது மனக்கசப்புற்று வேறேதும் முரண்பாடுகளை தோற்றுவிப்பனரா?**

இழப்பீடு வழங்கும் நிகழ்ச்சிகள் சமூகத்தில் சிலரிடையே பொறாமைகளை உருவாக்குவதற்கான மூலமாக செயற்படலாம் என்பது உண்மையாகும். இழப்பீடு வழங்குவதற்காக தீர்மானிக்கப்படும் பயன்பாட்டாளர்கள் தேர்வு முறை முரண்பாடுகளை உருவாக்கலாம் என்பது பற்றி சில தலைவர்கள் கரிசனத்துடன் இருப்பார்கள். எவ்வாறாயினும் இவ்வாறான இடர்கள் (Risks) நீண்டகால சேவை புரிந்தவர்கள் (படைவீரர்களை) யாரென்பதனை தீர்மானிக்கும் செய்முறைகளிலும் எதிர் நோக்கப்படுகிறது. இவ்வாறான பிரச்சினைகளை எவ்வாறு முகாமைத்துவம் செய்யலாம் என்பது பற்றி அரசாங்கங்களுக்கு கடந்த கால அனுபவங்கள் உள்ளன. அவற்றை எவ்வாறு குறைந்தபட்சமாக்கலாம் என்பது பற்றியும் அவற்றிற்கு தெரியும். அவற்றில் பின்வருவன உள்ளடங்குவன.

- பெருமளவான இழப்பீடு வழங்கும் நிகழ்ச்சியினை நடைமுறைப்படுத்தல்: அடையாள இழப்பீடு வழங்குதலுக்கு பெருமளவான அல்லது நிறைய வளங்கள் தேவைப்படாது என்பதால் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் அதனை கிடைக்கச் செய்ய முடியும். உதாரணமாக தேசிய நினைவு நாட்கள் மூலமாக பாதிக்கப்பட்ட அனைவரையும் நினைவுபடுத்தும் நிகழ்ச்சிகள் மூலமாக அல்லது அரசு அனைத்து பாதிக்கப்பட்டவர்களையும் அங்கீகரிக்கும் கடிதத்தினை வழங்குவதன் மூலமாகவும் இதனைச் செய்யலாம்.

- இழப்பீட்டினை பெற்றுக் கொள்பவர்களை தீர்மானிக்கும் தெரிவு முறைகள் தெளிவாக, நியாயமாக மற்றும் சமூகத்தின் மனபான்மைகளை பிரதிபலிப்பதாக இருப்பதன் மூலமாக,

- இழப்பீடு வழங்கும் நிகழ்ச்சிகளில் பாதிக்கப்பட்டவர்களது பங்கேற்றல் மற்றும் கலந்துரையாடல்களை உறுதி செய்தல் மூலமாக

- பொருளாதார இழப்பீடு வழங்கும் நிகழ்ச்சிகளில் உதாரணமாக நன்மையடைபவர்களை தேர்வு செய்யும் முறை அவர்கள் எவ்வெவ்வகையான உதவிகளைப் பெறமுடியும் என்பது பற்றிய விபரங்கள் (பெறமுடியாதவை யாவை?) இக்குறிப்பிட்ட நிகழ்ச்சி எதற்காக உருவாக்கப்பட்டது என்பது போன்ற விபரங்களை விளக்குவதற்கான சிறப்புப் பிரச்சாரங்களைச் செய்தல் மற்றும் பொருளாதார நன்மைகளை பெற்றுக் கொள்ள தெரிவு செய்யப்பட வேண்டியவர்களை தெரியும் செய்முறைகள் மற்றும் அதற்கு பயன்படுத்திய தீர்மான செய்முறைகள் என்பன சமூக அங்கத்தினர்களுக்கு அர்த்தமுள்ளதாக தென்படுவதாகவும் இருத்தல் வேண்டும்.

- இழப்பீடு நிகழ்ச்சிகளை செயற்படுத்துகையில் அவை வெளிப்படைத்தன்மை வாய்ந்தனவாகவும், ஊழல்கள், வேண்டப்பட்ட உறவினர்களுக்கு சகாயமாக செயற்படுதல் என்பன அதி குறைந்த பட்சமாவதனை உறுதி செய்தல் என்பன அவசியமாகின்றன. தவறான நடைமுறைப்படுத்தும் செய்முறைகள் தொடர்பில் முறைப்பாடு, மேன்முறையீடு என்பவற்றிற்கான பயன்மிக்க பொறிமுறைகளை உருவாக்கி அவை பற்றி பல இடங்களிலும் பிரசித்தமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரவச் செய்தல் வேண்டும்.

தெரிவு செய்த முறையின் மூலம் பொருள் வகைகளில் / பொருளாதார (material) இழப்பீடுகளை வழங்குவதால் வேறுதரப்பினரிடம் ஏற்படக்கூடிய கோபம் அல்லது வன்மங்களை மேற்படி பொறிமுறைகள் மூலம் குறைக்கக் கூடியதாயிருப்பதுடன் அவற்றையும் மீறியதாக ஏதும் மனக்குறைகள் அவர்களிடம் ஏற்படுமானால் அவற்றினை தணிக்க வன்முறையற்ற வழிமுறைகளில் ஏற்பாடுகளைச் செய்யலாம்.

**மறுப்பு: "இழப்பீடு வழங்கும் நிகழ்ச்சிகளை நடைமுறைப்படுத்த வளங்கள் இல்லை"**

இழப்பீடு வழங்கத் தேவையான நிதியின் அளவானது குறிப்பிட்ட திட்டத்தின் கீழ் வழங்க வேண்டிய உதவிகளுள் மற்றும் நன்மையடைய வேண்டியவர்கள் எவ்வாறு வரைவிலக்கணப்படுத்தப்பட்டுள்ளனர் என்பதில் தங்கியுள்ளது. பாதிக்கப்பட்டவர்களில் எவறெவர் உதவிகளைப் பெறமுடியும் என்ன வகையினதான உதவிகள் வழங்கப்பட வேண்டும் என்பன போன்ற விபரங்களும் தேவை. சுகாதார சேவைகள், ஓய்வூதியம், புலமைப்பரிசுகள், நுண்பாக கடன் வசதி என்பன இவற்றில் உள்ளடங்குவனவா? ஒரு நாட்டினால் தாங்கக்கூடிய அளவுக்கே இழப்பீடு வழங்கும் நிகழ்ச்சி பெரிதாகவோ அல்லது சிறிதாகவோ இருக்க முடியும். இழப்பீடுகளை வழங்குவதற்கு தேசிய முன்னுரிமையாக ஏற்றுக் கொள்ளப்பட்ட அரசியல் உடன்பாடு இருக்குமானால் அத்தகைய நிலையில் இழப்பீடு வழங்குவதற்கான நிகழ்ச்சியை நடைமுறைப்படுத்துவதற்கான நிதி வசதி இருக்கும். அவ்வறான நிகழ்ச்சிகளுக்கு நிதியுதவி கோரி சர்வதேச ரீதியாக நிதி வழங்கக்கூடியவர்களையும் அணுகலாம். அதேவேளையில் குறித்த நாட்டினால் சமாளிக்க முடியாத அளவுக்கு பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை இருக்குமானால் அவ்வாறான நிலவரங்களின் போது முரன்பாட்டினால் மிகமோசமாக பாதிக்கப்படக்கூடிய பிரிவினருக்கு மாத்திரம் பொருள் வகையிலான (பொருளாதார) இழப்பீடுகளை வழங்கும் நிகழ்ச்சினையும் தயார் செய்ய முடியும்.

**கையேடு: இழப்பீடு வழங்குவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளும் போது கவனத்திற் கொள்ளவேண்டியவை** (16)

ஆணை:

- பகிர்ந்து வாழும் எதிர்காலத்தை உருவாக்கும் போது கடந்த கால துஸ்பிரயோகங்களுக்காக ஆவன செய்தல் மிகமுக்கியமானதாகும்.
- உரிமைகளுக்கு உரித்தானவர்களாக பாதிக்கப்பட்டவர்களுக்கு அந்தஸ்தளிப்பதற்கு ஆதரவளித்தல்
- கடந்த காலத்தில் அத்துமீறல்கள் ஏற்பட்டதனையும் நாட்டின் பொறுப்புக்கூறலையும் அங்கீகரித்து ஏற்றுக் கொள்ளல்.

செல்லும் வழி:

- நீதி வழி முறைகள் - பாதிப்புக்குள்ளான தனிநபர்களுக்கு
- சட்ட வழி முறைகள் - பாதிப்புக்குள்ளான அனைத்து வகை சார்ந்தவர்களுக்கும்.

தீர்மானம் மேற்கொள்வோரது கூட்டமைவு:

- தீர்மானங்கள் செய்வோரது தகுதிகள் மற்றும் பொது மதிப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- திர்மானம் செய்வோர்களின் பன்முகப்பண்பு மற்றும் பிரதிநிதித்துவம் செய்வதனை உறுதி செய்தல்;
- தீர்மானம் செய்வோரது எண்ணிக்கையும் மூல முதலிடமும் (பிறப்பிடம்/ஆரம்ப இடம்)

முன்னுரிமை வழங்குதலும் தகுதிகளும்:

- பெண்கள், ஆண்கள், சிறுவர்கள் அல்லது குறிப்பிட்ட குழுக்கள் அடைந்த துயரங்களின் வகைகள்
- பாதிக்கப்பட்டவர்கள் / குடும்பங்கள் / சமூகங்கள் (வளங்கள் அல்லது சேவைகள், ஆதரவளிக்கும் வலைப்பின்னல் அமைப்புக்கள், பாராபட்சப்படுத்தப்பட்ட அவர்களது அனுபவங்களும், அடைந்த அவதூறுகளும்)
- அத்துமீறல்களினால் ஏற்பட்ட பாதகவிளைவுகளின் வகைகளும் அளவும்
- பாதிக்கப்பட்டவர்களை இனங்காணுவதற்கான செய்முறை.

இழப்பீடு வழங்கும் பொறிமுறைகள்:

- மீட்டளிப்பு (Restitution)
- மறுசீரமைப்பு / புனருத்தாரணம் (Rehabilitation)
- நட்ட ஈடு வழங்கள் (Compensation)
- திருப்தியடையச் செய்தல் (Satisfaction);
- மீள இவை ஏற்படாமைக்கு உத்தரவாதமளித்தல்;
- அடையாள மற்றும் பொருள்வகையினதானவற்றின் கலவையானவை. (இழப்பீடு)

நடைமுறைப்படுத்தும் பிரச்சினைகளும் செய்முறைகளும்:

- பாதிக்கப்பட்டவர்கள் குழுக்களினதும் பெண்கள் குழுக்களினதும் பங்கேற்பை ஒருமைப்பாட்டிற்கு உடபடுத்தல் (Integrating)
- பங்கேற்பவர்களது பாதுகாப்பு மற்றும் அந்தரங்கத் தன்மைக்கான பாதுகாப்பு,
- நிதி வழங்கல் - தனிப்பட்ட நிதியா அல்லது முழுமை வாய்ந்த வரவு செலவுத்திட்ட நிதியா? (அத்துடன் தேவைப்படும் அளவு, வழங்குபவர் யார்? அதன் நீடித்து நிற்கக்கூடிய இயல்பு),
- நடைமுறைப்படுத்தும் அதிகார நிறுவனம், உண்மையறியும் ஆணைக்குழுவா அல்லது ஏனைய உத்தியோக பூர்வ அலுவலர்களா?
- நேரவரைச் சட்டம்: உடனடித் தேவைகளும் நீண்ட கால ஆர்வங்களும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணைப்புக்கள்:

- ஏனைய நிலைமாற்றத்திற்கான நீதி முயற்சிகளுடன் கொண்டுள்ள தொடர்புகள்.
- பெரியளவினதான சமாதானம் மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சிகளில் ஒரு பகுதியாக இழப்பீடு வழங்குதல்.
- இழப்பீடு வழங்கும் உரிமைகள் மற்றும் அபிவிருத்திக்கான சமன்படுத்தலும் தனிச்சிறப்பானதாக்குதலும்.

[16] Trainers' Manual on Transitional Justice ICTJ (2011).65-66



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கையேடு: சமாதானத்தையாவது நீதியையாவது நாடிச் செல்வதா? அல்லது இரண்டினையுமே நாடுவதா? [(17)]**

யுத்தம் முடிந்த பின்னர் சம்பந்தப்பட்டவர்கள் வழமை நோக்கி நிலைமாற்றம் பெற முயற்சிக்கும் போது சமாதானத்திற்கு முன்னுரிமை கொடுப்பதா அல்லது முரண்பாட்டின் போது இழைக்கப்பட்ட குற்றங்களுக்கான நீதியை நிலை நாட்டுவதில் கூடிய அக்கறை காட்டுவதா என்பது பேச்சுவார்த்தைகள் மூலம் பேரம்பேசுகையில் எதிர்நோக்கக் கூடிய பல சவால்களில் ஒன்றாயிருக்கும். பெருமளவில் மனித உரிமை மீறுதலும் யுத்தக் குற்றங்களும் இடம் பெற்றுள்ள ஒரு நிலமையில் அவற்றிற்கான நீதியை நிலைநாட்டுவதனை விட சமாதானத்திற்கே முன்னுரிமை கொடுக்கப்படுதல் வேண்டுமா? யதார்த்தத்தில் இவற்றில் ஏதோ ஒன்றுடன் சமரசம் செய்து கொள்ளத்தான் வேண்டுமா? நடுவர்களுக்குள்ள மாற்று வழிமுறைகள் யாவை?

**பின்னணி**

நடுவர்களும் (Mediators) சமாதான ஒப்பந்தங்கள் தொடர்பாக பேரம் பேசுபவர்களும் நீண்டகாலமாக சமாதானம் மற்றும் பொறுப்புக்கூறுதல் தொடர்பில் போராடிக் கொண்டே வந்துள்ளனர் உதாரணமாக 1990 ஆம் ஆண்டு தசாப்தத்தின்போது எல் சல்வடோர், கௌத்தமாலா, சியாராலியோன், தென்னாபிரிக்கா, முன்னாள் யூகோஸ்லேவியா போன்றவற்றில் அவ்வாறான பிரச்சினைகள் நிலவி வந்தன. மிக அண்மைக்காலங்களில் இந்தோனேசியா, லைபீரியா, நேபாளம் ஆகிய நாடுகளில் இவ்வாறான சவால்கள் காணப்பட்டன. அண்மைக் காலங்களில் இடம் பெற்ற ஒப்பந்தங்களை கவனித்து பார்ப்போமாயானால் யுத்தங்களின் போது ஏற்பட்ட பெரிய அட்டூழியங்களை அவற்றின் இறுதியில் மூடி மறைத்து விடக்கூடாது என்பதில் சர்வதேச ரீதியாக நம்பிக்கைகள் வளர்ந்து வருகின்றன. குறிப்பாக கூறுவதானால் அண்மைக்கால ஒப்பந்தங்களில் கடுமையான குற்றங்களுக்கு மன்னிப்பு வழங்குதல் பெருமளவுக்கு தவிர்க்கப்பட்டுள்ளமையினைக் காணக்கூடியதாக உள்ளது.

உகண்டாவிலும், சூடானிலும் சமாதானமும் நீதியும் வழங்குவது தொடர்பான பிரச்சினைகள் முக்கிய இடம் வகித்துள்ளன. அந்நாடுகளில் இடம் பெற்ற குற்றங்களை விசாரித்து அல்லது அரசாங்கத்தில் உள்ள அல்லது ஆயுதம் தரித்த எதிரணியினரை கைது செய்யும் பற்றாணையை (Warrant) சமாதானத்திற்கான பேரம் பேசுதல் இடம் பெற்று வரும் சமகாலத்திலேயே சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் (ICC) வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

சர்வதேச சட்டப் பொறிமுறைகள் தொடர்புற்று இல்லாத நிலவரங்களில் இப்பிரச்சினை எழ முடியும். இவ்வாறான நிலவரங்களில் பேரம் பேசுபவர்களோ அல்லது ஏனைய அதிகார தரப்பினரோ யுத்தத்தின்போது இழைக்கப்பட்ட குற்றங்களுக்கு எதிராக வழக்குத் தொடராது விட்டுவிட்டு குற்றவாளிகளுக்கு தண்டனைகளிலிருந்து விலக்களிக்கப் போகின்றனரா? அல்லது அவர்களால் இழைக்கப்பட்ட குற்றங்களுக்கு தேசிய மட்டத்தில் ஏதோ வழி முறையில் பொறுப்புக் கூறப் பார்ப்பார்களா என்பது பற்றிய ஏற்பாடுகள் சமாதான உடன்படிக்கையில் உள்ளடக்கப்படுவனவா என்பதும் ஒரு வினவாக இருக்கும்.

சில சமாதான ஒப்பந்தங்களில் உண்மையறியும் ஆணைக்குழு பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு வழங்குதல் பொலிஸ் அல்லது இராணுவத்தினரது தொடர்புகள் பற்றி விசாரித்தறிதல் அல்லது பாதிக்கப்பட்டவர்களை நினைவுகூறக்கூடிய நினைவுச் சின்னங்களை நிர்மாணித்தல் என்பன உள்ளடங்கியதாக இருக்கும். இவ்வாறான நிலமைகளில் இவ்வாறான ஒப்பந்தங்களை எவ்வாறு நடை முறைப்படுத்தப்படலாம் என்பது சவாலாக இருக்கும்.

[(17)] Adapted from "Pursuing Peace, Justice or Both" ICTJ Fact Sheet (2009)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நேரத்தின் முக்கியத்துவம்

சமுகங்கள் தமக்கு சமாதானமா அல்லது நீதியா வேண்டும் என்பதனை தீர்மானிக்க வேண்டியதில்லை. அண்மைக் காலங்களில் இடம் பெற்ற மனித உரிமைகள் துஸ்பிரயோகத்தினால் பெரிதும் பீடிக்கப்பட்டிருந்த பல சமுகங்களில் உடனடியாக சமாதானத்திற்கான தேவை நிலவுதனை நடுவர்களும் பேரம் பேசுபவர்களும் அங்கீகரித்து நீதி நிலைநாட்டப்பட ஆவன செய்ய வேண்டியமை பொறுத்து அவை பொருத்தமானதோர் நேரத்தில் இடம் பெறலாம் என்பதனையும் இனங்காணுவர்.

குற்றவாளிகள் சிரேஸ்ட அந்தஸ்தில் உள்ளவர்களாயின் அவர்களுக்கு எதிராக குற்றவழக்குத் தொடருதல் உடனடியாக இடம் பெற முடியாதிருக்கலாம். அதற்கு தேசிய நீதி முறைகள் அரசியல் ரீதியாக சமரசங்களுக்கு உட்பட்டிருத்தல் அல்லது அவை தரமிழந்து சிதைந்து போய்விட்டமை என்பன காரணமாக இருக்கலாம். ஆனாலும் நிலமைகள் காலப்போக்கில் மாற்றம் பெறலாம். சட்டத்தின் வாயிலான ஆட்சியை உறுதியாக கடைப்பிடிப்பதனை ஒரு ஆட்சி முறையில் நியாயத்தை கட்டியெழுப்புதலும் அதிகாரிகளை தாம் செய்வனவற்றிற்கு பொறுப்புக் கூறவும் செய்தலின் மூலம் ஸ்திரமானதும் நிலைத்து நிற்பதுமான சமாதானத்திற்கு உதவமுடியும். உயர் மட்ட நபர்கள் மனித உரிமைகளை மீறியதற்காக அவர்களுக்கு எதிராக வழக்குத் தொடருவதில் மாத்திரம் நீதியை உறுதிபடுத்துவதற்கான முயற்சிகள் முனைந்து நிற்கக்கூடாது. அதற்கப்பால் சென்று சட்டத்தின் வாயிலான நிறுவனங்களை கட்டி யெழுப்புவதிலும் தனது கவனத்தைச் செலுத்த வேண்டும்.

லைபீரிய நாட்டின் முன்னாள் சனாதிபதி சார்ள்ஸ் டெய்லரை சியாரா லியோன் நாட்டின் உயர் நீதி மன்றம் கைது செய்தமையிலிருந்து குற்றம் செய்தவர்கள் வேறுநாட்டிற்கு புகலிடம் தேடி தப்பிச் சென்றுவிட்டால் அவர்கள் செய்த குற்றங்களுக்கு தண்டிக்கப்படாது பாதுகாக்கப்படுவர் என்பதற்கு எதுவித உத்தரவாதமும் கிடையாது என்பதனையே காட்டுகின்றது. 2003 ஆம் ஆண்டு அவரை நீதிமன்றம் குற்றஞ்சாட்டியதனை அடுத்து அவருக்கு நைஜீரியாவில் புகலிடம் வழுங்கப்பட்டது. நிலைமாற்றத்திற்கான அரசாங்கத்தினால் பதவியேற் முடிந்தது. டெய்லர் நைஜீரியாவில் இருந்த கால நிபந்தனைகளை மீண்டும் மீண்டும் மீறியிருக்கிறார். லைபீரியாவுக்கு புதிய சனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்ட எலன் ஜோன்சன் சேர்லிப் கேட்டுக் கொண்டதற்கிணங்க 2005 ஆம் ஆண்டு நைஜீரிய அரசாங்கம் டெய்லரை காவலில் வைத்து உயர் நீதிமன்றம் வழக்குத் தொடர்வதற்காக கையளித்துள்ளது. இப்போது அவர் ஹேக் (நெதர்லாந்து) நகர வழக்கு விசாரணையிலிருக்கிறார். (இவருக்கு 2012 ஆம் ஆண்டு 50 வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளன)

**மன்னிப்பு**

மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள், யுத்த குற்றங்கள், இன அழிப்பு என வரைவிலக்கணம் செய்யப்பட்டுள்ள "சர்வதேச குற்றங்கள்" தொடர்பில் மன்னிப்பு வழங்குதல் என்பது சர்வதேச சட்டத்தில் தடைசெய்யப்பட வேண்டியதென அதிகரித்தளவில் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. சர்வதேச சட்டம் அடிக்கடி சம்பந்தப்படுத்தப்பட்டு வருவதால் இவ்வாறான புரிந்துணர்வு மனித உரிமைகள் தொடர்பான ஒப்பந்தங்களில் (பெரும்பாலான நாடுகள் இவற்றிற்கு ஒப்புதல் அளித்து கையெழுத்திட்டுள்ளன) இடம் பெற்று வருவதுடன் சர்வதேச மற்றும் பிரதேச மட்டத்திலான நீதி மன்றங்களிலும் நாடுகளின் நடைமுறைகளின் கீழ் நீண்டகாலமாக செயற்பட்டுவரும் சட்டத்திலும் மேற்கொள்ளப்படும் தீர்மானங்கள் சர்வதேச சம்பிரதாய சட்டங்கள் எனக் கூறப்படுகின்றன. அவ்வாறாக மன்னிப்புக்களை தடைசெய்யும் சட்டங்கள் பல நாடுகளிலும் நடைமுறையில் உள்ளன. இவ்வாறான குற்றங்கள் செய்தவர்கள் பொது மன்னிப்பு கோரும் போது சர்வதேச பிரதேச மற்றும் தேசிய நீதி மன்றங்கள் அக்கோரிக்கைகளை அதிகரித்த அளவில் நிராகரித்தே வந்துள்ளன.

• சர்வதேச குற்றங்களைப் புரிந்தவர்களுக்கு மன்னிப்பு வழங்குவதனை தடை செய்யும் வகையில் ஐக்கிய நாடுகள் சபை தனது பிரதிநிதிகளுக்கு வெளிப்படையான வழிகாட்டல்களை தெளிவாக ஸ்தாபித்துள்ளது. சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தை ஸ்தாபிக்கும். 2011 ஆம் ஆண்டு ஜீன் மாதம் ரோம் சட்ட விளக்க வரையறைச்சட்டம் (Rome Statute), 116 நாடுகளை இவ்வாறான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(மைய) குற்றங்களுக்கு எதிராக வழக்குத் தொடர கோருவதாக உள்ளது. எவ்வாறாயினும் இந்த ரோம் சட்டவிளக்க வரையறைச் சட்டத்திற்கு ஒரு சில ஆசிய நாடுகள் மட்டுமே கையெழுத்திட்டுள்ளன.

## ஆசியாவில் சமாதானமும் நீதியும்

### ஆப்கானிஸ்த்தான் [18]

தலிபான் முற்றுகையை ஒழித்துக்கட்ட 2001 ஆம் ஆண்டில் சில தசாப்த காலமாக நிலவிவரும் முரண்பாடுகள் பற்றி பரிசீலனை செய்ய உறுதி மொழிகள் வழங்கப்பட்டன. அதிகாரப் பங்கீடு பற்றிய உடன்படிக்கை தொடர்பில் 2001 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் பேரம் பேசப்பட்ட போதிலும் அப்போது ஒரு ஒழுங்கு முறையான நிலைமாற்றத்திற்குரிய நீதிச் செய்முறை ஸ்தாபிக்கப்பட வில்லை. ஆயினும் ஆப்கானியர்களும் சில சர்வதேச பங்காளிகளும் ஆப்கானிஸ்தானில் இடம் பெற்ற கடந்தகால துஸ்பிரயோகம் தொடர்பில் ஆவன செய்ய தேவையான பொறிமுறைகளை விருத்தி செய்ய ஆர்வம் காட்டியிருந்தனர். அக்காலம் முதலாக தவறு செய்பவர்களாக குற்றஞ்சாட்டப்பட்டவர்களது அதிகாரங்கள் அதிகரித்துச் சென்றதாலும் பாதுகாப்பு பிரச்சினைகள் வளர்ந்து சென்றதாலும் அக்காலப் பகுதியிலும் கடந்த காலங்களில் இடம் பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பில் நீதியை ஊக்குவிப்பதற்கான முயற்சிகள் தளர்ச்சியுற்றுப் போயின.

ஆப்கானின் சுதந்திரமான மனித உரிமைகளுக்கான ஆணைக்குழு (AIHRC) 2004 ஆம் ஆண்டில் ஒரு ஆராய்ச்சியினை செய்து வெளியிட்டது. அதன்படி ஆப்கானியர்கள் கடந்த காலங்களில் ஆப்கானில் இடம் பெற்ற உரிமை மீறல்கள் தொடர்பில் ஆவன செய்யப்படல் வேண்டுமென கூறியதாக தெரியவருகின்றது. ஆப்கான் சமூகத்தில் குற்றம் செய்தவர்கள் தண்டிக்கப்படாது பாதுகாக்கப்படும் கலாச்சாரம் வலிமைபடுத்தப்பட்டுள்ளதாவும் அத்துமீறல்களில் ஈடுபடுபவர்கள் அதிகாரங்களை மென்மேலும் பெற்று வருவதுடன் தொடர்ந்தும் அத்துமீறல்களில் ஈடுபட்டு வருவதாகவும் ஆக்கானியர்கள் ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்துள்ளனர். ஆப்கான் சுதந்திர மனித உரிமைகள் ஆணைக்குழு வெளியிட்ட ஆராய்ச்சி அறிக்கையில் யுத்தக் குற்றங்களுக்கு பொறுப்புக் கூறுதல் வேண்டும் என்பதற்கு பெரும் ஆதரவு இருப்பதாக காட்டப்பட்டுள்ளது. யுத்தக் குற்றங்களை இழைத்தவர்களை அதிகார பதவிகளிலிருந்து வெளியேற்றுவதே சிறந்த மாற்று வழி என்னும் கருத்துக்கள் கூறப்பட்டிருந்தன. இவ்வாணைக்குழு கண்டறிந்தனவற்றின் அடிப்படையில் சனாதிபதி ஹமிட் கர்சாய் ஒரு குழுவினை நியமித்து சமாதானம், நல்லிணக்கம் மற்றும் நீதிக்கான ஒரு செயற்திட்டம் வரையப்பட்டது. அது ஐந்து பரந்து பட்ட விடயங்களில் கவனத்தை செலுத்தியிருந்தது. அவை பாதிக்கப்பட்டவர்களது துயரங்களுக்கான நினைவு நாள், நிறுவன சீர்திருத்தமும் தணிக்கை செய்தலும், உண்மையறிதல், நல்லிணக்கமும் குற்றங்களுக்காக பொறுப்புக்கூறுதல் என்பனவையாகும். 2005 ஆம் ஆண்டு அத்திட்டத்தினை சனாதிபதி கர்சாய் கையெழுத்திட்டு அனுமதித்திருந்தார். ஆயினும் அவருடைய அமைச்சரவையின் அங்கத்தவர்களில் சிலர் குற்றங்களுக்காக பொறுப்புக் கூறுதல் தொடர்பில் விமர்சனம் செய்திருந்தனர். இருந்தாலும் இன்று வரை செயற்திட்டத்தில் உள்ளடங்கிய எந்தவொன்றுமே முழுமையாக நடைமுறைப்படுத்தப்படவில்லை.

ஆப்கானில் மோசமாகிக் கொண்டு செல்லும் பாதுகாப்பு நிலவரங்கள், மற்றும் அரசாங்கத்திலும் பாரளுமன்றத்திலும் உள்ள யுத்தக்குற்றங்களை இழைத்த குற்றவாளிகளினது அதிகாரம் அதிகரித்துக் கொண்டே செல்கின்றமை என்பவற்றால் அரசாங்கத்தினால் முக்கியப்படுத்தப்பட்ட நிலைமாற்றத்திற்கான நீதி வழங்கும் முயற்சிகள் ஒரு தேங்கிய நிலையிலேயே காணப்படுகின்றன. நீதி தொடர்பான பிரச்சினைகள் போதியளவில் இல்லாததாகவும், சமமற்ற பாதுகாப்பு முறைகள் சார் சீர் திருத்தங்களும், அபின் (Opium) பயிர் செய்கை மற்றும் அதன் வணிகஞ் செய்தலில் அதிகரிப்பும் காணப்படுகின்றமை என்பன பெரும் குறைபாடுகளாகும்.

[18] Excerpts from "Challenges to Peace and Justice in Afghanistan" ICTJ Fact Sheet (2009)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆச்சே (Aceh) (இந்தோனேசியா) முழுமையாக்கப் படாத மரபுரிமைச் செல்வம் (Legacy) [19]

இந்தோனேசியா அரசாங்கமும் (EOI) சுதந்திர ஆச்சே இயக்கமும் ஹெல்சின்கி புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றினை 2005 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி எழுதி கையெழுத்திட்டன. அதன் விளைவாக இந்தோனேசிய தேசிய படையினருக்கும் மற்றும் சுதந்திர ஆச்சே இயக்கத்தினருக்கும் (GOI) இடையே மூன்று தசாப்தங்களாக இடம் பெற்று வந்த ஆச்சே பிரதேசத்தின் கட்டுப்பாடு தொடர்பான முரண்பாடு ஒரு முடிவுக்கு வந்தது. யுத்தம் நடை பெற்ற காலப்பகுதிகளில். அதன் செறிவும், நோக்கங்களும் வேறுபட்டவாக இருந்தன. பெருமளவிலான சட்டவிரோத தடுப்புக்காவல் சம்பவங்கள், சித்திரவதை, பாலியல் வன்முறைகள், நெருப்புவைத்தழித்தல் ஆயிரக்கணக்கான பொதுமக்களை கொன்றொழித்தல், போன்ற அட்டூழியங்கள் இடம் பெற்றிருந்தன. ஆயிரக்கணக்கான ஆச்சே பிரதேச மக்கள் தமது வாழ்வாதாரங்களை இழந்தனர். அவர்களுக்கு அபிவிருத்திக்கான வாய்ப்புக்கள் இல்லாது போயின. வறுமையானவர்களாகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள் பிரிவினருமாயினர். மனோவியாதிகள், பௌதீக ரீதியாக இயலாதவர்களாகியமை என்பன இன்னோர் புறம். ஆச்சே பிரதேசத்தின் எதிர்கால ஆட்சி முறை பற்றிய வரைச்சட்டம். சமாதான ஒப்பந்தங்களில் உள்ளடக்கப்பட்டிருந்தது. அதில் அப்பிரதேசத்திற்கு கூடிய தன்னாட்சி உரிமை மற்றும் முரண்பாட்டிற்கு காரணமாயிருந்த பிரதான சமூக, அரசியல், பொருளாதார நிலவரங்களுக்கு தீர்வுகாணுவதற்கான வழிமுறைகளும் உள்ளடக்கப்பட்டிருந்தன. அவற்றில் பின்வருவன உள்ளடங்கும்.

- சுதந்திர ஆச்சே இயக்கத்தில் பங்கேற்றமைக்காக சிறையடைக்கப்பட்டிருந்தவர்களுக்கு பொதுமன்னிப்பளித்தல் அத்துடன் சர்வதேச மனித உரிமைகள் கருவிகளை பின்பற்றிய வகையிலான அரசாங்கத்தின் கடன்பாடுகளை மீள் உறுதி செய்தல்.
- ஆச்சேயில் உள்ள சுதந்திர ஆச்சே இயக்கத்தினரையும் இந்தோனேசிய பாதுகாப்பு படையினரையும் புழக்கத்திலிருந்து கலைந்து செல்லச் செய்தலும் ஆயுதங்களைதலும்.
- முன்னாள் போராளிகள், அரசியல் கைதிகள், பெரும் இழப்புக்களால் துன்புற்ற பெதுமக்கள் ஆகியோருக்கு மீள இணையும் (reintegration) நிகழ்ச்சிகளை நடாத்துதல்
- மனித உரிமைகளுக்கான நீதி மன்றம், உண்மையறிதல் மற்றும் நல்லிணக்கத்திற்கான ஆணைக்குழுவினை (TRC) ஆச்சே பிரதேசத்திற்காக ஸ்தாபிக்க ஆவன செய்தல்.
- சட்டத்தின் வாயிலான ஆட்சியை ஸ்தாபிக்க குறிப்பிட்ட சில நிறுவன ரீதியான சீர் திருத்தங்களை கொண்டுவருதல்.

சமாதான செய்முறைக்கான ஆரம்ப வருடங்களில் குறிப்பிடத்தக்கதான சில முன்னேற்றங்கள் ஏற்பட்டன. அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட்டனர். அத்துடன் பல மில்லியன் பெறுமதியான செலவீனத்தைக் கொண்ட முன்னாள் போராளிகளுக்கான மீள் ஒருமைப்பாட்டிற்கான நிகழ்ச்சியையும் பாதிக்கப்பட்டவர்களுக்கு சில வகையான சமூக உதவிகளையும் வழங்கிய நிகழ்ச்சியினையும் முகாமைத்துவம் செய்த ஒரு நிறுவனத்தை புதிய அரசாங்கம் ஸ்தாபித்தது. இந்நிகழ்ச்சியினூடாக ஆயிரக்கணக்கான இராணுவ மற்றும் பாதுகாப்பு படையினர் ஆச்சே பகுதியிலிருந்து வெளியேற்றப்பட்டு வேறுபகுதிகளில் நிலை நிறுத்தப்பட்டனர்.

2006 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் இந்தோனேசியா பாராளுமன்றம் ஆச்சே பிரதேசத்தின் ஆட்சி பற்றிய சட்டம் ஒன்றை இயற்றியது. அச்சட்டத்தினுள் ஹெல்சின்கி புரிந்துணர்வு உடன்படிக்கையினுள் உள்ளடங்கிய ஏற்பாடுகளில் பெரும்பாலானவற்றை நடைமுறைப்படுத்துவதற்காக ஏற்றுக் கொண்டு இணைக்கப்பட்டிருந்தது. இருந்த போதிலும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் உள்ளடங்கியிருந்த பல முக்கிய அம்சங்கள் ஆச்சே பிரதேசத்திற்கான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்டத்தில் முழுமையாக உள்ளடக்கப்படவில்லை என்ற விமர்சனமும் உண்டு. அச்சட்டம் முன்னர் உறுதி கூறப்பட்ட மனித உரிமைகளுக்கான நீதிமன்றம், உண்மை மற்றும் நல்லிணக்கத்திற்கான ஆணைக்குழு போன்றவற்றிற்கான சட்டவரம்பினை ஆச்சே பகுதிக்கு வழங்கும் வகையில் சட்டத்தில் ஏற்பாடுகள் செய்யவில்லை. புதிய சட்டத்தின் மூலம் புரிந்துணர்வு உடன்படிக்கை திகதிக்கு அடுத்து இடம்பெற்ற குற்றங்கள் வழக்கமான நீதிமன்றங்களுக்கு உட்பட்டதாகவே விசாரிக்கப்பட்டன. அத்துடன் அச்சட்டத்தில் ஆச்சே பிரதேசத்திற்கான உண்மைக்கும் நல்லிணக்கத்திற்குமான ஆணைக்குழுவானது (TRC) எதிர்பார்க்கப்படும் தேசிய உண்மைக்கும் நல்லிணக்கத்திற்குமான ஆணைக்குழுவிலிருந்தும் பிரிக்கப்பட முடியாததும் அதன் ஒரு அங்கமாகவே செயற்படும் எனவும் கூறப்பட்டிருந்தது. இந்தோனேசிய அரசியலமைப்பு நீதிமன்றம் தேசிய உண்மைக்கும் நல்லிணக்கத்திற்குமான ஆணைக்குழு சட்டத்தை செல்லுபடியாகாதது என்று 2006 ஆம் ஆண்டு தீர்ப்புக் கூறிவிடவே ஆச்சேக்கான உண்மைக்கும் நல்லிணக்கத்திற்குமான ஆணைக்குழு பற்றிய தீர்மானங்கள் முடக்கமுற்றன. தேசிய உண்மைக்கும் நல்லிணக்கத்திற்குமான ஆணைக்குழு இல்லாத நிலையில் ஆச்சேக்கான உண்மைக்கும் நல்லிணக்கத்திற்குமான ஆணைக்குழுவின் செயற்பாடுகளை தவிர்க்கச் செய்ய ஆச்சே பிரதேசத்தை ஆளுவதற்கான சட்டத்திற்கு (LOGA) வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் அடிப்படையில் முடியாது என்று சட்ட வல்லுணர்கள் கருத்து தெரிவித்துள்ளனர். ஏனெனில் அதில் கூறப்பட்டுள்ள இரண்டு அமைப்புக்களும் "பிரிக்கப்பட முடியாத அங்கங்கள்" என்னும் சரத்து அவை இரண்டினையும் எவ்வாறு நிருவாகிக்கலாம் என்பது தொடர்பில் மட்டுமே ஒன்றுடன் ஒன்று தொடர்பு பட்டவை என அவர்கள் விளக்கியுள்ளனர். எவ்வாறாயினும் ஆச்சே பிரதேச நிர்வாகம் மற்றும் தேசிய அரசாங்கத்தின் நிருவாகத்தினை பிரதிநிதிப்படுத்தும் அதிகாரிகள் தேசிய TRC ஸ்தாபிக்கப்படும் வரை ஆச்சே பிரதேசத்திற்கு ஒரு TRC இருக்க முடியாது என்னும் நிலைப்பாட்டை எடுத்துள்ளனர்.

[19]தகவல்கள் The Need for Accountability: The Helsinki Memorandum Five Years On ICTJ Fact Sheet (2010) எடுத்தாளப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நேப்பாளம்** [20]

நேபாளத்தில் 2006 ஆம் ஆண்டு வியக்கத்தக் வகையினதான "மக்கள் இயக்கம்" மன்னரை அரசியலில் இருந்து பின்வாங்கும் படியும் சனநாயகத்தை புதுப்பித்து பேணும் படியும் வற்புறுத்தியது. அத்தோடு மாவேயிஸ்டுகளுக்கும் அரசாங்கத்திற்கும் இடையிலான பத்து வருட உள்நாட்டு யுத்தத்திற்கும் மக்களின் இயக்கம் ஒரு முடிவினை கொண்டு வந்தது. அந்த யுத்தத்தின் போது இரு தரப்பினராலும் பாரதூரமாக உரிமைகள் மீறப்பட்டிருந்தன. அதன் விளைவாக இறுதியில் சமாதான பேச்சு வார்த்தைகள் ஏற்பட்டன.

முழுமையானதோர் சமாதான ஒப்பந்தம் (CPA) 2006 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முழுமை பெற்றது. அதில் நாட்டில் ஏற்பட வேண்டிய அரசியல் நிலைமாற்றத்திற்கான அடிப்படை சட்ட வரம்பும் தீர்மானம் செய்யப்பட்டது. தனித்தன்மை வாய்ந்ததான நேப்பாள சமாதானச் செய்முறை நாட்டிலும் சர்வதேசத்திலும் பாராட்டுக்குள்ளாகியது. இருந்த போதிலும் அரசாங்கம் உடன் படிக்கையில் உள்ளடங்கிய நீதி மற்றும் பொறுப்புக் கூறுதல் தொடர்பிலான அர்ப்பணிப்புகளை நடைமுறைப்படுத்தலில் தாமதம் காட்டியதாக விமர்சனங்களும் எழத்தவறவில்லை.

முழுமையான சமாதான ஒப்பந்தத்தில் (CPA) உள்ளடக்கிய பல பிரச்சினைகளில் "காணாதிருப்பவர்கள் பற்றிய ஆணைக்குழுவும்," "உண்மையறிதலுக்கும் நல்லிணக்கத்திற்குமான ஆணைக்குழுவும் குறிப்பிடத்தக்கனவாகும். ஏற்கனவே ஏற்பட்ட யுத்த நிறுத்த உடன்படிக்கையிலும் கூட தெளிவற்ற முறையில் மன்னிப்பளிப்பதற்கான ஏற்பாடுகள் பற்றிக் கூறப்பட்டிருந்தன. இவ்வாறான பொறிமுறைகளை உடன்படிக்கை உள்ளடக்கியிருந்ததால் அரசியல் தரப்பினர் பக்கத்தில் கடந்தகால அத்து மீறல்களுக்கு பொறுப்புக் கூறுவதற்கான அர்ப்பணிப்பு ஏதோ அளவில் இருந்ததாக கூற முடியும். இருந்த போதிலும் ஏற்கனவே குறிப்பிட்ட ஆணைக்குழுக்களை இரண்டு வருடங்களிலும் உருவாக்க முடியாது போனமையினால் பொறுப்புக் கூறும் செய்முறைகளுக்கு எதுவித அரசியல் ரீதியான அர்ப்பணிப்பும் குறிப்பிடத்தக்க அளவில் இல்லாதிருந்ததாகவே பலரும் விமர்சித்துள்ளனர். வழங்கப்பட்ட நட்டஈட்டு ஏற்பாடுகளும் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வெகு சிறியளவிலான விமோசனத்தினையே கொண்டு வந்திருந்தன. இவற்றையெல்லாம் விட இன்னும் முக்கியமான தோர் விடயமும் கவனிக்கப்பட வேண்டியதாயுள்ளது. கடந்த கால துஸ்பிரயோகங்களுக்கு பங்களித்திருந்த ஆயுதப்படையினரை சீர்த்திருந்தங்களுக்கு உட்படுத்தல் அல்லது வெளியேற்றல் என்பது அவற்றில் மிக முக்கியமானதாக பல சாரராலும் நம்பப்படுகின்றது.

குற்றம் செய்தவர்கள் தண்டிக்காது பாதுகாக்கப்பட்டமை தொடர்ந்தும் பெரும் சவாலாக உள்ளது. முரண்பாட்டின் போது நேப்பாள இராணுவம் செய்த துஸ்பிரயோகங்கள் தொடர்பில் எது வகையினதான பொறுப்புக் கூறுதலும் இன்றி நேப்பாள இராணுவம் இருந்து வருகின்றது. சிவில் கட்டுப்பாடுகளுக்கு மேற்பட்டதான ஒரு நிறுவனமாக அது தொடர்ந்தும் இருந்து வருகின்றது. இதனை ஒத்தவகையிலேயே மாவோயிஸ்ட் இயக்க அங்கத்தினர்களில் பல தரப்பட்டவர்களும் அவர்கள் செய்த அத்துமீறல்களுக்கும் குற்றங்களுக்கும் பொறுப்புக் கூறாமலேயே இருந்து வருகின்றனர்.

முரண்பாட்டின் போது வலுக்கட்டாயமாக காணமற்போனோர்களைப்பற்றி விசாரணைசெய்ய "காணாமற்போனோர் ஆணைக்குழுவுக்கான சட்டம் ஒன்று பற்றி அரசாங்கம் 2009 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் பிரகடனம் செய்திருந்தது. காணமற் போயுள்ளமை தொடர்பான சட்டம் மனக்குழப்பத்தினையே ஏற்படுத்தியுள்ளது.

இருந்த போதிலும் போதிய கலந்தாலோசனை இல்லாமல் அறிமுகப்படுத்தப்பட்ட நிறைவேற்றுக்கட்டளை காரணமாகவே இவ்வாறான மனக்குழப்பங்கள் அச்சட்டத்தினால் ஏற்பட்டதாகவும் கூறப்படுகின்றது. 2007 ஆம் ஆண்டு ஜீன் மாதம் நேப்பாள நாட்டின் உயர் நீதிமன்றம் வழங்கிய வரலாற்று திரும்புகட்டத் தீர்ப்பு குறிப்பிடத்தக்கதாகும். அத்தீர்ப்பில் உயர் நீதிமன்றம் காணாமற்போகச் செய்தமையை தண்டனைக்குரிய குற்றமாக்கும்படி அரசாங்கத்திற்கு கட்டளையிட்டதுடன் அவை தொடர்பில் விசாரிக்க ஒரு ஆணைக்குழுவை நியமிக்கவும், அவ்வாணைக்குழு சர்வதேச நியமங்களை மதிக்கும் வகையில் அமையவேண்டும் என்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறியிருந்தது. கடந்தகால விசாரணை ஆணைக்குழுக்களின் சிபாரிசுகளை நடைமுறைப்படுத்துவதில் அரசாங்கம் தவறியுள்ளமையுடன் ஒப்பிட்டுப்பார்க்கையில் காணமற்போகச் செய்தமை பற்றிய ஆணைக்குழு குற்றம் செய்தவர்களை தண்டிக்காது பாதுகாக்கின்றமைக்கு எதிராக பாதிப்பு மிக்கவகையில் சவால்களை எதிர்கொள்ளுமா என்பது சந்தேகத்திற்குரியதாகவே தோன்றுகின்றது.

"புதிய நேப்பாளத்தை" உருவாக்குவதற்கு அரசியல் அறிக்கைளையும் முறையான சில உடன்படிக்கைகளையும் தாண்டிய பல முயற்சிகள் தேவையாயுள்ளன. அதற்கு உண்மையான மற்றும் கடுமையான அரசியல் அர்ப்பணிப்பு தேவை. அதாவது சட்டத்தின் வாயிலான ஆட்சி பற்றிய தத்துவங்களுக்கு அர்ப்பணித்தும் நீண்டகாலமாக நிலவும் குற்றம் செய்தவர்களை தண்டிக்காது பாதுகாக்கும் கலாசாரத்தை ஒழித்துக் கட்டுதலும் தேவைப்படுகிறது. ஏதோ ஒரு அளவுக்கு பாதிப்புள்ள வகையில் இம் முயற்சிகளில் வெற்றிகாண வேண்டுமானால் அதற்காக நேப்பாளத்தில் இதுவரை கற்றுக் கொண்ட பாடங்களிலிருந்து சிறந்த முறையில் தயாரித்து தெளிவான முறையிலான நடைமுறைப்படுத்தும் செய்முறைகளை பின்பற்றுவதன் மூலமே இத்தகைய சவால்களை நீண்ட காலநோக்கத்தின் அடிப்படையில் அணுகி அடையமுடியும்.

[20] Warisha Farasat and Priscilla Hayner (June 2009), "Negotiating Peace in Nepal: Implications for Justice," IFP Mediation Cluster; Country Case Study: Nepal (Brussels:Initiative for Peacebuilding). சுருக்கமாக எடுத்தாளப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கையேடு: பாதிக்கப்பட்டவர்களுக்கு பரிகாரம் காணும் உரிமைகள் மற்றும் இழப்பீடு வழங்குவதற்கான ஐக்கிய நாடுகள் சபையின் வழிகாட்டல் தத்துவங்கள்** (21)

முழுமையான மனித உரிமை மீறல்களுக்கும் யுத்தக் குற்றங்களுக்கும் ஆளாக்கப்பட்டு பாதிப்புக்குள்ளானவர்களுக்கு சிறப்பான உரிமைகள் உள்ளன. அவர்கள் அனுபவித்த பெரும் கொடுமைகள் காரணமாக அவர்களுடைய அவ்வுரிமைகள் பாதுகாக்கப்படுதல் வேண்டும். சர்வதேச சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ளவற்றின் அடிப்படையில் பரிகாரம்காண அவர்கள் உரிமை கொண்டுள்ளனர்.

பாதிக்கப்பட்டவர்களது உரிமைகள் பின்வருமாறு:

(அ) நீதியை சமத்துவமாகவும் பாதிப்பு மிக்க வகையிலும் அணுகக்கூடியமை

(ஆ) அவர்கள் அனுபவித்த கொடுமைகளுக்கான போதியளவிலான பாதிப்பு மிக்க விளைவினைத் தரக்கூடிய இழப்பீட்டினை உடனடியாக வழங்கல்

(இ) அவர்கள் அனுபவித்த வன்முறைகள் தொடர்பான தகவல்களையும் மற்றும் இழப்பீடு பொறிமுறைகள் பற்றிய தகவல்களையும் அணுகக்கூடியமை. (VII.11)

பாதிக்கப்பட்டவர்களுக்கு துயரங்கள் ஏட்பட்டுள்ளமையினை அங்கீகரித்து அவர்களது வாழ்க்கை மேம்பாடடைவதற்காக ஆவன செய்ய முயற்சிகளை மேற்கொள்வதனை உறுதி செய்யும் வகையில் அரசு பின்பற்றும் நிகழ்ச்சிகளே இழப்பீடு வழங்கும் நடவடிக்கைகளாகும். பாதிப்புக்குள்ளாகிய குழுவினர்களுக்கு இழப்பீடு வழங்கப்படலாம். சில இழப்பீடு நிகழ்ச்சிகள் பொருள்வகையினதான நன்மைகளை அளிப்பதாகவும் வேறு சில அவற்றுடன் அடையாள அங்கீகார நிகழ்ச்சிகளாகவும் இடம் பெறலாம்.

உலகளாவிய வகையில் இடம்பெற்ற அனுபவங்களின் அடிப்படையில் இழப்பீடு வழங்குதல் என்பது பின்வருவனவற்றை உள்ளடக்கியதாக இருக்கலாம்.

**மீட்டளிப்பு:** மனித உரிமைகள் மீறப்படுவதற்கு முன்பிருந்த நிலைக்கே பாதிக்கப்பட்டவர்களை மீண்டும் கொண்டு செல்வதற்கான அதாவது விடுதலை, பிரஜாவுரிமை, தொழில் அல்லது சொத்துக்கள் தொடர்பில் முன்பிருந்த நிலைக்கே கொண்டு செல்வதனை மீட்டளிப்பு (Restitution) என்னும் பதம் குறிப்பதாயிருக்கும் (IX.19)

**நட்டஈடு:** பாதிப்புக்குள்ளாகியவர்களுக்கு ஏற்பட்ட நீதிசார் மற்றும் நீதிசாராததுமான சேதங்களுக்கு அந் நட்டத்தை ஈடு செய்யும் வகையில் வழங்கப்படும் பணக் கொடுப்பனவுகள் நட்டஈடு எனப்படும்.(IX.20)

**மறுசீரமைப்பு (Rehabilitation)** : "பாதிக்கப்பட்டவர்களுக்கு இழைக்கப்பட்ட மனித உரிமை மீறல்கள் காரணமாக ஏற்பட்ட சேதங்களை சீர்ப்படுத்தியும் சுகவீனமுற்றிருந்தால் சுகப்படுத்த மருத்துவ மற்றும் அகவுணர்வுச் சார்பான" சிகிச்சைகளை வழங்குவதுடன் சட்ட மற்றும் சமூக சேவை தொடர்பான உதவிகளையும் வழங்குவதனை மறுசீரமைப்பு குறிக்கும்.(IX.21)

**திருப்தியடையச் செய்தல் (Satisfaction):** இது பரந்துபட்ட பண்பினதான கருத்தைத் தருவதாகும். தொடரும் அத்துமீறுதல்களை நிறுத்தி வைத்தல்... உண்மைகளை வெளிப்படுத்தல்.... காணாதிருப்பவர்கள் தற்போது எங்கிருக்கின்றனர் என்பதனைக் கண்டறிய தேடுதல்... மற்றும் கொல்லப்பட்டவர்களது. உடல்களைத் தேடுதல்... பாதிக்கப்பட்டவர்களுக்கு ஏற்பட்ட பாதகங்கள் காரணமாக அவர்களது கௌரவம், நற்பெயர், உரிமைகள் என்பவற்றிற்கு ஏற்பட்ட பாதிப்பினை திருப்தியளிக்கும் வகையில் ஒரு உத்தியோக பூர்வமான பிரகடனம் ஒன்றினைச் செய்வதுடன் அத்து மீறல்களுக்கு பொறுப்பான தரப்பினரால் பகிரங்க மன்னிப்புக் கோரலும் அவர்களுக்கு எதிரான சட்ட மற்றும் நிருவாக தடைகளும் மற்றும் பாதிக்கப்பட்டவர்களை நினைவு கூறலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாராட்டுதலும் இவற்றில் உள்ளடங்குவன. (IX.22)

உத்தரவாதம் என்பதில் கடந்த காலத்தில் இடம் பெற்ற அநீதிகளும் வன்முறைகளும் மீண்டும் இடம் பெறாது என்பதற்காக கொண்டு வரவேண்டிய சீர்திருத்தங்கள் வாயிலாக உறுதி செய்ய இராணுவம் மற்றும் பாதுகாப்புப் படையினர் மீது சிவில் தரப்பினர் (பெதுமக்களது) பாதிப்பு மிக்கவகையில் அல்லது செயல்திறன் மிக்கவகையில் கட்டுப்பாடுகளை கொண்டிருத்தல்... நீதித்துறையின் சுதந்திரம்... மனித உரிமைகள்.... சமூகத்தில் அனைத்து தரப்பினருக்கும் கல்வி... சமூக முரண்பாடுகள் ஏற்படாதவாறு தவிர்க்கவும் கண்காணிப்பதற்குமான பொறிமுறை... மற்றும் சீர்திருத்தச் சட்டங்களை மறுசீராய்வு செய்தல்....(IX.23) என்பன உள்ளடங்குகின்றன.

[21] Basic Principles and Guidelines on the Right to a Remedy and Reparation for Victims of Gross Violations of International Human Rights Law and Serious Violations of International Humanitarian Law, UNGA Resolution A/RES/60/147 of 16 December 2005: http:www2.ohchr.org/english/law/remedy.htm. See also the International Covenant on Civil and Political Rights, art, 2(3) and the Convention Against TTor ture and Other Cruel, Inhumance or Degrading Treatment or Punishment, art, 14(1), on state responsibillity to provide redress and reparations to victims.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கையேடு: சிறுவர்களுக்கும் நிலைமாற்றத்திற்குரிய நீதி என்பவற்றிக்குமான முக்கிய தத்துவங்கள்:**

**சிறுவர்களை சேர்த்திணைத்தல் சிறுவர்களுக்கான உரிமைகள் பற்றிய உண்மைகள் நீதி மற்றும் நல்லிணக்கச் செய்முறைகள்** [22]

ஐக்கிய அமெரிக்க ஹாவார்ட் சட்டக் கல்லூரியில் 2009 ஆம் ஆண்டு ஜீன் மாதம் சிறுவர்கள் மற்றும் நிலைமாற்றத்திற்கான நீதி பற்றிய மாநாடு நடைபெற்றது. அம்மாநாட்டில் விருத்தி செய்யப்பட்ட பிரதான தத்துவங்கள் பற்றிய ஆவணத்திலிருந்து இங்கே எடுத்தாளப்படுபவை பெற்றுக்கொள்ளப்பட்டன.

**II. வரைவிலக்கணங்கள்**

**சிறுவன்:** 18 வயதுக்குட்பட்ட ஒரு நபர் சிறுவன்/சிறுமி எனப்படுவர். (CRC சட்டவிதி) வளரிளமைக்காலம (Adolescence) என்பது 10 வயதுக்கும் 19 வயதுக்கும் இடைப்பட்ட காலமாகும்: (WHO)

**III. சிறுவர் பாதுகாப்பு தொடர்பான தத்தவங்களோடும் நிலைமாற்றத்திற்குரிய நீதியோடும் பங்கு கொள்ளுதல்**

- நிலைமாற்றத்திற்குரிய நீதிச் செய்முறைகள், சிறுவர்கள் தொடர்பான சிறந்த கரிசனங்களால் (Interest) வழிநடத்தப்படுவதாக இருத்தல் வேண்டும்.

- சிறுவர்கள் கௌரவத்துடனும் மதிப்புடனும் நடத்தப்படல் வேண்டும்.

- சிறுவர்கள் தொடர்பான கொள்கைளை தயாரிக்கும் போதும் அவற்றை நடைமுறைப்படுத்தும் போதும் அவை சிறுவர்களது பாதுகாப்பினை உறுதி செய்வதனை கவனத்திற் கொண்டமைவதனை உள்ளடக்கியதாகவும் அவர்களது பௌதீக மற்றும் அக உணர்வு சார்பான (Psychological) நலன்களை ஊக்குவிப்பதாகவும் அவர்களுக்கெதிரான வன்முறைகளிலிருந்து அவர்களை பாதுகாக்கும் வகையிலும் நிலைமாற்றத்திற்கான நீதிப் பொறிமுறைகள் வடிவமைக்கப்படுதல் வேண்டும்.

- அனைத்து சந்தர்ப்பங்களிலும் (நேரங்களிலும்) சிறுவர்களது அடையாளத்தை பாதுகாத்தலும் அவர்களது அந்தரங்கங்களை (Privacy) உத்தரவாதம் செய்தலும் அத்தியவசியமானதாகும்.

- சிறுவர்களது வாழ்வை நிர்ணயிக்கும் தீர்மானங்களை செய்வதில் அவர்களது பங்கேற்பு உரிமை உறுதி செய்யப் படுதல் வேண்டும். சிறுவர்களது பங்கேற்பு அவர்களது சுயவிருப்பத்தின் பேரிலும் மற்றும் பெற்றோர் அல்லது பாதுகாவலர்களிடம் அறிவித்து பெறப்பட்ட சம்மதத்துடனுமே இடம் பெறவேண்டும். அவற்றில் சிறுவர்கள் பங்கேற்க சம்மதிக்காமையினையும் ஒரு வகை பங்கேற்பு என்றே கருதுதல் வேண்டும்.

- நிலைமாற்றத்திறகான நீதிச்செய்முறைகளுடன் தொடர்புடைய சிறுவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான கொள்கைகளும் செய்முறைகளும் வளரிளம் பருவத்தினர் (adolescent) மீது கவனத்தைக் குறித்த வகையில் செலுத்துவதாகவும் (Focus) சிறுவர்களேடு சம்பந்தப்பட்ட அவர்களது செயறதிறனுடன் (capacity) ஒத்திருக்கும் வகையிலும் அமைதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- நிலைமாற்றத்திற்கான நீதிச் செய்முறைகள் பங்கேற்பவர்களது பாலினம் (gender) சார் உணர்வுகளை கவனத்திற் கொண்டதாகவும் சிறுமியர் தொடர்பில் கவனம் செலுத்தி அவர்களுக்கான சிறப்பான தேவைகளை கவனத்திற் கொண்டும் அவர்களது அனுபவங்களை கருத்திற் கொண்டதாகவும் அமைதல் வேண்டும்.
- பங்கேற்பில் எதுவித பாராபட்சமும் இல்லாத வகையில் வேறுபட்ட இன, மொழி சமய பிரிவினரும் இடம் பெறுவதாகவும் மாற்றுத்திறனாளிகளான சிறுவர்களது சிறப்புத் தேவைகளை கவனத்திற் கொண்டதாகவும் இடம் பெறவேண்டும்
- சிறுவர்களது சிவில், அரசியல், பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகளை அங்கீகரித்தவகையிலும் அவற்றில் அவர்கள் முன்னேறும் வகையிலும் நிலைமாற்றத்திற்கான நீதிச் செய்முறைகள் அமைத்தல் வேண்டும். ஆயுத முரண்பாடுகளிலும் அரசியல் வன்முறைகளினாலும் ஏற்பட்ட பிரச்சினைகளுக்கு தீர்வுகாணும் செய்முறைகளில் சிறுவர்களை அவர்களுடைய குடும்பங்களிலும் சமூகங்களிலும் வாழ்வதற்கான பாதுகாப்பு சூழலை வலிமைப்படுத்தும்போது நிலைமாற்றத்திற்கான நீதிச் செய்முறைகளில் மனித உரிமைகளை அடிப்படையாகக் கொண்ட அணுகு முறையே முழுமையானதாகவும் நிலைத்து நிற்கக் கூடியதாகவும் இருக்க முடியும்.

S.Parmar et al., Eds (2010). Children and Transitional Justice: Truth - Telling, Accountability and Reconciliation (Harvard Law School: Human Rights Program) Annex Key Principles for Children and Transitional Justice, 405-07; http://www.unicef-irc.org/publications/pdf/tj/_publication_eng.pdf ICTJ participated in preparation of this key Principles document.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கையேடு: சொலமன் தீவுகள் முரண்பாடு [23]

சொலமன் தீவின் கௌலே மக்களைக்கொண்ட கௌதல்கனால் மற்றும் மலாய்ட்டா மாகாணங்களின் பிரதானமாக ஆண் குடிப்படையினர் (militia) 1998 - 2003 காலப்பகுதிகளில் தமக்கு அரசியல் அதிகாரம், தொழில் வாய்ப்புக்கள் மற்றும் நிலத்தின் மீதான உரிமை போன்றவற்றை கோரிக்கைகளாக முன்வைத்து வன்முறைப் போராட்டங்களில் ஈடுபட்டனர். இரண்டாம் உலகயுத்தத்தின் பின்னர் நகரம் நோக்கிய அபிவிருத்தி, சுரங்கமறுத்தல், தொழில், எண்ணெய்ப்பண்ணை பெருந்தோட்டங்கள் என்பன நாட்டின் தலைநகரம் அமைந்திருந்த கௌதல்கனால் தீவில் விரைவாக ஏற்பட்டதனால் மலாய்ட்டா தீவிலிருந்தும் ஏனைய தீவுகளிலிருந்தும் அங்கு வந்து குடியேற மக்கள் கவரப்பட்டனர். மலாய்ட்டா வாசிகள் அரசியல் தலைமைத்துவத்தில் ஆதிக்கம் கொண்டிருந்தனர். அத்துடன் நிலத்தினையும் ஏனைய வளங்களையும் கட்டுப்படுத்துவது தொடர்பில் ஏற்பட்ட பதட்டங்களை அடுத்தடுத்து வந்த அரசாங்கங்கள் அலட்சியம் செய்திருந்தன. அதனால் கௌலே மக்கள் மத்தியில் தாம் தமது நிலங்களில் ஓரங்கட்டப்பட்டுவிட்டதான ஒரு உணர்வு ஏற்பட்டு அதிருப்தியுடன் காணப்பட்டனர். இதன் விளைவாக கௌலே பிரதேச ஆண்களும் ஆயுததாரிகளாகி 1998 ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் அக்டோபர் வரை குடியேற்றக்கார்களை தமது பிரதேசமான கௌதல்கனல் தீவிலிருந்து விரட்டி அடித்தனர். விரட்டியடிக்கப்பட்ட அக்குடியேற்றக்காரர்களில் பலர் மலாய்ட்டன் தீவு வாசிகளாவர். இதனால் விரைவில் கௌலே மற்றும் மலாய்டன் தீவு போராட்டக்குழுக்கள் ஆயுதப் போராட்டங்களில் ஈடுபடலாயினர். வன்முறை உயர்ந்ததால் மலாய்டன் பொலிசின் உதவிப் படைப்பிரிவுகள் ஆதரவு வழங்க முன்வந்தன.

2000 ஆம் ஆண்டில டௌன்ஸ்விலி சமாதான ஒப்பந்தம் எழுதப்பட்டபோதும் கௌலே போராட்டக் குழு அதனை ஏற்க மறுப்புத் தெரிவித்ததால் ஒரு குறிகிய காலம் மட்டுமே சமாதானம் நிலவியது. கௌதல் கனல் தீவின் தென்பகுதியில் ஆயுதப் போராட்டம் தொடர்ந்து நிலவியதால் நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் சட்டத்தின் வாயிலான ஆட்சி ஒழிந்து போயிற்று. பரந்தளவிலான ஊழல்கள் மற்றும் அரசாங்க அதிகாரிகளிடம் அச்சுறுத்தி பணம் வசூலித்தல் என்பவற்றோடு பொலிஸ் படை நடுநிலைவகிக்காது போனமையாலும் நிலைமை மிக மோசமாயிற்று. 2002 மற்றும் 2003 ஆம் ஆண்டுகளில் வன்முறை தொடர்ந்ததோடு பெரிதும் செறிவாகவும் நடக்க ஆரம்பித்தது. ஒரு மதகுரு மற்றும் சமாதான தூதுவர் (பேராளர்) உட்பட பல பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டனர். இவற்றின் விளைவாக சொலமன் தீவுகள் ஒரு தோல்வியுற்ற நாட்டு நிலைக்கு சென்றுவிட்டதாக இனங்காணப்பட்ட நிலையில் அந்நாட்டு அரசாங்கம் அவுஸ்ரேலியா மற்றும் நியூசிலாந்து ஆகிய நாடுகளிலிருந்து ஆயுத தலையீட்டினை வரவழைக்க வேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது. இதனால் 2003 ஆம் ஆண்டு ஜுலைமாதம் அவுஸ்ரேலியாவினால் தலைமைதாங்கும் பிரதேச உதவித் தூதுக்குழு (RAMSI) சொலமன் தீவுகளுக்கு வந்து ஆயிரக்கணக்கான படையினரை பணியில் அமர்த்தியது. அவர்களுடன் பொலிஸ்படையும் இணைந்து சொலமன் தீவுகளில் ஒழுங்கை நிலைநாட்டச் செயற்பட்டன. பாதுகாப்பை பேணுவதில் RAMSI தொடர்ந்தும் ஒரு முக்கிய பங்கினை வகித்து வருகிறது.

இனரீதியாக உருப்பெற்ற போராட்டத்தினால் படுகொலைகள், இறப்புக்கள், பாலியல் வல்லுறவு, சித்திரவதை என்பன ஏற்பட்டதுடன் ஆயிரக்கணக்கானோர் இடம்பெயர்ந்தவராயினர். இரு தரப்பினருமே இந்த ஐந்தாண்டு கால போராட்டத்தின் போது மேற்கொண்ட பாலியல் அடிப்படையிலான வன்முறைகளின் போது பெண்களுக்கும் சிறுமியர்களுக்கும் எதிராக பெரும் பாலியல் ரீதியான கொடுமைகள் இடம்பெற்றன. மனோ நிலை, சுகாதார சேவைகள் நெருக்கடிக்கால ஆலோசனை மற்றும் ஆதரவு சேவைகள் அறிக்கைளிலிருந்து பல பெண்கள் கடுமையான மனநிலை பாதிப்பு மற்றும் மனோநிலை தொடர்பான சுகாதார பாதிப்புக்களால் இன்றும் துன்புற்று வருவதாக தெரியவருகின்றது. அப் பெண்கள் அடைந்த பாரதூரமான அனுபவங்களிலிருந்து விடுபட தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமை இதற்கு பிரதான காரணமாகும்.

சொலமன் தீவுகளின் பாராளுமன்றம் 2008 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் உண்மையறிதல் மற்றும் நல்லிணக்கச் சட்டத்தை நிறைவேற்றி அடுத்தவருடம் (2009) ஏப்ரல் மாதம் ஆர்ச்சி பிஷப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டெஸ்மன்ட் - டிட்டுவின் தலைமையில் ஆணைக்குழு (TRC) ஒன்றினை உருவாக்கியது. அவ்வாணைக்குழுவுக்கு உத்தியோக பூர்வமான சொலமன் தீவுகளுக்கான உண்மையறிதல் மற்றும் நல்லிணக்கத்துக்கான சுதந்திரமான ஆணைக்குழு என்ற வகையில் முரண்பாட்டின் போது இடம் பெற்ற வன்முறைகள் பற்றி கண்டறிந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு ஆணை வழங்கப்பட்டிருந்தது. அதில் வேறுபட்ட பிரிவினரிடையே ஏற்பட்ட பாதிக்கப்பட்டவர்களது மனித கௌரவத்தினை மீட்டுக்கொடுத்தல், சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினரையும் நல்லிணக்கச் செய்முறைகளில் ஈடுபடச் செய்தல், குற்றமிழைத்தவர்களுக்கும் அவற்றால் பாதிப்புக்குள்ளானவர்களுக்குமிடையில் (உறவு) பரிமாற்றத்திற்கான வாய்ப்புக்களை ஏற்படுத்தல் மற்றும் ஆயுத போராட்டத்தின்போது பாலியல் துஸ்பிரயோகத்திற்கு ஆளானாவர்கள் மற்றும் சிறுவர்களது (துயர) அனுபவங்களுக்கு கூடிய கவனம் செலுத்துதல் என்பவற்றுடன் இடம் பெற்ற வன்செயல்கள் வருங்காலத்தில் இனி ஏற்படக்கூடாது என்பதனை உறுதி செய்யும் வகையிலான கொள்கைகளை உருவாக்குதல் என்பனவும் உள்ளடக்கப்பட்டிருந்தன.

[23] இக் கையேட்டிற்கு பினவருவன மூலங்கள் பயன்படுத்தப்பட்டன: M.Sharp "Australian Policy on the Ethinic Tension InSolomon Islands 1999 – 2001", SSGM Workshop Paper (2001); Global IDP Database, "Profile of Internal Displacement: Soloman Islands" (2002); J.Fraenkel, The Manipulation of Custom (2004); Amesty International, Solomon Isands: Women Confronting Violence (2004); C.Moore, The Misappropriation of Malaitan Labour" in The Journal of Pacific History (September 2007); "Soloman Islands gets Desmond Tutu truth help" The Australian (April 29, 2009); Solomon Islands TRC Act, No. 5 2008, Part III. Fuctions of the Commission, 5(1) and 5(2)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கையேடு: பழங்குடி மக்களது உரிமைகள் பற்றிய ஐ.நா. சபையின் பிரகடனம் [24]

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்சபை (UNEA) 2007 ஆம் ஆண்டு செப்படம்பர் 14 ஆம் திகதி பழங்குடி மக்களது உரிமைகள் தொடர்பில் பிரகடனம் ஒன்றை ஏற்று இணைத்துக் கொண்டது. அது பொதுச்சபையின் பிரகடனம் என்பதனால் சர்வதேச சட்டத்தின் கீழ் சட்டரீதியாக அதனை கட்டுப்படுத்தமுடியாது. அது புதிய உரிமைகள் எதனையும் உருவாக்கவில்லை. ஆயினும் தற்போது நடைமுறையில் நிலவிவரும் சர்வதேச மனித உரிமைகளையும் தத்துவங்களையும் அவற்றை பழங்குடி மக்கள் நலன்களுக்காக பிரயோகிப்பது பற்றியே விபரிக்கின்றது. அப்பிரகடனம் பழங்குடி மக்கள் நாடுகளின் பன்முகப் பண்பிற்கும், வளமிக்க கலாசாரத்திற்கும் சமூகங்களின் பலதரப்பட்ட பண்புகளுக்கும், தனிப்பண்பினதான பங்களிப்பாளர்கள் என்பதனை எடுத்துக் கூறுவதாகவுமுள்ளது. மேலும் அம்மக்கள் தனிப்பட்ட வகையிலும் குழுவினராகவும் கொண்டுள்ள உரிமைகள் பற்றி கூறுவதுடன் சர்வதேச சமூகம் கலாசார பன்முகப் பண்பினை கௌரவிக்க ஏற்கனவே வெளியிட்டுள்ள அர்ப்பணிப்புகளையும் மீள் உறுதி செய்து நினைவுபடுத்தியுள்ளது. அப்பிரகடனத்தை பின்வருமாறு சுருக்கமாகக் கூறலாம்:

### அடிப்படை உரிமைகளும் முக்கியப்படுத்தும் தத்துவங்களும் உள்ளடக்கியுள்ளவை (விதிகள் 1-6)

பழங்குடி மக்களுக்கான அனைத்து மனித உரிமைகளையும், எதுவித பாராபட்சங்களுக்கும் உட்படுத்தாமல், சுய நிர்ணயம், பழங்குடியினரது நிறுவனங்களைப் பேணிப் பராமரித்தல், தேசியத்துவ உரிமை ஒன்றிற்கான உரிமை என்பன உட்பட்டவற்றை முழுமையாக அனுபவிப்பதற்கான உரிமைகள்.

### வாழ்வு, கூறுபடாது வாழ்தல், பாதுகாப்பு (விதிகள் 7-10)

இவ்வுரிமைகளின்படி அடிப்படை சேவைகளான வாழ்வதற்கான உரிமை, பாதுகாப்பு, விடுதலை, இன அழிப்பு நடவடிக்கைளிலிருந்து விடுதலை, என்பவற்றிற்கும் உரித்தாவர் என்பதோடு வற்புறுத்தி ஒன்றுபட வைத்தல் (assimilation) அல்லது கலாசாரத்தை அழிவுறச் செய்தல், வற்புறுத்தலின் பேரில் வேறெங்கோ கொண்டு சென்று குடியேற்றல், கூறுபடாது (பிளவுபடாது) வாழ்தல் மற்றும் நபரொருவரது பாதுகாப்பு மற்றும் ஒரு பழங்குடியுடனோ ஆனால் அரசுக்கு உட்பட்டதாக வாழும் உரிமை என்பனவற்றிற்கு அவர்கள் உரித்தாவர் என்பன தவிர்க்கப்பட வேண்டியனவாகும்.

### கலாசார ஆன்மீக மற்றும் மொழி வாரி அடையாளம் (விதிகள் 1-13)

இவ்வுரிமைகள் அவர்களது கலாசாரங்கள், அடையாளங்கள் உதாரணமாக கலாசாரத்தை புனராய்வு செய்தல், மொழி வரலாறு என்பனவற்றை வெளிப்படுத்தி அறியச் செய்தல் மற்றும் பாரப்பரியங்களான இடங்கள் சடங்குகளுக்குரிய பொருட்கள், மற்றும் எஞ்சியவற்றை (எச்சங்களை) மீள தாயகம் கொண்டுவருதல் என்பனவாகும்.

### கல்வி, தகவல் மற்றும் தொழிலாளர் உரிமைகள் (விதிகள் 14-17)

கல்வி பெறுவதற்கான உரிமை; செந்தமாகக் கல்வி நிறுவனங்களை இயக்குவதற்கான உரிமை; தனது சுய மொழியில் கற்பித்தல்; கலாசார உரிமைகள், கல்வியிலும் மற்றும் பொதுத்துறை தகவல்களிலும் பிரதிபலித்தல்; பிரதான மற்றும் பழங்குடிமக்களது மொழி ஊடகத்தினை அணுகக்கூடியமை; தொழிலாளர் உரிமைகள் மற்றும் பொருளதார சுரண்டலிலிருந்து பாதுகாப்பு என்பன இதில் உள்ளடங்குவன.

### பங்கேற்புடனான அபிவிருத்தி மற்றும் ஏனைய பொருளாதார சமூக உரிமைகள் (விதிகள் 18-24)

பிரதிநிதிகள் அமைப்புகளினூடாக தீர்மானம் செய்வதில் பங்கு கொள்ளும் உரிமை; பிழைப்பூதியம் மற்றும் அபிவிருத்தி போன்றவற்றிற்கு பழங்குடியினரது நிறுவனங்களை உறுதி செய்தல். பழங்குடியினருக்கு பிரதிகூலமானவற்றினை கவனித்து ஆவன செய்வதற்கான சிறப்பு நடவடிக்கைகளும் உரிமைகளை அனுபவிப்பதில் பாராபட்சம் காட்டாதிருப்பதனை உறுதி செய்தலும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகள் மற்றும் பாரபட்சம் காட்டாமையை உறுதி செய்தல்; அபிவிருத்தியடைவதற்கான உரிமை; பாரம்பரிய சுகாதார மருத்துவ பழக்கவழக்கங்களையும் மருந்துகளையும் பெற்றுக்கொள்ள அணுகக்கூடியமை என்பன இவற்றிலடங்குகின்றன.

**நிலம், ஆட்சிப்பரப்பு மற்றும் இயற்கை வளங்களுக்கான உரிமை (விதிகள் 25-32)**

நாடு, இயற்கை வளங்கள் மற்றும் அறிவுசார் உரிமைகளும் நிலம் மற்றும் ஆட்சிப்பரப்பு என்பவற்றுடன் தொடர்புகளை பேணிவருவதற்கான உரிமைகளும் அவ்வாறான நில உரிமைகளைக் கொண்டிருக்க அந்நிலங்களுக்கு அரச பாதுகாப்பு பெற பழங்குடி மக்களது நிலங்களை அங்கீகரிக்கும் முறைகளுக்கு; சுவீகரித்துக் கொள்ளப்பட்ட நிலங்களுக்கான மாற்றீடும் நட்ட ஈடும் பெற்றுக் கொள்ள; சூழலை பேணுவதற்கும் பாதுகாப்பதற்கும்; பழங்குடியினரது நிலங்களில் ஆபத்தான விளைவுகளைத்தரும் கழிவுகளைக் களஞ்சியப்படுத்தல் மற்றும் இராணுவ நடவடிக்கைளுக்கான சட்டதிட்டங்களுக்கு; மரபுவழி அறிவுப் பாதுகாப்பிற்கு; கலாசார பாரம்பரியங்கள் மற்றும் அறிவுசார்ந்த சொத்துரிமை (Intellectual Property) மற்றும் பழங்குடியினரது நிலங்களை அபிவிருத்தி செய்தல் என்பனவற்றிற்கு இவ்விதிகள் ஏற்புடையன.

**பழங்குடி மக்களது நிறுவனங்கள் (விதிகள் 33-37)**

சுய நிர்ணய உரிமையினை விஸ்தரிப்பதற்கான உரிமையும் சுய அரசாங்கத்தை உள்ளடக்கியிருக்கும் உரிமையும்; அங்கத்துவத்தை நிர்ணயித்தல்; பழங்குடி மக்களது நிறுவனங்களை பேணிப் பராமரித்தல் (நீதித்துறை முறைமைகள் உள்ளடங்கலாக); சமூகங்களில் தனிப்பட்டவர்களது பொறுப்புக்களை நிர்ணயித்தல்; சர்வதேச எல்லைகளைக் கடந்ததாக உறவுகளைப் பேணிப் பராமரிக்க; அரசுகளுடனான ஒப்பந்தங்கள் உடன்படிக்கைகள் மற்றும் ஆக்கபூர்வமான ஏற்பாடுகளுக்கான அங்கீகாரத்தினை பெறுவதற்கான உரிமை என்பன இவற்றில் உள்ளடங்குவன.

**பிரகடனத்தை நடைமுறைப்படுத்தல் (விதிகள் 38-42)**

பழங்குடி மக்களுக்கான பிரகடனத்தை நடைமுறைப்படுத்த தேவையான நிதி மற்றும் தொழில்நுட்ப உதவிகளை செய்வதுடன் அதனை நடைமுறைப்படுத்தும் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதும் அரசுகளினதும் ஐ.நா.சபையின் செயலான்மை () அமைப்புக்களினதும் பொறுப்பாகும். நியாயமானதும், நேர்மையானதுமான முரண்பாடு தீர்மான செய்முறைகளை ஸ்தாபித்தலும் இவற்றில் உள்ளடங்குவன.

**தீர்மானத்தின் பொதுவான வழிமுறைகள் (விதிகள் 43-46)**

இவ்விதிகள் பிரகடனத்தை விளக்குவதற்கான வழிகாட்டலையும் உதவியையும் வழங்குகின்றன.

- பிரகடனத்தின் ஏற்பாடுகள் குறைந்தபட்ச தரங்கள் என அங்கீகரித்து பழங்குடி ஆண்களுக்கும் பெண்களுக்குமாக அவற்றை சமத்துவத்துடன் பிரயோகிக்கப்படுத்த வேண்டும்.

- பிரகடனத்தில் அங்கீகரிக்கப்பட்டுள்ள தரங்களை / நியமங்களை பழங்குடி மக்களது உரிமைகளை கட்டுப்படுத்தவோ அல்லது குறைத்து விடவோ பயன்படுத்தலாகாது. அவற்றை ஐ.நா.சபையின் பட்டையத்துடனும் மற்றும் சர்வதேச மனித உரிமை நியமங்களுடன் ஒத்துப் போகும் வகையில் கையாளவேண்டும்.

- பிரகடனத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏற்பாடுகள் நீதி, சனநாயகம், மனித உரிமைகளுக்கு மதிப்பளித்தல், சமத்துவம், பாராபட்சமாக நடத்தாமை, நல்லாட்சி மற்றும் நல்லெண்ணத் தத்தவங்களினூடாக விளக்கப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கையேடு: நேர்காணல் (பேட்டி) தத்துவங்கள்**

நேர்காணலை நடாத்துவதற்கான வழிகாட்டற் தத்துவங்கள்

- **அறிவிக்கப்பட்ட சம்மதம்:** பேட்டி காணப்பட்ட நபர் தான் அளித்த பேட்டியின் பெறுபேறுகள் எவ்வாறு பயன்படுத்தப்படும் என்பதனை அறிந்து கொள்வதற்கும், தான் அளித்த தகவல்களில் எவையெவை வெளிப்படுத்தப்படலாம் என்பதனை நிர்ணயிப்பதற்கும் அவரளித்த தகவல்களின் மூலமாக அவர் எவ்வாறு அடையாளம் காணப்பட வேண்டும் என்பதனை தீர்மானிப்பதற்குமான உரிமைகளைக் கொண்டவராவார்.

- **பாதுகாப்பு:** பாதுகாப்பு என்பது ஒரு பிரச்சினையாக இருக்குமேயானல், பேட்டியளித்தவரை பாதுகாப்பதற்கான திட்டம் ஒன்றிருக்க வேண்டும். அத்துடன் பேட்டி கண்ட உங்களதும் மற்றும் அப்போட்டி காணப்படும் தருணத்தில் பிரசன்னமாயிருந்த வேறெவரும் இருந்திருப்பார்களேயானால் அவர்களுடைய பாதுகாப்பும் உறுதி செய்யப்படுதல் வேண்டும்.

  - நீங்கள் பேட்டிகண்ட நபருக்குரிய மரியாதை / மதிப்பு சரியான முறையில் வழங்கப்பட்டிருத்தல் அவசியம்

- பேட்டி வழங்குபவரிடம் அவருக்கு வசதியான இடம், நேரம் என்பன பற்றி பேசி முடிவு செய்வதுடன் குறித்த நேரத்திற்கு அவ்விடம் செல்லுங்கள்

- எவரையும் உங்கள் கேள்விக்கு பதிலளிக்குமாறு நெருக்கடி செய்யாதீர்கள். நீங்கள் பேட்டி காணப்படுபவருக்கு உங்கள் கேள்விக்கு பதிலளிக்க மறுக்கும் அல்லது பேட்டியை எந்த ஒரு நிலையிலும் நிறுத்திக் கொள்வதற்குமான உரிமையுண்டு

  - ஆழ்ந்து கவனிப்பவராக இருப்பதுடன் கையடக்கத் தொலைபேசியை நிறுத்தி வைத்துவிட்டு பேட்டியை மேற்கொள்ளுங்கள் பேட்டி தருபவரை குறுக்கிடாதீர்கள்.

- கட்டுப்படுத்தும் பண்பினதான (Leading) வினாக்களை தவிர்ப்பதுடன், தெளிவான கருத்துள்ள வினாக்களைக் கேளுங்கள்.

- பொருள் தெளிவான நோக்கத்தினை அடிப்படையாகக் கொண்ட (Objective) வினாக்களை கேட்பதுடன் தீர்ப்பு வழங்கள் சாராத வகையினதாக கேள்விகள் அமையட்டும். பாதிப்புக்குளளானவர்களை மீண்டும் மன வேதனைக்குட்படுத்துவதும் குற்றஞ் சாட்டாததுமான வகையிலும் கேள்விகள் இருக்கவேண்டும்.

- **தயார்படுத்திக்கொண்டவராயிருங்கள்:** பேட்டியளிப்பதவரது வரலாறு அவரது பின்னணி என்பன பற்றி தெரிந்து கொண்டிருந்தால் தகவல் தெரிந்த வகையினதான கேள்விகளை கேட்க வசதியாக இருக்கும்.

பேட்டிகள் நடாத்த ஏற்ற சில சிறு துணையுதவிக் குறிப்புக்கள்:

- பேட்டிகளை சிறப்பாக நடாத்துவதற்கு சிறு துணையுதவிக் குறிப்புகளைப் பெற்றுக் கொள்ள பின்வருவன உதவியாக இருக்கும். Handbook on Fact - finding and Documentation of Human Rights Violations by D.J.Ravendran Manuel Guzman and Babes Iganacio (Bangkok : Asian Forum for Human and Development ; 1994) 29-40 A.pdf file of the book is available at: http://www.huridocs.org/resource/handbook-on-fact-finding-and-documentation-of-human-rights-violations/



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- மனித உரிமை மீறல்கள் பற்றி நீங்கள் நுணுக்கமாக ஆய்வு செய்து அவைபற்றி தெளிவாக விளங்கிக் கொள்ளும் நோக்கத்துடன் மேற்கொள்ளும் பேட்டியொன்றினை தயாரிக்கும் போது நீங்கள் கவனிக்க வேண்டிய முதற்படி அது பற்றி முதலிலேயே கிடைக்கக் கூடியதாகவுள்ள தகவல்களினடிப்படையில் போதிய புரிந்துணர்வினை பெற்றிருத்தல் வேண்டும். அத்து மீறல்கள் தொடர்பான முக்கியக் கூறுகள் () மற்றும் அவற்றிற்கான உதாரணங்கள் பற்றிய வலிமையான மற்றும் பலவீனமான பேட்டிகள் பற்றி தெரிந்து கொள்வதற்கு பின்வரும் ஆதாரம் பயனுடையதாயிருக்கும். Human Rights Documentation Manual Series (Chiang Mai, Thailands: Network for Human Rights Documentation-Burma;2008) http://www.aappd.org/nd_burma.htmal.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கையேடு: ஆவணப்படுத்தலும் (Documentation) உண்மைகளை மீட்டெடுத்தலும் (Recovery)

நவீன மனித உரிமைகள் இயக்கம் அதன் ஆரம்பகாலம் முதலாகவே அனைத்து வகையான ஆவணங்களிலும் தங்கியிருந்து வந்துள்ளது. மனித உரிமை மீறல்களை மீறி குற்றமிழைத்தவர்களுக்கு எதிராக சட்ட மன்ற வழக்குகளுக்கு தேவையான சான்றுகளுக்கான ஆவணங்களாக தேவைப்படுவதுடன், பாதிக்கப்பட்டவர்களுக்கு எதிராக கடந்தகாலங்களில் இடம் பெற்ற அடக்கு முறைகள் தொடர்பான உண்மைகளை உறுதி செய்து நிருபிக்க, பாதிக்கப்பட்டவர்கள் மேற்கொள்ளும் முயற்சிகளுக்கும் கடந்தகால அடக்குமுறை ஆட்சியின் பின்னர் அல்லது முரண்பாடுகள் முடிவுற்றதன் பின்னர் யாருக்கு இழப்பீடுகள் வழங்கலாம் என்பன தொடர்பானவற்றினை தீர்மானிப்பதற்கும் ஆவணப்படுத்தப்பட்ட சான்றுகள் தேவைப்படுகின்றன.

திறந்த பண்பினதும் நியாயமானதுமான சமூகங்களை உருவாக்கும் முயற்சிகளின் போது கடந்த கால பேரளவு அட்டூழியங்கள் தொடர்பில் போராடி ஆவன செய்யவதற்கான பல்வேறு மாதிரியுருக்கள் (Model) அண்மை தசாப்தங்களில் விருத்தி செய்யப்பட்டுள்ளன. குற்றமிழைத்தவர்களுக்கு எதிராக வழக்குத் தொடரவும், உண்மையறியும் பொறிமுறைகளை நிறுவவும், பாதிப்புக்குள்ளாகியவர்களுக்கு இழப்பீடு வழங்குவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளவும் மற்றும் ஞாபகார்த்த அருங்காட்சியகங்களை நிர்மானிக்கவும், சனநாயகம் மற்றும் மனித உரிமைகளுக்கான ஆர்வலர்கள் தீர்மானித்து செயற்படுவார்கள். அனைத்து பிரச்சினைகள் தொடர்பிலும் ஆவணப்படுத்தும் முயற்சிகள் முக்கிய பங்கினை வகிப்பதுடன் அவற்றின் விளைவாக மனித உரிமைகள் துஸ்பிரயோகம் தொடர்பான சான்றுகளை பாதுகாப்பதன் வாயிலாக இழைக்கப்பட்ட அநீதிகளுக்கான நீதி வழங்கும் அரசியல் உடன்பாடு ஏற்படவும் நல்லிணக்கச் செய்முறைகளை வெற்றியடையச் செய்வதற்கான கருவிகளைப் பெற்றுக் கொள்ளவும், கூடியளவில் நியாயமான ஒரு எதிர்காலத்தை கட்டியெழுப்பத் தேவையான மக்கள் தமது வரலாறு பற்றி நிவைபடுத்திக் கொள்ள உதவுவதாகவும் அவை இருக்க முடியும். எனவே ஆவணப்படுத்தும் திட்டங்கள் என்பவை நிலைத்து நிற்பதற்கான நீதியை நிறுவுதல் மற்றும் குற்றம் செய்தவர்கள் தண்டிக்கப்படாது பாதுகாக்கப்படும் கலாசாரத்திற்கு (Impunity) எதிரான போரட்டங்கள் போன்றவற்றில் பெரும் பங்கினை வகிக்கின்றன.

மனித உரிமைகளை ஆதரித்து வாதாடுவது தொடர்பில் ஆவணப்படுத்தும் முயற்சிகள் இன்றியமையாதனவாயிருப்பதுடன் அவை நியாயமானதும் செய்திறன் மிக்கதுமான நிலைமாற்றத்திற்கான நீதிக்கான பொறிமுறைகளுக்கும் பங்களிக்கின்றன. அரசுசாரா நிறுவனங்களால் சேகரிக்கப்பட்ட ஆவணங்கள் அண்மைக்காலங்களில் ஏதோ அளவிலான நிலைமாற்றம் ஏற்பட்ட நாடுகளிலே உண்மையறியும் முயற்சிகளுக்கு, அரசு சாரா நிறுவனங்களால் அத்தியாவசியமான அங்கங்களாகவும் சான்றாகவும் பயன்படுத்தப்பட்டுள்ளன. உண்மையறிவதற்கான ஆணைக்குழுக்கள் மற்றும் சிவில் சமூகத்தின் உண்மை விளம்பும் முயற்சிகள் இவற்றிலடங்குவன. நிலைமாற்றத்திற்கான வாய்ப்புக்கள் அருகியோ அல்லது நீண்ட எதிர்காலத்தில்தான் ஏற்படமுடியும் என்ற நிலமை காணப்படும் சமூகங்களில் மக்களையே கூட அவற்றை தயார் செய்ய "ஆவணப்படுத்தல் திட்டங்கள்" உதவிகளை வழங்கலாம். நடந்தவை (துயர சம்பவங்கள்) பற்றி ஆவன செய்வதற்கான அரசியல் உடன்பாடு போதியளவில் இல்லாத நிலமைகளில் அரசுசாரா நிறுவனங்கள் பொறுப்புக் கூறுதல் தொடர்பில் தேவையானவற்றை நடைமுறைப்படுத்த பெருமளவு அழுத்தங்களை கொடுத்து வருகின்றன. இவ்வாறான நிலவரங்களில் அரசுசாரா நிறுவனங்கள், மனித உரிமை மற்றும் ஆர்வலர்கள், சனநாயகத்தினை ஆதரித்து வாதாடுபவர்கள் போன்றோர் கடந்தகால துரதிஸ்ட சம்பவங்கள் தொடர்பில் ஆவன செய்யப்பட வேண்டும் என்பதற்காக அரசியல் உடன்பாட்டை ஏற்படுத்த பெரிதும் போராடுவதுடன் அரசியல் வாய்ப்புக்களினால் ஏற்படக்கூடிய அனுகூலங்களை பயன்படுத்துவதற்கான கருவிகளையும் உருவாக்குகின்றனர். இவ்வாறான சவால்களை எதிர்கொள்ள ஏற்றவகையில் அரசுசாரா நிறுவனங்கள் ஆவணங்களை சேகரித்தல் மற்றும் பாதுகாத்தல் உட்பட்ட உபாயங்களை விருத்தி செய்து வருகின்றன.

ஆவணங்கள் சார் பொருள் வகைகள் பலதரப்பட்டனவாகும். உத்தியோகபூர்வ அதிகாரத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துறையினரால் தயாரிக்கப்பட்ட பதிவுகள், சிறைச்சாலைகளிலிருந்து எழுதப்பட்ட கடிதங்கள், அனுதாபம் கொண்ட காவலாளிகள் வெளிப்படுத்திய தகவல்கள், காட்சிக் காணொலி (வீடியோ) மற்றும் ஒலி சார்ந்த பதிவுகள், செய்தித்தாள் கட்டுரைகள், உள்ளூர் அரசு, அதிகாரிகள் தயாரித்து பயன்படுத்திய ஆவணங்கள், துன்பங்களுக்கு ஆளாகியவர்களால் அல்லது அவற்றை நேரில் கண்ட சாட்சியங்களினால் எழுதப்பட்ட அல்லது வாய்மூலம் கூறப்பட்ட வாக்குமூலங்கள் என்பன அவற்றிளடங்குகின்றன.

கடந்தகால மனித உரிமை துஸ்பிரயோகம், அட்டூழியங்கள், இன ஒழிப்பு மற்றும் மனித இனத்திற்கு எதிரான குற்றங்கள் பற்றிய தகவல்களை தயாரிப்பதற்கு ஆவன சேகரிப்பு பங்களிக்கின்றது. கடந்த கால துஸ்பிரயோகங்கள் பற்றிய புனைவுகள் (கதைகள்) பெரும் வேறுபாடுகளைக் கொண்டதாயிருக்கும். வெவ்வேறான இடங்களில் ஏற்பட்டவை வெவ்வேறானதாக இருக்கும். அவை நீதிமன்றங்கள், உண்மையறியும் ஆணைக்குழுக்கள், அரசாங்க அலுவலகங்கள் அயலவர்கள் வாழுமிடங்கள், தேசிய மற்றும் சர்வதேச ஊடகம் என வேறுபடுவன. இவ்வாறான அனைத்து வெவ்வேறான நிகழ்ச்சிகளிலும் கதைகள் இயன்றளவுக்கு செம்மையானதாகவும் நுட்பமானதாகவும் இருப்பதோடு நேரடியாக பாதிப்புக்குள்ளாகியவர்களது அனுபவங்களையும் குரலையும் பிரதிபலிப்பதாகவும் இருத்தல் அவசியமாகும். கதையில் முக்கிய பாத்திரம் வகிப்பவர் யார்? அவருக்கு நடந்தது என்ன? ஏன் அது இடம்பெற்றது? என்பது பற்றி எமக்கு தெரிய வேண்டும். எங்கெங்கே மோசமான சம்பவங்கள் இடம் பெற்றன. அதற்கு யாரேனும் பொறுப்பானவர்களா? அவ்வாறாயின் காரணமான நபர்களை பொறுப்புக்கூற வலியுறுத்த வேண்டும். நாம் நாட்டின் பிரஜைகளாக, மனித இனத்தினராக அல்லது சமுகங்களாக இருந்து கொண்டு பொதுமக்களுக்கு எதிரான அட்டூழியங்கள் இடம் பெறுவதனை தெரிந்துக்கொண்டு எவ்வாறு சகித்துக்கொள்ள முடியும். அல்லது அவை இடம்பெறுவதனை தடுத்து நிறுத்த யாது செய்திருக்கலாம் என்பது பொறுத்தும் நாம் விளங்கிக் கொள்ள முயற்சிக்க வேண்டும்.

கடந்த கால மனித உரிமைகள், துஸ்பிரயோகம் என்பன பற்றிய முழுமையானதும் செம்மையானதுமான கதைகளுக்கு நான்கு மூலகங்களின் கலந்த விபரங்கள் தேவைப்படுகின்றன.

1) **வாக்குமூலங்களும் குரல் மூலமான தகவலும்:**

பாதிக்கப்பட்டவர்களது குரல் வாயிலாக பதிவு செய்யப்படுபவை அவை காகிதத்தில் பதிவு செய்யப்பட்டதாக அல்லது காணொளி காட்சியாக (வீடியோ) அல்லது ஒலிப் பதிவு செய்த (ஆடியோ) வாக்குமூலமாக இருக்கலாம். ஆனால் அவைதான் கடந்தகாலங்களில் இடம் பெற்ற மனித உரிமை துஸ்பிரயோகம், மற்றும் அட்டூழியங்கள் என்பன பற்றிய கதைகளைக் கூறக்கூடிய முக்கியமான தனியொரு மூலமாக இருக்கும். இதன் காரணமாகவே பாதிக்கப்பட்டவர்களின் சாட்சியங்கள் மற்றும் குறித்த கதை தொடர்பாக நேரடியாக பங்கு பற்றிய பாத்திரங்களது (சம்பந்தப்பட்டவர்கள்) கதைகளை கேட்டு நடந்தவை என்ன என்பது பற்றி விளங்கிக் கொள்ள முயற்சிக்கின்றோம். மனித உரிமைகளுக்கான வழக்காடு மன்றங்கள் மற்றும் முறையான உண்மையறியும் ஆணைக்குழுக்களில் பாதிக்கப்பட்டவர்கள் அவர்களுடைய கதைகளை கூறி அதனை சமுகத்தின் ஏனைய அங்கத்தவர்களும் கேட்டறியச் செய்வதற்காகவே அவை இடம்பெறுகின்றன. பாதிக்கப்பட்டவர்களது தேவைகள் பற்றி அறிந்து கொள்வதற்கு இது ஒரு வழிமுறையாகும். பாதிக்கப்பட்டவரகளது குரல்களை (வாக்குமூலங்கள்) நியாயமானதாகவும் நுட்பமாக/செப்பமான முறையிலும் யாவற்றையும் முழுமையாக ஆவணப்படுத்துதலே வலிமையான ஆவணப்படத்தல் செய்முறையில் முக்கியமானதாகும்.

2) **உத்தியோகபூர்வமான அறிக்கைகள்:**

உத்தியோக பூர்வமான அறிக்கைகள் அல்லது அவற்றை சேகரிக்கும் நிறுவனங்களுடன் இணைந்து சேகரித்தல் பயனுடையதாயிருக்கும் ஏனெனில் அவை மிகவும் முக்கியமான தகவல்களைத் தரும் ஆதாராங்களாக இருக்கின்றன. உதாரணமாக கம்போடியா காமர்ரோ ஆட்சி தொடர்பாக காமர்ரோ ஆட்சியிலிருந்து தப்பி உயிர்வாழ்பவர்கள் செய்த வேண்டுகோள்கள் (Petitions) மற்றும் நேரடி பேட்டிகளின் எழுத்துப்படிவம் (Transcript)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்றவற்றினை சேகரித்து கம்போடியா ஆவணப்படுத்தும் நிறுவனமான டிசி - கேம் வழங்கியதன் காரணமாகவே காமர்ரோ ஆட்சியின் தலைவர்களுக்கு எதிரான கம்போடியாவின் நீதிமன்றத்தின் வழக்கத்தினை மீறிய (Extraordinary) விசாரணை மன்றங்களில் இடம்பெற்ற விசாரணைகளுக்கு முக்கியமான சாட்சியங்கள் போதியளவில் வழங்கப்பட்டன. உத்தியோகபூர்வமான வாகன வசதி ஒதுக்கீடு மற்றும் அன்றாட அறிக்கைகள் என்பன கௌத்தமாலா தேசிய பொலிஸ் சுவடிக்கூடத்திலிருந்து பெறப்பட்டு ஒழிவுமறைவாக பல வருடங்கள் பாதுகாக்கப்பட்டு, அண்மைக்காலங்களில் இடம் பெற்ற அரச நிறுவனங்களால் மேற்கொள்ளப்பட்ட சட்டவிரோத தூக்குத்தண்டனைகள் மற்றும் காணமற் போகச் செய்தமைக்கான வழக்கு விசாரணைகளில் பயன்படுத்தப்பட்டுள்ளது. அதனைப் போன்றே முன்னாள் யூக்கோஸ்லேவியாவுக்கான சர்வதேச குற்ற வழக்காடு மன்றத்தில் (ICTY) பெருமளவினதான உத்தியோக பூர்வமான அறிக்கைகள் விசாரணையின்போது பயன்படுத்தப்பட்டன.

**3) உத்தியோக பூர்வமில்லாத அறிக்கைகளும் பௌதீக பொருள்வகைச் சார்ந்தனவும்:**

பாதிக்கப்பட்டவர்களது குரல் (தகவல்கள்), சாட்சியங்கள், குற்றவாளிகள் மற்றும் முன்னாள் ஆட்சியாளர்களால் விட்டுச் செல்லப்பட்ட அறிக்கைகள் மற்றும் பொருள்வகைச் சார்ந்தனவும் கடந்த காலங்களில் இடம்பெற்ற பெரியளவு அட்டூழியங்களை ஆவணப்படுத்த உதவுகின்றன. உதாரணமாக கொலைப்படையினரது காணொளிக் காட்சிகள் (வீடியோ) கொல்லப்பட்டவர்களது எலும்புகள், ஆடைகள், மற்றும் பாதிக்கப்பட்டவர்களால் பயன்படுத்தப்பட்ட பாவனைப் பொருட்கள் உண்மைகளை எடுத்துக் கூறுவதற்கான ஆவணப்படுத்தலுக்கான முக்கிய சான்றாதாரங்களாகும்.

**4) பகுப்பாய்வும் மற்றும் ஏனைய உருவாக்கப்பட்ட ஆவணங்களும்:**

பலதரப்பட்ட முதனிலை (Primary) மூலகங்களின் அடிப்படையில் திரட்டப்பட்ட சம்பவங்கள் தொடர்பாக விசாரணை செய்து பெறப்பட்ட அறிக்கைள், வாக்குமூல தரவுத்தளங்கள், மனித உரிமைசார் அறிக்கைகள் மற்றும் மூல (Orignal) ஆவணப்படுத்தலினை ஆதரிக்கும் வகையில் உருவாக்கப்பட்ட ஏனைய ஆவணங்களும் விசாரணை நடாத்தப்படும் வழக்காடு மன்றங்களிலும் மற்றும் உண்மையறியும் ஆணைக்குழுக்களிலும் பயன்படுத்தப்பட முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நிலைமாற்றத்திற்கான நீதி என்பது பற்றி இடம் பெற்றுவரும் உரையாடல்கள் கூறுவதென்ன?**

**பெட்ரிக் பேர்ஜஸ் - 'ஆசியாவில் நீதி மற்றும் உரிமைகளுக்கான நிறுவனத்தின்' தலைவர்**

உலகில் உள்ள அனைத்து நாடுகளுமே அவற்றின் வரலாற்றில் ஏதோ ஒரு கால கட்டத்தில் பெரிய அளவில் இடம் பெற்ற மனித உரிமை மீறல் அனுபவங்களை கொண்டனவாகவே காணப்படுகின்றன. அவை அவற்றில் இடம் பெற்ற ஆயுத முரண்பாடுகளின் போது நடைமுறையிலிருந்த சர்வதிகார ஆட்சி அல்லது ஏதேனும் வேறுவகையான ஆட்சியாதிக்க கொள்கையுடைய ஆட்சியின் போது அல்லது இன, சமய, இனவாத அல்லது ஏதோவகையான தீவிரமான பாரபட்சம் காட்டும் நிலவரத்தின் போது இடம் பெற்றவையாக இருக்கலாம். பெரும்பாலும் திருடர்களைப் பாதுகாப்பதற்கும் நாட்டின் செல்வ வளத்தினை கொள்ளையிடுவதற்காகவுமே அத்து மீறல்கள் கருவிகளாகப் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளன. நாடுகள் சிலவற்றில் உதாரணமாக எனது நாடான அவுஸ்ரேலியாவில் அரசாங்கத்தின் தவறான வழிகாட்டலின் ஒரு பகுதியாக அந்நாட்டின் பூர்வீக குடிகளுக்கு எதிராக மிகமோசமான அத்துமீறல்கள் இடம்பெற்றன.

அண்மைக்காலங்களில் முரண்பாடுகள் மற்றும் அத்துமீறல்களை எதிர் கொண்டிருந்த நாடுகள் அவற்றிலிருந்து மீண்டு முன்நோக்கி செயற்படுகையில் பல சிக்கலான நிலைமைகளை எதிர்நோக்க வேண்டியதாக உள்ளன. பெரும்பாலானவற்றில் அவற்றின் கல்வி, சுகாதார வசதிகளின் நிலவரங்களை, மீள கட்டியெழுப்ப வேண்டியிருப்பதுடன், உட்கட்டமைப்பு வசதிகளையும் சீரமைப்பு செய்யவேண்டியுள்ளது. அவற்றுடன் சீர்த்திருத்தங்கள் தேவைப்படும் சிதைவடைந்த சட்டங்கள், ஊழல்களுக்கு எதிராக போராட வழிவகை காணப்பட வேண்டியுள்ளமை என்பன பெரும் சவால்களாக உள்ளன. அவ்வாறான நிலமைகளில் எதிர்காலம் நோக்கி எமது பார்வையைக் குவியம் செய்ய வேண்டியுள்ளது. அவ்வழிகளில் நடந்தது நடந்ததாகவே இருக்கட்டும். அங்கேயே அவற்றை விட்டுவிடுவோம். இவ்வாறான சிந்தனை முறை உண்மையாக இருக்க வேண்டும் என்பது எனது விருப்பமுமாகும். அது அனைத்தையும் மிகவும் எளிதாக்கி விடும். அதாவது கடந்தகாலத்தை கடந்த காலத்திற்கே விட்டுவிடலாம் என்ற சிந்தனை வழி.

**கடந்த காலத்தை உதாசீனம் செய்துவிட்டு வெற்றி கரமாக எம்மால் முன்னோக்கி செல்லமுடியுமா?**

பெரும் அளவிலான மனித உரிமை மீறல்களைக் கொண்ட வரலாற்றுடனான இருபதிற்கும் மேற்பட்ட நாடுகளில் நான் இவை தொடர்பில் பணியாற்றிய அனுபவங்களை மனதிலிருத்தி சிந்திக்கையில் கடந்த கால விளைவுகளை புறக்கணித்துவிடல் அல்லது உதாசீனம் செய்தல் என்பது சிறந்த மாற்று வழியாகாது என்ற கருத்தில் எனக்கு உறுதியான நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. மறத்தல் என்பது ஒரு வகையில் கவர்ச்சியான கருத்தாயிருந்தாலும் அது யதார்த்தமாகாது. மனித இனம் அவ்வாறு உருவாகியதல்ல கடந்தகாலம் முக்கியமற்றதென வாழும் பிறவிகள் மனிதர்களல்ல. அதுவும் குறிப்பாக கடுமையான தீங்குகள் எமக்கு இழைக்கப்பட்டிருந்ததோடு இணைந்த அனுபவங்களைப் பெற்றிருப்போமேயானால் அல்லது நாம் நேசிப்பவர்களுக்கு அல்லது நாம் அங்கம் வகிக்கும் சமூகத்திற்கு இழைக்கப்பட்டிருக்குமேயானால் எம்மால் அவற்றை மறந்துவிட முடியாது. நாம் யாரென்பதோடு இணைந்ததே எமது கடந்காலம். அத்துடன் நாம் யாராக இருக்கப்போகிறோம் என்பதும் அதில் பெரும் பங்கினை வகிப்பதாகும்.

சமூகங்கள் என்பவை வெறுமனே கட்டிடங்களை ஆக்கும் செங்கல் அல்லது சீமேந்து கட்டித்துண்டுகள் (Blocks) போன்றவற்றினால் ஆன ஒன்றிலிருந்து ஒன்றை சடத்துவமாக பிரிக்கக் கூடிய அமைப்புக்கள் அல்ல. அவை தனிப்பட்டவர்கள் பலரது கூட்டிணைப்பாகும். தனிப்பட்டவர்களுடைய மன உணர்ச்சிகள் மனக்கிளர்ச்சி மற்றும் நம்பிக்கைகளினால் உருவாக்கப்பட்ட சமூகங்களாகும். யாரோ ஒருவர் கடந்த மாதம் அல்லது கடந்த வருடம் உங்கள் மகனை கொன்றுவிட்டாலோ அல்லது மகளை சித்திரவதை செய்து அல்லது பாலின வன்முறைக்கு ஆளாகியிருந்தாலோ, அது கடந்தகாலங்களில் ஏற்பட்டது என்று உங்களை கூறுமாறோ அல்லது அவை இனிமேலும் பொருத்தமானதல்ல என்று கூறுமாறோ எதிர்பார்க்க முடியுமா? அல்லது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குற்றமிழைத்தவர்கள் எதுவித பின்விளைவுகளுக்கும் ஆட்படாமல் சுதந்திரமாக வாழ்வதனை பார்த்துக் கொண்டு உங்களை மகிழ்வுடன் வாழ்ந்து வருமாறுதான் கூறமுடியுமா? கடந்த வாரம் ஒருவர் நாம் முன்பின் அறியாத ஒருவரை கொலை செய்திருந்தால் அது கடந்த கால சம்பவம் இனிமேல் அது பற்றி சிந்திப்பது அர்த்தமற்றது அடுத்த வேலையைப் பார்ப்போம் என்றுதான் கூறிவிடுவோமா? இவற்றை யெல்லாம் அதாவது ஒரு கொலைக்குற்றம் இடம்பெறுவதனை நாம் அனுமதிக்க முடியாத போது ஆயிரக்கணக்கான இத்தகைய படுகொலைகளை எப்படி ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும்.

**வன்முறை வட்டச் செய்முறைக்கு எண்ணெய் வார்த்தல்**

பாரதூரமான மனித உரிமை மீறல்களின் காரணமாக பாதிக்கப்பட்டவர்களைப் பற்றி சிந்திக்கையில் அவர்களைச் சார்ந்த சமூகங்கள் அடையும் கோபமும் மன உணர்வுகளும் கடுமையானதாகவே இருக்கும். ஒரு முரண்பாடோ அல்லது சர்வாதிகாரியின் ஆட்சியோ முடிவுக்கு வந்ததன் பின்னர் அங்கே ஒரு அரவம் அடங்கிய அமைதி நிலை காணப்படுவதனைப் பார்த்து அதனை கடந்த காலவிளைவுகள் பற்றிய உணர்வுகள் தொய்ந்து விட்டதாகவோ அல்லது மறக்கடிக்கப்பட்டு விட்டதாகவோ இலகுவாக ஒரு தவறான முடிவுக்கு வந்துவிடலாகாது. அவை அமைதியாக நீருபூத்த நெருப்பாக உறங்கிக்கொண்டிருக்காலம். அது தொடர்பில் ஆவன செய்ய நாம் முயற்சிகளை மேற்கொள்ளாது மறந்துவிட முயற்சித்தல் அது வருங்காலத்தில் ஏதோ ஒரு சமயத்தில் பூகம்பமாக வெடித்துச் சிதறலாம். அதனால்தான் முரண்பாடுகள் தொடர்பான நிலைமைகள் அநேகமாக வன்முறையின் வட்டச் செய்முறையாக ஏற்படுகின்றன. மூலகாரணம் தொடர்பில் ஆவன செய்யாது நமது வழியில் செல்லலாம் என்ற மாயையில் நாம் தவறான வழிக்கு இட்டுச் செல்லப்படுகின்றோம். அதனால்தான் மூலகாரணங்கள் தொடர்ந்தும் இருக்குமானால் அவை மீண்டும் தலைத்தோங்குவதனை தடைசெய்ய முடியாது போய்விடுகிறது.

பல வருடங்களாக இடம் பெற்றுவந்த முரண்பாடுகளைத் தொடர்ந்து வன்முறை தீநாக்குகள் கொழுந்துவிட்டெரிவதற்கான உள்ளார்ந்த ஆற்றல் முற்றாக போய்விடாது. சற்று தாமதித்துக் கொண்டிருக்கிறது. கலாசார புல் கீற்றுக்கள் மீண்டும் காய்ந்து போனதன் பின் அதிலுள்ள ஈரப்பதன், சமய அல்லது இன சகிப்பின்மை பண்புகளால் உறுஞ்சப்படுவதினாலும், பொருளாதார இன்னல்கள், ஊழல், தொழில்வாய்ப்பின்மை, அவற்றுடன் இணைந்ததும் உருவாக்கப்படுவதுமான அந்தி இழைக்கப்படுவதான உணர்வுகளினாலும் புதுப்பிக்கப்பட்ட முரண்பாடுகள் ஏற்படுவதற்கான நிலவரங்கள் உருவாக்கப் பெறுகின்றன. இவ்வாறான நிலமைகளில் ஒரு சிறிய உடன்பாடின்மையான சம்பவம் நிகழ்ந்தாலும் கூட அதனை மையமாகக் கொண்டு எழும்பும் தீப்பொறியால் அல்லது சண்டையால் பழைய தீர்க்கப்படாத கோபத்தினதும் வேறுபாடுகளினதும் தீப்பிளம்புகள் வெடித்துச் சிதறி கட்டுப்படுத்த முடியாது கொழுந்து விட்டெரியும் தீப்பிழம்புகளாகி விடுகின்றன. இவ்வாறு தொடர்ந்தும் வன்முறையின் வெளிப்பாட்டு வட்டச் செய்முறை மீண்டும் மீண்டும் ஏற்பட்டுக் கொண்டே செல்வதால் நாடு அடைய வேண்டிய அபிவிருத்தி மட்டங்களுக்கும் நல்வாழ்வுக்கான வாய்புக்களுக்கான சந்தர்ப்பம் இல்லாதொழித்து போய்விடுகின்றன.

முரண்பாடுகள் இடம் பெற்ற வரலாறு கொண்ட ஒரு நாட்டில் கடந்த காலத்தில் நிகழ்ந்தன பற்றி ஆவன செய்ய வேண்டும் என்பது அடிப்படையானதோர் முன்னுரிமையாகும். அஃதில்லாது நிலைத்து நிற்கக்கூடியதும் சுபீட்சமானதுமான சமாதானம் என்பது ஏற்படவே முடியாததாகும். உண்மையறிதல், நீதி வழுங்கல் என்பன தொடர்பில் முறையாக ஆவன செய்யாதபோது காய்ந்து போன புல் கீற்றுக்கள் மீள (தீப்பற்றி) எரிந்து இதுவரை சாதித்து அடைந்திருந்தவற்றை விரைவில் அழித்து இல்லாததாக்கிவிடலாம்.

**நிலைமாற்றத்திற்குரிய நீதி எதனைக் கூறி நிற்கின்றது**

எம்மை எதிர் நோக்கும் சவால்களை இலகுவாகச் சமாளிக்க வேண்டுமானால் கடந்த காலத்தில் நடந்தவற்றை தீர்க்க சரியான வழிமுறைகளை கையாள வேண்டும் என்னும் தத்துவத்தை பின்பற்றுதலே இலகுவானதாயிருக்கும். பெரிதும் கடினமாயிருப்பது யாது செய்யலாம் என்பது தொடர்பில் ஒரு தீர்மானத்தை எட்டுவதாகும். அதனையும்விடக் கடினமானது இத்திட்டங்களை பின்னர் முறையாக நடைமுறைப்படுத்துவதாகும். நாம் கையாளும் எந்தவொரு முரண்பாட்டிற்கு பின்னரான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலவரங்களின் இயல்புகளுக்கும் ஏற்ப அவற்றை கையாள முற்படுகையில் அங்கே இடம் பெற்றவை என்ன என்பது பற்றிய உண்மைத் தொடர்பில் பெருமளவுக்கு வேறுபட்ட நம்பிக்கைகள் நிலவுவதுடன் இடம் பெற்றவற்றிற்கு பொறுப்பு கூற வேண்டியவர்கள் யார்? அவற்றை தவிர்த்திருக்க முடியுமா போன்றவை தொடர்பிலும் நிலவும் கடுமையான கோபதாபங்கள் பிரிவினைவுணர்வுகள் வெறுப்பு என்பன பெரும் சவால்களாகவே இருக்கும். இப்பிரச்சினைகளுக்கு ஆவன செய்வதிலேயே எதிர்காலத்தில் சமாதானத்தை கட்டி யெழுப்பும் பணியின் வெற்றி தங்கியுள்ளது. எவ்வாறாயினும் கடந்த காலங்களில் இடம் பெற்றவற்றை எதன் மூலமும் இல்லாததாக்க முடியாது என்பதுடன் அனைத்து தீர்வுகளுமே துரதிஸ்டவசமாக காயங்களை ஆற்ற போதாதனவாகவே இருக்கும்.

TJ என குறிப்பிடப்படும் நிலைமாற்றத்திற்குரிய நீதியானது (Transitional Justice) இவ்வாறான சவால்களைச் சூழ்ந்தே உருவாக்கப்பட்டுள்ளது. நிலை மாற்றத்திற்குரிய நீதிக்கு எளிதான வரைவிலக்கணம் ஏதுமில்லை. அத்துடன் இது பலதவறான புரிந்துணர்வுகளும் கற்பனைகளும் ஏற்படவும் காரணமாயிருக்கிறது.

**TJ பற்றிய சில கற்பனைக் கதைகள்**

ஒரு நாடு ரோம் சட்ட விளக்க வரையறைச்சட்டத்தை தனது நாட்டுக்கு (Rome Statute) செல்லத்தக்கதாக்கி (Ratify) உறுதிபடுத்தி ஒரு அங்கத்தவராவதற்கு முன்னரே கூட அங்கு ஏற்பட்ட பழைய குற்றங்கள் பற்றி சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் விசாரணைகளை ஆரம்பிக்க முடியும் என்பது பெருமளவுக்கு நிலவும் பொதுவான முதல் கற்பனைக் கதையாகும். (அது உண்மையாகாது ஏனெனில் சர்வதேச குற்றவியல் நீதி மன்றத்திற்கு (ICC) பின்னோக்கிச் செய்பட ஆணைகிடையாது) இரண்டாவது கற்பனைக்கதையானது உண்மையறிதல் மற்றும் நல்லிணக்கத்திற்குரிய ஆணைக்குழுக்கள் அல்லது TRC வழக்கமாக குற்றவாளிகளுக்கு பொதுமன்னிப்பு அளிக்க முடியும் என்பதாகும். (இதுவும் உண்மையல்ல நாற்பதிற்கு மேற்பட்ட TRC களில் தென்னாபிரிக்கா ஒன்று மட்டுமே அதன் அதிகாரங்களை மன்னிப்பு வழங்குதல் தொடர்பில் பயன்படுத்திபுள்ளது) அடுத்தது நிலைமாற்றத்திற்குரிய நீதி என்பது ஒரு பலவீனமான நீதிமுறை என்பதாகும். இது மூன்றாவது கற்பனைக் கதையாகும். ஆனால் TJ என்பது நீதிக்கும் மேலதிகமானது எனப்படுகின்றது. (TJ எனபது நீதியின் மீது தனது முழு கவனத்தைச் செலுத்துவதுடன் உண்மையறிதல், பாதிப்புக்குள்ளானவர்களுகு உதவுவது, சீர்திருத்தங்களுக்கு உதவுவது மற்றும் நல்லிணக்கத்தை ஊக்குவிப்பது போன்றவற்றையும் உள்ளடக்கியதாகும்.)

TJ யை சூழ்ந்து எப்போதும் ஏன் திரிக்கப்பட்ட கதைகள் உள்ளன என்பதனை விளங்கிக் கொள்வது பெரிதும் கடினமானதல்ல குற்றவாளிகளுக்கு தாம் செய்த குற்றங்களுக்காக தாம் தண்டிக்கப்படுவதோ அல்லது தண்டம் வசூலிக்கப்படுவதோ விருப்பமானதல்ல எனவே அவ்வாறானவர்களது குரல்களே வழக்குத் தொடர்வதற்கு மாற்றானதாக உரத்து ஒலிக்கின்றன. கடந்த காலங்களில் இழைக்கப்பட்ட ஆயிரக்கணக்கான குற்றங்களையும் தற்போது இடம் பெற்றுவரும் குற்றங்களையும் விசாரித்து ஆவன செய்ய நீதித் துறையினரால் சமாளிக்க முடியாதிருக்கும்.

முரண்பாடுகள் பெருமளவில் ஏற்பட்ட நிலவரங்களின் போது அவற்றில் நடந்தவை பற்றிய முழுமையான உண்மை என்னவென்று எவருக்கும் தெரியாதிருக்கும். குறித்த ஒரு பகுதியில் என்ன நடந்தது என்பது பற்றி சிலருக்கு தெரியலாம். அல்லது ஒரு குழுவினரது அனுபவங்களின் மூலமாக அல்லது குறித்த ஒரு காலப்பகுதியில் இடம் பெற்றவை பற்றி அறிந்திருக்கலாம். பெரிய பரந்த அளவில் என்ன நடந்தது என்பதனை அறிவது என்பது பெரும் சவாலாகவே இருக்கும். பொதுமக்களை பாதுகாக்கவேண்டிய பொறுப்பு அரசாங்கத்தினது. ஆனால் அக்கடமையில் அது தவறியிருக்கையில் ஆயிரக்கணக்கானோருக்கு இடம் பெற்றவை தொடர்பில் உதவிகளைப் பெற்றுக் கொள்ளும் உரிமை அம்மக்களுக்கு உண்டு. இருந்த போதிலும் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் (நாடுகளில்) இவ்வாறான உதவிகளுக்கு யார் யார் தகுதியானவர்கள் என்பதனை தீர்மானித்து உதவிகளை வழங்குவதற்கு தேவையான நிதிவளம் பற்றாக்குறையாக இருப்பதுடன் சாதகமற்றதும் ஊக்கமிழக்கச் செய்வதுமான நிலமைகளில் அவ்வாறான உதவிகள் என்னென்ன வகைகளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்கப்படவேண்டும் என்பதனை தீர்மானிப்பதும் முடியாத பணியாகவே காணப்படுவதும் குறிப்பிடத்தக்கதாகும்.

**நிலைமாற்றம் எவ்வாறு நீதியுடன் தொடர்புற்றுள்ளது?**

நிலைமாற்றத்திற்கான நீதி தொடர்பான வரைச் சட்டத்தில் உள்ளடக்கிய வகையில் நிலைமாற்றம் என்பது பேரளவு (மாபெரும் அளவில்) அத்து மீறல்கள் இழைக்கப்பட்ட ஒரு நிலமையிலிருந்து சமாதானமும் சனநாயகமும் நிலவும் ஒரு நிலைமை நோக்கி ஏற்படும் அசைவினைக் குறிப்பதாகும். நீதி என்னும் சொற்பதம் வேறுபட்ட அமைப்பிலான நீதியின் பல்வேறு பண்புகளை விளங்கிக் கொள்வதனைக் குறிக்கின்றது. அதில் சமூக மற்றும் நல மீட்பு நீதியும் உள்ளடக்கப்பட்டிருக்கும் என்பதும் கவனிக்கத் தக்கதாகும். ஐக்கிய நாடுகள் சபையின் அமைப்பில் நிலைமாற்றத்திற்கான நீதி என்பது கடந்த காலங்களில் இடம் பெற்ற பெருமளவினதான துஸ்பிரயோகங்கள் தொடர்பில் சமூகங்கள் முயற்சிசெய்து நிபந்தனைகளை விதித்து பொறுப்புக்கூறலை உறுதி செய்யவும், நீதியை வழங்கி நல்லிணக்கத்தை அடைவதற்குமான முழுமையான பல செய்முறைகளையும் பொறிமுறைகளையும் குறிப்பதாகும். (http://www.unrol.org/files/TJ_Guidance_Note_march_2010FINAL.pdf)

**இலங்கையின் அண்மைக்கால வரலாற்றுடன் உடன்பாட்டுக்கு வர TJ எவ்வாறு உதவ முடியும்**

கடந்த காலங்களில் இடம் பெற்ற சம்பவங்கள் தொடர்பில் ஆவன செய்வதற்கு ஏற்ற ஒரு உபாயத்தினை விருத்தி செய்வதற்காக நிலைமாற்றத்திற்குரிய நீதியின் (TJ) வரம்புச் சட்டத்தை (Frame Woork) பயன்படுத்துவது பற்றி சிந்திக்க வேண்டுமானால TJ என்னும் பதம் என்றால் என்ன என்பதனை சரியாக விளங்கிக் கொள்ளுதல் வேண்டும் அதுவே அச்செய்முறைக்கான முதற்படியாகும். இத்துறை வளர்ந்து செல்வதால் அறிவார்ந்தவர்களும் (acdemics) மற்றும் தொழில் நிபுணர்களும் (குறிப்பாக சட்டத்துறை நிபுணர்களும் TJ என்றால் என்ன என்பது பற்றி சுதந்திரமாக பெருமளவிற்கு விளக்கங்களை விஸ்தரித்து வந்துள்ளனர். நான் எனது சொந்த சிந்தனையின்படி பெரும்பாலான நிபுணர்களால் வெவ்வேறான முறைகளில் அங்கீகரிக்கப்பட்டுள்ள வரம்புச் சட்டத்திற்கான ஐந்து அடிப்படை மூலகங்களில் தங்கியிருப்பது பயனுடையாதாக இருக்கும் என நம்புகின்றேன். அதாவது எனது கைவிரல்கள் ஐந்தினைப் போன்று இவ்வைந்து பரப்புக்களிலும் கவனத்தைக் குவியச் செய்து தேவைகளைப்பற்றி மதிப்பீடு செய்யவும் உபாயங்களை விருத்தி செய்யவும் பயனுடையதாயிருக்கும ஐந்து விரல்கள் பின்வருவனவாகும். 1) உண்மையை ஸ்தாபித்தல், 2) பெருமளவுக்கு அத்து மீறல்களுக்கு பொறுப்பானவர்கள் மீது வழக்குத் தொடர்ந்து விசாரித்தல். 3) பாதிப்புக்காளானவர்களது உரிமைகளை மீட்டுக் கொடுத்தல், 4) வன்முறைகளுக்கு பங்களித்ததான நிறுவனங்களுக்கு தேவையான சீர்திருத்தங்களைச் செய்தல் மற்றும் நல்லிணக்கத்திற்கும் வேறுபாடுகளை உருவாக்கிய காரணிகளை திருத்துவதற்குமான நடவடிக்கைளை மேற்கொள்ளல் (இதனை வேறுபாடுகளை ஆற்றுவது என்றும் கூறலாம்) என்பனவாகும்.

**ஒரு முழுமையான அணுகுமுறையும் முயற்சிகளை ஒரு நிரலொழுங்கிற்கு உட்படுத்தலும்**

நிலைமாற்றத்திற்குரிய நீதிக்கான அடிப்படையான சட்டவரம்பினை மேலும் இரண்டு மேலதிகத்தத்துவங்கள் முழுமையடையச் செய்கின்றன. அதற்கு முதலாவதாக அணுகுமுறை ஒரு முழுமையான பண்பினதாக இருத்தல் வேண்டும். அதாவது அது ஐந்து மூலகங்களையும் உள்ளடக்கியதாக இருத்தல் வேண்டும். அவை முற்றாக வெவ்வேறானவையல்ல. ஆனால் ஒன்றின் மேல் ஒன்றாக அமைந்து பின்னிய செயல்விளைவுகளைக் கொண்டதாயிருக்கும். இரண்டாவது நிரலொலுங்குக்கு உட்பட்டதாயிருப்பதாகும். அதாவது இவற்றில் எதனை முதலாவதாக தெரிந்தெடுத்து இரண்டாவது மூன்றாவது நான்காவது ஐந்தாவதாக மேற்கொள்ளலாம் என்ற நிரலொலுங்கினை தீர்மானித்து கவனமாகச் செயற்படுவதாகும். நடவடிக்கைளில் நிரலொலுங்கினைத் தீர்மானிக்க குறித்த நாட்டினைப் பொறுத்து அங்கே அதன் சமூக - அரசியல் - பொருளாதார சூழலுக்கு ஏற்றவகையில் என்ன சாத்தியமாயிருக்கும் அல்லது விரும்பத்தக்கதாயிருக்கும் என்பவற்றை தீர்மானித்து ஆவன செய்ய முற்படுவதாக இருத்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கூறிய ஐந்து வகையான நடவடிக்கைகளும் இலங்கைக்கு நிலைமாற்றத்திற்கான நீதி தொடர்பில் பயனுள்ளதாக இருக்கும். ஏனைய நாடுகள் இவற்றை நடைமுறைப்படுத்தியமை பற்றி விவாதித்து தீர்மானங்களை செய்து அவை கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் அனுபவங்களை உதாரணமாகக் கெண்டு செயற்படுவது உசிதமானது. நிலைமாற்றத்திற்கான சட்ட வரம்பின் அனைத்து அம்சங்களையும் (உள்ளடக்கங்களையும்) பற்றி இங்கே விவாதிப்பது என்பது இக்கட்டுரையின் நோக்கத்திற்கு அப்பாற்பட்டதென்பதுடன் அவை சில பல்கலைக்கழகங்களில் இரண்டு வருடக்காலப்குதிக்காணதோர் கற்கைநெறி என்பதனையும் புரிந்து கொள்ளல் வேண்டும். எவ்வாறாயினும் சில அடிப்படை கருத்துக்கள் பின்வருவனவற்றிலுள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## உண்மையறிதலைக் கோரல் (Truth Seeking)

உண்மையறிதலை கோரல் என்பது முறைசார்ந்ததும் முறைசாராததானதுமான பொறிமுறைகளை உள்ளடக்கியதாகும். அரசாங்கத்தினால் ஆணை வழங்கப்பட்ட முறைசார்ந்த பொறிமுறைகளுக்கு உண்மையறிதல் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு அல்லது TRC என்பது ஒரு உதாரணமாகும். தென்னாபிரிக்காவில் இவை இடம் பெற்றிருந்த போதிலும் TRC என்பது குற்றமிழைத்தவர்கள், மற்றும் பொதுமன்னிப்பு வழங்குதல் என்பனவற்றை முதன்மையாகக் கொண்டது. மாறாக அதன் TRC முதன்மை ஆர்வம் அல்லது கவனக் குவியம் பாதிக்கப்பட்டவர்கள் மீதே இருக்கும். இயன்றளவில் எந்தளவுக்கு உண்மையினை வெளிக் கொண்டுவர முயற்சிப்பதே TRC யின் முதன்மை இலக்காக இருக்கும். இதனை அடைய அனைத்து பாதிக்கப்பட்டவர்களையும் அவை தொடர்பான சாட்சியங்கள் மூலமாக அனைத்து தரப்பினரது பக்கங்களில் இருந்தும் அவர்களிடமுள்ள தகவல்களை பெற்றுக்கொள்ளவும் அவ்வாறான தரவுகளைப் பயன்படுத்தி சிபாரிசுகளைச் செய்யவும் ஆவன செய்யப்படும். ஏனைய பல சந்தர்ப்பங்களில் பொதுமக்கள் தமது வாக்குமூலங்களை தரககூடிய பொதுவிசாரணைகள் குறிப்பிடத்தக்கவை. தேசிய வேதனை தீர்க்கும் (healing process) செய்முறைகள் இடம் பெற்றுள்ளன. பாதிப்புக்குள்ளாகியவர்களது உண்மையான அனுபவங்களை அவர்களுடைய சொந்த சொற்களில் கேட்கும் போது (எமது உணர்வுநிலை) முரண்பாட்டின் யாதார்த்தங்களையும் அவை தனிப்பட்டவர்கள் மீது ஏற்படுத்திய விளைவுகளையும் பற்றி அறியும் போது அவை எமது உணர்வு நிலையில் பெரும் துயரத்தை ஏற்படுத்துவன. முரண்பாடுகளின் சிக்கலான இயல்புகளினால் இவற்றிற்கு யார் பொறுப்பாயிருந்தனர். என்பதனை இனங்கண்டு இவ்வாறான துயரங்கள் மீளவும் ஏற்படக்கூடாது என்ற தீர்மானத்திற்கே எம்மை இட்டுச்செல்லும். TRC நடைமுறையிலிருக்கும் சட்டத்திலும், அரசாங்கம் மற்றும் பாதுகாப்பு படைகள் பொருத்தும், பாடசாலை பாடத்திட்டங்கள் மற்றும் ஊடக நடைமுறைகள் என்பனவற்றில் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும் என சிபாரிசு செய்யலாம். ஒரு TRC வெற்றிகரமாக அமைய வேண்டுமானால் அதற்காக அதற்கு தெரிவு செய்யப்படும் ஆணையாளர்கள் அரசியல் சார்பற்றதும், உண்மையறிவதற்கும் மனித உரிமைகளுக்காகவும் தம்மை அர்ப்பணித்துக் கொண்ட உயர்பண்புகளைக் கொண்டவர்களாகக் கருதப்படுபவர்களாக இருத்தல் அவசியம். இது சாத்திய மில்லாத போது TRC என்பது காலத்தையும் வளங்களையும் விரயமாக்கும் செய்முறையாகவுமே முடியும். அவ்வமைப்புக்கு சுதந்திரமில்லாதபோது அதனால் அதன் இலக்குகளை அடையமுடியாது.

முறைசாரா உண்மையறியும் பொறிமுறைகள் பல உள்ளன. அவற்றால் வரலாற்றியலாளர்கள், அறிவார்ந்தவர்கள், அரசுசாரா நிறுவனங்கள் மற்றும் பத்திரிக்கையாளர்களிடமிருந்து கருத்து அடித்தளங்களை நிறுவதற்கு பங்களிக்கக்கூடிய அறிக்கைகளை பெற்றுக்கொள்ள முடிவதுடன் அவர்களிடமிருந்து வாய்மூல அனுபவப் பகிர்வுகளையும் பெற்றுக் கொள்ளக் கூடியதாயிருக்கும். சில சந்தர்ப்பங்களில் "மக்கள் ஆணைக்குழுக்களும்" ஸ்தாபிக்கப்பட்டுள்ளன. முறையான TRC ஒன்றினை நிறுவ அரசாங்கம் சம்மதிக்காத சந்தர்ப்பங்களில் இவ்வாறான "மக்கள் ஆணைக்குழு நிறுவப்படுவதும்" உண்டு. இவை ஓரளவுக்கு பயனுள்ள பொறிமுறைகளாயிருந்த போதிலும் அரசாங்கத்தினதும் அரசினதும் ஆதரவுடன் நிறுவப்படுவதொன்றினைப்போல் அதிகாரம் மிக்கதாக இருக்க முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**குற்றவழக்குத் தொடருதல்**

பேரளவிலான குற்றமிழைத்தமைக்கு பொறுப்பானவர்களுக்கு எதிராக வழக்குத் தொடருவது பெரிதும் சிக்கலான நடவடிக்கையாகும். இதில் சர்வதேச மற்றும் தேசிய சட்டங்கள் சம்பந்தப்பட்டிருப்பதுடன் வெற்றிகரமாக நீதியை வழங்குவதற்கான அரசியல் உடன்பாடும் ஆற்றல்களும் தேவைப்படுகின்றன. ஒரு நாட்டில் இடம் பெற்ற குற்றமானது அது அந்நாட்டு முறைகளுக்கு உட்பட்ட வகையில் குற்றமாக உள்ளதா இல்லையா என்பதனை கவனத்திற் கொள்ளாத வகையில் சில குற்றங்கள் சர்வதேச சட்டங்களுக்கு உட்பட்டவகையில் குற்றமாகவே கருதப்படும். நாஜி ஜேர்மனியில் பேரளவிலான கொலைகளும் குற்றங்களும் மில்லியன் கணக்கான அப்பாவிப் பொதுமக்களுக்கு எதிராக இழைக்கப்பட்டடு அவை தேசிய கொள்கைக்கும் சட்டத்திற்கும் உட்பட்டதாகவே செய்யப்பட்டதாக விளக்கி குற்றங்களை நியாயப்படுத்தியமையே இத்தத்துவத்தின் உருவாக்கத்திற்குமான காரணமாகும். உலக சமூகமாக மக்கள் வாழும் இக்காலகட்டத்தில் இவ்வாறான மிலேச்சத்தனங்கள் இனிமேலும் ஏற்றுக்கொள்ளப் படமுடியாது. உள்நாட்டு சட்ட அடிப்படைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு சில நாடுகளின் உள்நாட்டு சட்டங்களுக்கு முரண்பாடானதாக அக்குற்றங்கள் தென்படாத போதிலும் அவை மனித இனத்திற்கு எதிரான குற்றங்களாகவே கருதப்படும்.

“இன அழிப்பு,” யுத்தக்குற்றங்கள் மற்றும் மனித இனத்திற்கு எதிரான குற்றங்கள் என்பன பெரிய குற்ற வகைப்பாட்டினதான சர்வதேச குற்றங்களில் அடங்குகின்றன. குற்றமிழைத்தவர்கள் பொறுப்புக்கூற நிர்ப்பந்திக்கப்படுகையில் சர்வதேச சட்டம் இராணுவ வீரர்கள் தமது கடமையை (தாய்நாட்டிற்காக) செய்வதற்காக தண்டிக்கப்படுவர் என்று கூற ஒருசாரார் முற்படுவர். சர்வதேச மனிதாபிமான சட்டத்திற்கு உட்பட்ட வகையில் யுத்தம் செய்யும் தரப்பினர் ஆயுத போராட்டத்தின் போது செயற்பட்டிருப்பதோ ஒருவருக்கெதிராக ஆயுதப் போராட்டத்தில் ஈடுபடுவதோ சர்வதேச சட்டத்தின் கீழ் குற்றமாகாது.

எவ்வாறாயினும் பாலியல் வன்முறை, சித்திர வதை செய்தல், அல்லது முரண்பாட்டில் முனைந்து பங்கு கொள்ளாத அப்பாவி பொதுமக்களை தாக்குதல் என்பன எப்போதும் குற்றமாகவே கருதப்படும். இவ்வாறான வினாக்களை என்னிடம் கேட்பவர்களிடம் நான் சில கேள்விகளைத் திருப்பி கேட்பேன். அதாவது இராணுவ வீரர்கள் பெண்களை பாலியல் வன்முறைக்கு உட்படுத்தல் ஏற்றுக்கொள்ளப்படலாமா? அவ்வாறான ஒரு நடவடிக்கையை ஒரு சட்டபூர்வமான இராணுவ போராட்ட உபாயத்தின் ஒரு பகுதியாக எப்படி ஏற்றுக்கொள்ள முடியும். பாதிப்புக்குள்ளான பெண் உமது மகளானால் அதனைப்பற்றி உமது கருத்து என்னவாக இருக்கும்? பொதுமக்களை ஆயுததாரிகள் தாக்குவது எப்படிப்பட்ட காரியம். அது ஏற்றுக்கொள்ளக் கூடியதொன்றா? இவ்வாறானா வினாக்களை அடிக்கடி கேட்பதனால் சில முக்கியமான பிரச்சினைகள் தொடர்பில் தெளிவுபெறமுடியும்.

**சர்வதேச குற்றவியல் நீதிமன்றம்**

பேரளவிலான குற்றங்களைச் செய்தவர்களை அவற்றிற்காக பொறுப்புக் கூறுதலைத் தவிர்த்துக் கொள்ள அனுமதிப்பதனால் அவ்வாறான குற்றங்களை மீண்டும் மீண்டும் அவர்கள் செய்ய அனுமதிக்கப்பட்டவர்களாவர். வன்முறைகளின் வட்டச் செய்முறைக்கு எண்ணெய் ஊற்றி வரலாறு முழுவதிலும் பாதிக்கப்பட்டவர்களது துயரங்களை ஆழமாக்குவதாகிவிடும். இவ்வாறான பேரளவிலான (Mass) குற்றங்கள் அதனுடன் தொடர்பான குற்றம் செய்தவர்களை தண்டிக்காது பாதுகாக்கப்படுவதற்கு எதிராகப் போராடுவதற்காக ஒரு நிரந்தர நீதிமன்றத்தினை உருவாக்கும் சில நீதியான சிந்தனை கொண்டவர்களது கனவு சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தினை (ICC) ஸ்தாபித்ததோடு நனவாக்கப்பட்டுள்ளது. நாடுகள் ICC உடன் முற்றாக நாடொன்று சுயவிருப்புடன் தாமாக இணையலாம். ICC ஐ முதன் முதலில் ஆரம்பித்தபோது 123 நாடுகள் அதில் இணைந்து கொண்டன. அது (ICC) தேசிய நீதிமன்றங்களுக்கு மாற்று வழி முறையாக செயற்படபடபோவதில்லை.. அங்கத்துவ நாடுகள் தமது சொந்த தேசிய சட்ட முறையின் கீழ் பேரளவிலான (mass) குற்றங்கள் பற்றி விசாரிக்க விரும்பாவிட்டாலோ அல்லது விசாரிக்க முடியாதிருந்தாலோ மட்டுமே ICC விசாரித்து வழக்குத் தொடர ஆரம்பிக்கும். ஏற்கனவே கூறியது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்று ஒரு நாடு ICC யில் அங்கத்தவராவதற்கு முன்னர் இடம்பெற்ற குற்றங்கள் தொடர்பில் விசாரித்து செயற்படுவதற்கான ஆணையை கொண்டிருக்கவில்லை.

**வழக்குத் தொடருவதற்கான கலப்பானதோர் அணுகுமுறை**

சர்வதேச நீதிபதிகளும் உள்நாட்டு நீதிபதிகளும் ஒரு குழுவாக சர்வதேச மற்றும் உள்ளூர் சட்டங்களை கலந்து பயன்படுத்த ஆணை பெற்று செயற்படும் கலப்பு அல்லது உயரின (Hybrid) வழக்காடுமன்றங்கள் நிலைமாற்றத்திற்கான நீதி பற்றிய விசாரணைகளுக்காக சியாராலியோன், கம்போடியா, திமூர் லெஸ்தே, என்பன உட்பட்ட பல நாடுகளில் நிறுவப்பட்டன. இம்மாதிரியுருவிலான ஏற்பாட்டின் காரணமாக ஏற்படக்கூடிய முக்கிய அனுகூலம் நீதிமன்றத்தின் செய்முறைகள் குறித்த நாட்டிலேயே இடம் பெறுவதால் சம்பந்தப்பட்டவர்களில் பெருமளவிலானோர் பங்கேற்க வாய்ப்புக்கள் அதிகமாக இருக்கும். தேசிய நீதிமன்றங்கள் தேசிய அரசியல் அழுத்தங்களினால் எளிதாகப் பாதிக்கப்படலாம் என்பது இம் முறை எதிர்கொள்ளும் சவாலாகும். அதனால் அதனை சமாளிக்க ஆகக்கூடிய உயர்மட்டத்திலான நீதித்துறைக்கான சுதந்திரம் தேவைப்படும். இதுவும் ஒரு வகையான சவாலாகவே இருக்கும்.

**பாதிக்கப்பட்வர்களுக்கு உதவிகளை வழங்குதல்**

பெருமளவிலான அத்துமீறல்களுக்கு ஆளாகியவர்களுக்கு உதவி செய்வதற்கான கடன்பாட்டினை "இழப்பீடு வழங்குதல்" என்று குறிப்பிடப்படுகின்றது. பாதிக்கப்பட்டவர்களது முறிந்துபோன வாழ்க்கையை திருத்த வேண்டிய தேவையினை பற்றியதென் இப்பதம் விளக்குவதாக உள்ளது. இது எப்போதும் சாத்தியமானதல்ல என்றாலும் கூட ஒவ்வொரு அரசாங்கமும் பாதிக்கப்பட்டவர்களுக்கு பரிகாரங்களை மேற்கொண்டு அவர்களது துயரங்களுக்கு துயர்தணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் கடமையுண்டு. இது தேசிய நல்லிணக்கத்திற்கு அத்தியாவசியமானதும் கூட.

முரண்பாடு முடிவுற்றதன் பின்னர் வெற்றியடைந்த தரப்பு அழிவுக்குள்ளாகி சிதறிப்போய் பாதிக்கப்பட்ட சமூகங்களுக்கு உதவிகளை வழங்குவதற்கு ஆரம்ப கட்டங்களில் சில கஸ்டங்களை / இடையூறுகளை எதிர்நோக்கலாம். ஏனெனில் அம்மக்கள் வெற்றியீட்டியவர்களது எதிரிகளை பிரதிநிதித்துவம் செய்பவர்களாக இருப்பதன் காரணமாகும். முழுமையாக யாதார்த்தம் பற்றி விவரங்கள் வெளிப்பட்டு அறியவரும் போது மிக மோசமாக துன்பத்திற்குள்ளாகி பாதிக்கப்பட்டவர்களில் பெரும்பாலானோர் அப்பாவி பார்வையாளராக இருந்து தமது வாழ்வை கொண்டு நடாத்த முயற்சித்துக்கொண்டும் பெரும்பாலும் வறுமையானவர்களாகவும், யுத்தத்தின் கொடுமைகளினால் பற்றிக் கொள்ளப்பட்டு, அவற்றில் இருந்து தப்பியோட முனைந்தவர்களாவே இருப்பார்கள். இதுவே யதார்த்தமாகும்.

முரண்பாடுகளைத் தொடர்ந்து ஏற்படும் மோசமான ஒரு தவறு யாதெனில் அது நிலைமாற்றத்தற்கான நீதி கூறுகின்ற கவனிப்பு பற்றிய செய்தியினை அதாவது பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவ முன்வருவது பற்றி (உண்மையாக) தெரிவிக்காதிருப்பதாகும். பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி வழங்கியும் அவர்களுடைய உரிமைகளையும் சொத்துக்களையும் மீட்டளிப்பதன் (Restore) வாயிலாகவும் புதிய யாதார்த்தத்தினை உருவாக்கச் செய்யும் தேசிய முயற்சிகளில் பாதிக்கப்பட்ட பிரிவினரை உள்வாங்கச் செய்ய உதவுவதாக இருக்கும். அவ்வாறான ஏற்பாடுகள் சமத்துவமான மதிப்பினையும் உரிமைகளையும் வழங்குவனவாக இருப்பதாக பாதிக்கப்பட்டவர்கள் உணர்கையில் சிறந்த மகிழ்ச்சிகரமான எதிர்காலம் பற்றிய நம்பிக்கை உணர்வுகள் அவர்களில் ஏற்பட முடியும். எதிர்த்து நிற்காது தமது திறமைகளையும் சக்திகளையும் வளர்ச்சிக்காக பங்களிக்க ஊக்கப்படுத்தப்படுவர்.

**தேசிய துயரகற்றும் வட்டச் செய்முறைக்குள் பாதிக்கப்பட்ட சமூகங்களை கொண்டு வருதல்**

தாம் நியாயமற்ற வகையில் நடாத்தப்பட்டதாக அடைந்துள்ள உணர்வுகளே பெரும்பாலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முரண்பாடுகளுக்கான மூலகாரணமாக இருந்து வந்துள்ளன. முரண்பாடுகள் முடிவுற்ற அமைப்பொன்றில் இவ்வுணர்வுகளை மீளவும் உருவாக்கும் வகையில் நடந்து கொள்வது தலை தடுமாற்றமான தவறாகி விடுவதுடன் தர்க்க ரீதியாக பார்க்கும் போது அது பாதிப்புக்குள்ளாகியவர்களிடையே மனச்சோர்வினையும் உளநிறைவில்லாத நிலைமையையும் உருவாக்கி அவற்றால் ஏற்படும் விரக்தி நிலமைகளால் மீண்டும் ஆயுதமேந்தவும் வழிநடத்தப்படலாம். உலகொங்கும் இருந்து பெறப்பட்டுள்ள அனுபவங்களில் இருந்து பலவந்தமான அடக்கு முறை விரக்தியின் தீப்பிழம்புகளை ஏற்படுத்தி அவை ஒரு பரம்பரையில் இருந்து மறு பரம்பரைக்கு எடுத்துச் செல்லப்படும் என்பதனையே எமக்கு கற்பிப்பதாக உள்ளன. அதிகார சமத்துவமின்மையும் கூட இவ்வாறான விரக்தியின் தீப்பிழம்புகளை ஏற்படுத்துவதுடன் அவை கொரில்லா போர்முறையிலான முரண்பாடுகளை கொண்டு வரமுடியும் என்பதுடன் தனிப்பட்டவர்களாலும் பயங்கரவாத தாக்குதல் உட்பட்ட வன்முறைகளைக் கொண்டுவர முடியும். அதேவேளையில் வெளிப்பகுதிகளில் இருந்து வரக்கூடிய ஆதரவினை கட்டுப்படுத்துவதும் முடியாது போகலாம். எனவே தொடர்ந்து இடம் பெற்றவரும் முரண்பாடுகளை முடிவுக்கு கொண்டுவருவதற்கான ஒரே தீர்வு அவர்களை உள்ளூர் நிலவரங்களுக்கு உட்படுத்த (inclusion) ஆவன செய்வதாகும். தோற்கடிக்கப்பட்டவர்கள் மற்றும் அனைத்து குழுக்களையும் கவனிக்கத் தயாராக இருக்கிறோம் என்னும் செய்தியை (message of care) வெளியிட்டு அவர்களை கைநழுவி போய்விடாதவாறு ஈர்த்து புதிய தேசிய ஐக்கியத்தின் ஒரு பகுதியாக அவர்களை மதித்தும் ஆதரவு காட்டியும் நடத்துவோம் என்பதனை உறுதி செய்யும் வகையில் தேசிய நல்லிணக்கச் செய்முறைக்குள் கொண்டுவருவதே தீர்வுக்கு ஏற்ற வழிமுறையாகும்.

சில நாடுகள் உதாரணமாக சிலி போன்றவற்றில் பாதிக்கப்பட்டவர்களுக்காக அரசாங்கம் நிதியுதவி வழங்கியதன் மூலம் வெற்றிகரமான இழப்பீடு வழங்கும் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன. அத்திட்டங்களின் மூலமாக பாதிக்கப்பட்டவர்களுக்கு ஓய்வூதியம், சிறுவர்களுக்கு இலவசமான பாடசாலைக் கட்டணங்கள், கை, கால் போன்றவற்றை இழந்து ஊனப்பட்டவர்களுக்கு செயற்கை உறுப்புக்களை இணைக்க உதவுதல், ஆலோசனை வழங்குதல் உட்பட்ட (Counseling) மருத்துவ உதவிகள் வழங்கப்பட்டன. அத்தோடு மேலதிகமாக கிடைக்கக் கூடியதாயுள்ள சேவைகளையும் உரிமைகளையும் அவர்கள் பெற்றுக் கொள்வதற்காக உதவுவதிலும் கவனம் செலுத்த முடியும்.

**நிறுவனங்களுக்கான சீர்திருத்தம்**

நிலைமாற்றத்திற்கான மாதிரிருவின் நான்காவது "விரல்" எதிர் வரும் காலங்களில் பேரளவு அத்துமீறல்களை தவிர்ப்பதற்கு தேவையான முக்கிய கருவியாக நிறுவனங்களை சீர் திருத்துவதற்கும். அவை (அத்துமீறல்கள்) மீள ஏற்படுவதனை தடைசெய்யக் கூடியதுமான ஏனைய ஏற்பாடுகளை மேற்கொள்வதாகும். குறித்த சூழலில் எதிர்நோக்கப்படும் சவால்களுக்கு ஏற்ப சட்ட முறைமைக்கான பங்களிப்பு மற்றும் சீர்திருத்தம், நீதிமன்றங்களினதும் நீதித்துறையினதும் சுதந்திரம், ஊடகங்களின் வகிபாகம் (Role) பாடசாலைகளில் பயன்படுத்தப்படும் பாடதிட்டங்கள் போன்றவற்றில் சீர்திருத்தங்களை மேற்கொள்வது தொடர்பிலும் ஆவன செய்தல் வேண்டும். வழங்கப்பட்ட அனைத்து தகவல்களையும் கவனத்திற் கொண்ட வகையில் நிலைமாற்றத்திற்கான நீதிச் செய்முறை (TRC) விபரமான ஒரு தொகை சிபாரிசுகளை சீர்திருத்தம் தொடர்பாக தயாரிக்கும்.

**நல்லிணக்கம்**

இறுதியான விரல் அல்லது அடிப்படையான அல்லது நிலைமாற்ற நீதிக்கான மாதிரியுருவின் பெருவிரல் என்பது பெரிதும் பயன்படக்கூடியதான நல்லிணக்கத்தை கொண்டுவருவதாகும். என நான் நம்புகிறேன். குற்றங்கள் இழைத்தவர்கள் தாம் செய்த குற்றங்களுக்கு பொறுப்புக் கூறாது தப்பிக்க முயற்சி செய்யும் செய்முறைகளின் போது நல்லிணக்கம் என்னும் பதத்தின் கருத்துக்களை பல சந்தர்ப்பங்களிலும் திரித்து அதன் உள்ளார்ந்த சிறப்பினை சிதைக்க முயற்சிப்பது துரதிஸ்டவசமானதாகும். அவர்களைப் பொறுத்தமட்டில் நல்லிணக்கம் என்பது அவர்கள் செய்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குற்றங்களுக்கு பொதுமன்னிப்பளித்தல் என்பதாகும். நிலைமாற்றத்திற்கான நீதியின் ஒரு பகுதியாக பொதுமன்னிப்பு வழங்குதல் பற்றி விவாதிக்கும் போது பொதுமன்னிப்பின் எதிர்காலம் தொடர்பிலான முழு தாக்கங்கள் அல்லது விளைவுகள் பற்றியும் கவனமாக பரிசீலனை செய்ய வேண்டும். அதனோடு நல்லிணக்கம் மீது ஏற்படக்கூடிய பாதிப்புக்கள் மற்றும் சட்டத்தின் வாயிலான ஆட்சியை ஸ்தாபித்தல், எதிர்வரும் காலத்தில் அனைவரும் சமத்துவமான முறையில் பொறுப்புக் கூறுதல் தொடர்பில் ஏதேனும் எதிர்மறை விளைவுகளை கொண்டுவரலாம் என்பது பற்றி கவனமாக பரிசீலனை செய்வதில் தவறிவிடக்கூடாது.

நிலைமாற்றத்திற்கான நீதி மாதிரியுருவின் ஐந்து விரல்கள் ஒவ்வொன்றினைப்பற்றியும் சுருக்கமாக விவாதித்திருக்கின்றோம். அவற்றை முழுமையாகவும் பொருத்தமான ஒழுங்கு நிரலின் படியும் பிரயோகிப்பதனால் தேசிய நல்லிணக்கத்திற்கு பங்காற்ற முடியும் பேரளவில் மனித உரிமை அத்துமீறல்களினால் சமூகத்தின் மீது ஏற்பட்ட காயங்களுக்கு நிலைமாற்றத்திற்கான நீதி ஒரு முழு சிகிச்சையாகிவிடாது. ஆனாலும் சமூகங்கள் எவ்வாறு தமது காயங்களை ஆற்றிக் கொள்ளும் என்பதற்கான வரைச்சட்டத்தை வழங்க இம் மாதிரியுரு (Model) உதவியாக இருக்கமுடியும். அத்தோடு காலத்தின் போக்கோடுதான் நிறைவுற முடியும் என்னும் செய்முறையினூடாக (ஒரு சில) தலைமுறைகளில் ஏற்படக்கூடிய காயமாற்றலுக்கான சமாதான சூழலை இதனால் உருவாக்க முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையேடு தயாரிப்பு

asia justice and rights

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org